798/4

# தமிழ் மொழித் தெளிவு



## முதற் புத்தகம்

பதிப்பாசிரியர்:

வித்துவான். மே. வி. வேணுகோபாலப் பிள்ளை

SCANNED

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
DEC
MADRAS



நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
[illegible] கொண்டி செட்டித் தெரு, சென்னை—1

SCANNED

TB
031(6)
N49
13558

விலை அணு 10

## நன்றியுரை

இப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள சில கட்டுரைகளையும் பாடல்களையும் பிரசுரிக்க அன்புடன் அனுமதி அளித்த கீழ்க்குறிக்கப்பட்டுள்ள அறிஞர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் எங்கள் நன்றியை உரிமைப்படுத்துகிறோம்.

1. தமிழ் நாடு—திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்
2. கொலை மறுத்தல்—திரு. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்
3. இராமகிருஷ்ணர்—வித்துவான் அன்பு கணபதி அவர்கள்
4. திருக்கயிலாயகிரி யாத்திரை—ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை
5. வீர சிவாஜி —திரு. M S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்
6. மகாத்துமா காந்தியடிகளின் சுய சரிதம்—திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள்
7. கிராமச் சிறு கைத்தொழில்கள் —திரு. ஏ. எஸ். முத்தையா அவர்கள்
8. கடிதம்—ஸ்ரீ இராம கிருஷ்ண மடம், சென்னை

பிரசுரகர்த்தர்கள்.

Printed at the Rajan Electric Press, Madras-1

# தமிழ் மொழித் தெளிவு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 DEC 1949
MADRAS

பதிப்பாசிரியர்:
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

Approved by the Text-Book Comittee, Madras, for class use: Vide pages 6 and 14 respectively of Parts I & II of supplement to Part I-B of Fort St. George Gazette. dated 1 st May 1945.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
6. கொண்டி செட்டித் தெரு, சென்னை — 1.
1949

பதிப்புரிமை] [விலை அணா 10

முதற்பதிப்பு 1944
இரண்டாம் பதிப்பு 1945
மூன்றும் பதிப்பு 1946
நான்காம் பதிப்பு 1947
ஐந்தாம் பதிப்பு ஜூன், நவம்பர், டிசம்பர். 1948
ஆறும் பதிப்பு, ஏழாம் பதிப்பு 1949

# முகவுரை

'தமிழ் மொழித் தெளிவு' என்னும் பெயரிய தமிழ்ப் பாட நூல் வரிசையில் இஃது ஆறுவதாகும். 1939-ஆம் ஆண்டில் சென்னைக் கல்வி இலாக்கா அதிகாரிகளால் வெளியிடப் பெற்றுள்ள பாடத்திட்டத்திற்கிணங்க இஃது அமைக்கப் பெற்றுள்ளது.

தமிழ் கற்கும் மாணவர்கள் தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சியும், தெளிவும், பெறுதற்கான பயிற்சி அளிப்பதே மொழிப் போதனையின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்நூல் வரிசை ஆக்கப்பெற்றுள்ளது.

இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் முதலிய பல்வகைப் பொருள் பற்றிய பாடங்கள் இதன்கண் இடம் பெற்றிருத்தலால் மாணவ மாணவிகட்கு மொழிப் பயிற்சியோடு விஷய ஞானமும் விரிவடைவதற்கு இஃது உறு துணையாம் என்பது ஒருதலை.

பாடத்திட்டத்திற் கண்டவாறு இதன்கண் வகுப்புக்கு இன்றியமையாத இலக்கண பாடங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் தரப்பட்டுள்ள மொழிப் பயிற்சியும் இலக்கணப் பயிற்சியும் ஆசிரியர்கள் பின்னும் அத்தகைய பயிற்சிகளை ஆக்கி அளித்தற்கு மாதிரிகளாகத் தரப்பட்டவையேயாம்.

இந்நூல் வரிசை அச்சாகுங் காலத்து உடனிருந்து உதவிய அன்பர் திரு. T.S. உமாபதி, M.A.L.T., அவர்களுக்கும், பதிப்பாசிரியராகிய வித்துவான் மே. வீ. வேணுகோபலப் பிள்ளையவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக!

இந்நூல் வரிசையைக் கல்வி இலாக்கா அதிகாரிகளும் பாடசாலைத் தலைவர்களும் தமிழாசிரியர்களும் மாணவ மாணவிகளுக்குப் பயன் படுமாறு செய்து எம்மை இத் துறையில் தொண்டாற்ற ஊக்கியருள வேண்டுகிறோம்.

பிரசுரகர்த்தர்.

135518

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்த் தாய் | ... | 1 |
| | கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் | | |
| 2. | தமிழகம் | .... | 1 |
| 3. | ஆளுக்கேற்ற மதிப்பு | .... | 6 |
| | டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் | | |
| 4. | சிலப்பதிகாரம் | ... | 10 |
| 5. | நிலா | ... | 17 |
| | திரு. பாரதிதாசர் அவர்கள் | | |
| 6. | இபுராஹிம் நபி | ... | 18 |
| 7. | அக்கினி குல இளைஞன் | ... | 20 |
| | திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் | | |
| 8. | உழவுத் தொழிலின் உயர்வு | .... | 23 |
| 9. | பிள்ளை ஒழுக்கம் | ... | 26 |
| | யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியாரவர்கள் | | |
| 10. | உத்தம ஊழியம் | ... | 28 |
| 11. | மேட்டூர் அணை | ... | 30 |
| 12. | கவிச் சித்திரம் | ... | 34 |
| | இளங்கோவடிகள் | | |
| 13. | ஸ்தல சுய ஆட்சி | ... | 35 |
| 14. | விசித்திர நீதி | ... | 38 |
| 15 | தரங்கம்பாடி | .... | 40 |
| | திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் | | |
| 16. | மலையும் அணிலும் | ... | 45 |
| | திரு. தேசிக விநயகம் பிள்ளை | | |
| 17. | உண்மை ஒரு போதும் மறையாது | ... | 47 |
| 18. | மொஹெஞ்சோ-தாரோ | ... | 49 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 19. | குசேலர் கண்ணபிரானைக் காணல்—(நாடகம்) | 53 |
| 20. | தேகப் பயிற்சி ... | 57 |
| | யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியாரவர்கள் | |
| 21. | முதல் உதவி ... | 58 |
| 22. | 'வரப்புயர!' ... | 62 |
| 23. | கடிதம் ... | 63 |
| | ஸ்ரீ மத் சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகள் | |
| 24. | குசேலர் கண்ணபிரானைக் காணல்—(நாடகம்) | 65 |
| 25. | இரகுராமரும், பரசுராமரும் | 72 |
| | சீகாழி அருணாசலக் கவிராயரவர்கள் | |
| 26. | மோட்டார் வண்டிகள் ... | 73 |
| 27. | ஆஸ்திரேலியாவின் அற்புதங்கள் ... | 77 |
| 28. | பெரியதும் சிறியதும் .... | 81 |


## செய்யுட் பாடம்

I. அறவுரை

1. நீதி வெண்பா .... 86
2. நன்னெறி .... 86
3. இன்னா நாற்பது ... 86

II. சதகத் திரட்டு

1. குமரேச சதகம் .... 89
2. அறப்பளீசுர சதகம் .... 90
3. திருவேங்கட சதகம் .... 90

III. கதைப் பகுதி

1. தகாவரம் பெற்றுச்சாலியன் இறந்த கதை 91
2. சிங்கத்தை முயல் வென்ற கதை .... 92
3. கிருஷ்ணார்ச்சுன யுத்தம் .... 93

IV. தனிப் பாடல்கள் .... 95

# தமிழ் மொழித் தெளிவு

## 1. தமிழ்த் தாய்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
　　மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
　　தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வீ!
கானார்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
　　கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவீ!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
　　அம்மே! நின் சீர்ப்பெருமை அறைதலியார்க் கெளிதே!

—கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்

## 2. தமிழகம்

1. பண்டு முதல் இன்றளவும் தமிழ்மொழி வழங்கி வந்ததும், வழங்கி வருவதும் ஆகிய நிலப் பரப்புத் தமிழகம், தமிழ் நாடு என்னும் பெயர்களால் வழங்கிவருகிறது. தமிழ் மொழியில் வழங்கும் நூல்களுள் மிக்க பழமை வாய்ந்த தொல்காப்பியத்தில், 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று தமிழகத்தின் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது.

"நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
　　மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு"

என்று தமிழ் நாட்டின் எல்லையைக் குறிப்பிட்டுள்ளார் பாரதியார்.

2. ஆயினும், சரித்திர ஆராய்ச்சியாளர்களும், பூமி சாஸ்திர நிபுணர்களும் தமிழகம் முன் ஒருகாலத்தில் கிழக்கு இந்தியத் தீவுகள், பர்மா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது




என்று கூறுகின்றார்கள்; அவற்றிற்குத் தக்க சான்றுகளுங் காட்டி வருகின்றார்கள்.

3. ஆழியில் அமிழ்ந்து போன பகுதி ஒழிய, எஞ்சி நின்ற தென்னிந்தியாவே பின்னர்த் 'தமிழகம்' என்று திகழலாயிற்று. இந்நாடு இயற்கை வளங்கள் நிறைந்தது. இதன்கண் விளங்கும் உயர்ந்த மலைகளும், பசும்புற்றரை-

களும் இந்நாட்டிற்கு அழகை அளிக்கின்றன. அன்றியும், இதன் இடையே பாயும் ஆறுகள் இதனை வளமுறச் செய்கின்றன.

"காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி — என
மேவிய யாறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு."

என்று புகழ்ந்து கூறியுள்ளார் பாரதியார். இவ்வாறு வளங்கள் நிறைந்த நம் தமிழ்நாடு, ஆதியில் சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவையன்றி, அருவாநாடு, மலாடு, புனல்நாடு முதலிய பல சிறு நாடுகளும் இதன்கண் அடங்கியிருந்தன.

4. இவற்றுள் தமிழகத்தின் மேலைக் கரையோரத்தில் இருந்த மலைநாடே சேரநாடு எனப்பட்டது. திருவாங்கூர், கொச்சி, தென் கன்னடம், கோயமுத்தூர், சேலம் என இக்காலத்தில் வழங்கிவரும் ஜில்லாக்கள் அதனுள் அடங்கியிருந்தன. சேரநாடு மலைகள் செறிந்து, காடுகள் நிறைந்தது. பெரியாறு, பொருநை என்னும் இரண்டு யாறுகளும் பாய்ந்து அதை வளப்படுத்துகின்றன. அந்நாட்டுக் காடுகளில் யானைகள் அதிகம். ஆதலால், 'வேழமுடைத்து மலைநாடு,' என்னும் தொடர் வழங்குவதாயிற்று. மலைபடு பொருள்களாகிய தினை, சாமை, தேன், அகில், சந்தனம் முதலிய பொருள்கள் அங்குக் கிடைக்கின்றன.

5. சேர நாட்டை ஆண்டவர் 'சேர மன்னர்' எனப்பட்டார். அவருடைய தலைநகர் வஞ்சி நகர் என்பது. தொண்டி, முசிரி என்பவை சேர நாட்டின் சிறந்த துறைமுகங்களாம். இவற்றின் மூலம் அந்நாட்டார் அயல் நாட்டாருடன் வாணிகம் நடத்தி வந்தனர். சேரநாட்டையாண்ட மன்னர்களுள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், சேரன் செங்குட்டுவன் என்பவர் புகழ்மிகுந்தவர். சேரமன்னர் தமிழ் மொழியில் விளங்கும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், செங்குட்டுவன் தம்பியாரான இளங்கோவடிகள் என்பவரால் இயற்றப்பட்டது.

6. இன்று தஞ்சை, திருச்சி என்று கூறப்படும் ஜில்லாக்கள் அடங்கிய நிலப்பகுதியே அன்று சோழநாடு எனப்பட்டது. அது வளம் மிக்க வயல்கள் நிறைந்தது. அதிற்பாயும் காவிரியாறே அதன் வளத்திற்குக் காரணமாம். 'காவேரியால் விளை சோழ மண்டலம்' என்று திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் அந்நாட்டைப் புகழ்ந்துள்ளார். 'சோழவளநாடு சோறுடைத்து', 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்னும் தொடர்கள் அதன் பெருமையைக் குறிப்பன.

7. அந்நாட்டை யாண்டவர் சோழ மன்னர் எனப்பட்டனர். ஆதியில் உறையூர் என்பது சோழ நாட்டின் தலைநகரமாய் விளங்கிற்று. பிறகு காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், திருவாரூர் ஆகியவை சிற்சிலகாலங்களில் சோழநாட்டின் தலை நகரங்களாய் விளங்கின. காவிரிப்பூம்பட்டினம் அதன் சிறந்த துறைமுகமாய் விளங்கியது.

8. கரிகாற்சோழர், இராசராச சோழர், இராஜேந்திர சோழர் என்பவர் சிறந்த சோழ மன்னர்களுட் சிலர். சோழ மன்னர்களும் தமிழ் மொழியின்மீது அன்புகொண்டு, தமிழ்ப்புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தார்கள். குலோத்துங்க சோழர் என்னும் அரசர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், அவ்வையார் முதலிய புலவர்களை ஆதரித்தார் என்பதை நாம் அறிவோம்.

9. பாண்டி நாடு என்பது இப்போதுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களைக் கொண்ட நிலப்பரப்பே யாகும். பாண்டி நாடு பண்டைக் காலத்தில் இன்றுள்ள அளவுக்குள் அடங்கி இருக்கவில்லை. அது தெற்கே வெகுதூரம் இந்து மகா சமுத்திரத்தில் பரவியிருந்தது. அப்போது அதன் தலைநகரம் தென் மதுரை. அதனைக் கடல் கொண்டமையால், கபாடபுரம் என்பது தலைநகரமாயிற்று. அதுவும் ஆழியில் அமிழ்ந்தது. ஆதலால் இன்று வைகையாற்றின் கரையில் உள்ள மதுரையம்பதி அதன் தலைநகரம் ஆயிற்று. வைகை, தாமிரவர்ணி என்னும்

ஆறுகள் பாண்டி நாட்டை வளப்படுத்துவன. அந்நாட்டின் கடற்கரையில் முத்து மிகுதியாகக் கிடைத்தமையின், 'பூமியர்கோன் தென்னாடு முத்துடைத்து,' என்னும் தொடர் எழுந்தது. முத்தெடுக்குந் தொழிலோடு சங்கறுக்கும் தொழிலும் அங்கு நடைபெற்று வந்தது. கொற்கை என்பது பாண்டி நாட்டின் துறைமுகப்பட்டினமாய் விளங்கியது. முத்து, சந்தனம் முதலிய பொருள்கள் அத்துறைமுகத்தி-லிருந்து அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

10. பாண்டிய மன்னர் பலரும் தமிழைப் போற்றி வந்தனர். தமிழ்ச் சங்கங்களும் தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி அவர்களால் நிறுவப்பட்டவைகளே. தமிழில் வழங்கும் பண்டைய நூல்கள், இடைச்சங்க காலத்திலும் கடைச் சங்க காலத்திலும் தோன்றியவைகளே.

11. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த தமிழ்நாடு இன்று உள்ள நிலையைக் கருதிப் பாருங்கள்! சேர சோழ பாண்டி நாடுகள் என்னும் பெயர்கள் மறைந்தன. அந்நாட்டரசர்களால் போற்றப்பட்டு வந்த நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியும் தாழ்நிலையில் உள்ளது. இதற்குக் காரணம் தமிழர்களாகிய நாம் அதைப் புறக்கணிப்பதேயாம். அயல் நாட்டு மொழிகளில் ஆர்வங்கொண்டு நாம் அல்லற் படுகின்றோம்; தாய்மொழியை இகழ்ந்து தள்ளுகின்றோம். இனியேனும் நாம் நமது தமிழ் மொழியை நன்கு பயின்று, தமிழன்னைக்குத் தொண்டாற்ற முற்பட்டு, அதற்கியையத் தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தக்க முயற்சி-கள் என்பவை யாவை என்பதைக் கீழ் வரும் பாரதியார் பாடல் விளக்கும்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

### பயிற்சி

*I.* விடை கூறுக :—

1. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
2. பண்டு தமிழகம் தன்னகத்தே கொண்டிருந்த பகுதிகள் எவை? அவற்றிற்கு நேர்ந்தது யாது?
3. தமிழ் நாட்டின் பண்டைப் பெரும் பிரிவுகள் யாவை?
4. சேர நாட்டின் சிறப்பியல்புகள் யாவை?
5. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
6. சோழ நாட்டின் பெருமையைக் குறிக்கும் தொடர்கள் இரண்டு கூறுக.
7. பாண்டி நாட்டின் சிறப்பியல்புகள் யாவை?
8. தமிழுக்கு நாம் எவ்வாறு தொண்டாற்றக் கூடும்?

*II.* எதிர்ப்பதம் கூறுக:

பண்டு, பழமை, அமிழ்ந்து, நிறைந்த, புகழ்ச்சி.

*III.* கீழ்வரும் சொற்களையும் தொடர்களையும் வாக்கியங்களில் அமைத்து எழுதுக :—

நிபுணர், சான்றுகள், எஞ்சி, நின்ற, திகழ்கின்ற, வாணிகம், பேராதரவு, தாழ்நிலை, புறக்கணித்தல்.

### இலக்கணம்

எழுத்து : மொழிக்கு முதற்காரணமாயுள்ள ஒலியே எழுத்தாம். ஒலி வடிவம், வரி வடிவம் என இரண்டு வடிவங்கள் அதற்கு உண்டு.

எழுத்துக்கள் முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும். உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் முதலெழுத்துக்களாம். உயிர்மெய், ஆய்தம், சுட்டு, வினா முதலிய எழுத்துக்கள் சார்பெழுத்துக்களாம்

## 3. ஆளுக்கேற்ற மதிப்பு

[டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்]

1. புதுச்சேரியில் பலவருஷங்களுக்குமுன் ஒரு பிராமணர் இருந்துவந்தார். அவர்மிகவும் வறியவர். தம்வாழ்க்கையில் வைதிக நெறி தவறாமல் அவர் ஒழுகி வந்தார். இறைவனிடத்தில்உறுதியான அன்புடையவராதலின், வறுமையின் துன்பம் அவர்உள்ளத்தைமெலியச்செய்யவில்லை. பிறரிடம்

சென்று யாசகம் செய்து வாழும் துணிவு அவர்பால் இல்லை. ஆயினும், அவருடைய தூய்மையான ஒழுக்கத்தையும், அன்பு நிலையையும் அறிந்த சில பிரபுக்கள் அவர்க்கு வேண்டியவற்றைக் குறிப்பாக அறிந்து உதவி புரிந்துவந்தார்கள். அதனால், அவ்வந்தணருக்குக் குடும்பக் கவலை உண்டாகவில்லை. அவர்களுள் ஒருவர் அவ்வந்தணரைத் தெய்வம் போல மதித்து வந்தார். 'நீங்கள் எந்தச் சமயத்தில் எது வேண்டுமாயினும் கேட்கலாம். அப்பொருளைத் தருவதற்கு நான் முன் வருவேன்,' என்று சொல்லியிருந்தார். அவ்வந்தணரும் தமக்கு ஏதேனும் வேண்டுமாயின், வேறு யாரிடத்தும் கூருமல், அச்செல்வரிடத்திலே சென்று சொல்லி வாங்கிக்கொள்வார்.

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்ருதார் மாட்டு."

என்பது பொய்யா மொழியன்ரே ?

2. அந்தணருக்கு ஒரு புதல்வன் இருந்தான். அவனுக்கு உபநயனம் செய்யும் காலம் வந்தது. அது செய்வதாயின், தக்க பொருள் வேண்டும். அந்தணரோ, பொருளில்லாதவர். ஆயினும், தமக்குக் கற்பகம்போல இருக்கும் பிரபுவினிடம் கூறி உபநயனத்தை நடத்தி முடிக்கலாமென்னும் தைரியம் அவருக்கு இருந்தது.

3. ஒருநாள் இவ்விஷயத்தை அவ்வுபகாரியிடம் சொல்ல எண்ணி வேதியர் புறப்பட்டார்; அப்பிரபுவின் வீட்டுக்கு அருகே போய்ச்சேர்ந்தார்; அப்பொழுதுதான் அச் செல்வர் தம்முடைய இரட்டைக் குதிரை வண்டியில் ஏறி வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தார். வண்டி வருவதை அந்தணர் பார்த்தார்; 'இது சரியான சமயமன்று,' என்றெண்ணி, வழியை விட்டு விலகி நின்ருர். அவர் நிற்பதைக் கண்ட கனவான், சட்டென்று வண்டியை நிறுத்தச் செய்து அவரைப் பார்த்து, 'ஏன் இங்கே நிற்கின்றீர்கள்? எங்கே போக வேண்டு?' என்று கேட்டார். அவர் போகும் இடம் தெரிந்தால், தாமே அவரை அங்கே கொண்டு விடலாமென்பது அவ்வுபகாரியின் கருத்து. அந்தணர் 'உங்களைத்தேடித்தான் வந்தேன்; அப்பால் ஓய்வான

காலத்தில் வந்து விஷயத்தைச் சொல்லிக்கொள்ளு-கிறேன்' என்றார்.

பிரபு: அப்பால் என்ன? இப்பொழுதே சொல்லுங்கள். எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன்.

அந்தணர்: என்னுடைய குமாரனுக்கு உபநயனம் செய்ய வேண்டும். அதன்பொருட்டே உங்களைப் பார்த்துப் போக வந்தேன்.

பிரபு: இதுதானா பெரிது! அதற்கு எவ்வளவு செல-வாகும்.

அந்தணர்: நூறு ரூபாய் செலவாகும்.

பிரபு: இதோ இந்த வண்டியிலே ஏறுங்கள்; வழியி-லேயே வாங்கித் தருகிறேன்.

அந்தணர் பிரபுவோடு வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டி புறப்பட்டது.

அந்தணர்: நீங்கள் எனக்கு அப்போதப்போது செய்து வரும் உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! நூறு ரூபாயைச் சம்பாதிப்பதற்கு என்னால் இயலவில்லை. யாரிடமாவது கடனாக வாங்கலாமென்றாலோ, என்னை நம்பி யார் கொடுப்பார்? என்னிடம் என்ன சொத்து இருக்கிறது? என் காதில் இருக்கிற இந்தக் கால் ரூபாய்க் கடுக்கனைத் தவிர, என்னிடம் வேறொன்றும் இல்லை. வேறு வழியில்லையென்று துணிந்து உங்களை நாடி வந்தேன்.

பிரபு: அது கிடக்கட்டும். உங்கள் கடுக்கன் கால் ரூபாயா பெறும்? இப்போது ஒரு வேடிக்கை செய்கிறேன்; பாருங்கள் உங்கள் கடுக்கனைக்கொண்டே நூறு ரூபாய் வாங்கித் தருகிறேன்.

4. பிரபு தம்முடைய காதிலிருந்த வைரக் கடுக்கனைக் கழற்றி வைத்துக்கொண்டார்; பிராமணருடைய கடுக்கனைக் கழற்றித் தரச்செய்து, அவற்றைத் தம் காதில் அணிந்து-கொண்டார்; பிறகு வண்டியை நேரே காசுக் கடைக்கு ஓட்டச் செய்தார்.

5. வண்டி காசுக் கடைவாயிலில் வந்து நின்றது. பிரபு அதிலிருந்தபடியே கடைக்காரரை அழைத்துத் தம்

காதிலிருந்த பிராமணருடைய கடுக்கனைக் கழற்றிக் கொடுத்து, 'இதோ இவற்றை வைத்துக்கொண்டு நூறு ரூபாய் தாரும்' என்ருர். கடைக்காரர் பேசாமல் அவற்றை வாங்கிக்கொண்டு நூறு ரூபாய் தந்தார். பிரபு வண்டியை விடச் செய்தார். வண்டி சிறிது தூரம் சென்றது.

பிரபு: பார்த்தீர்களா உலகத்தை! உங்கள் காதில் இருந்த கால் ரூபாய்க் கடுக்கன்களே நூறு ரூபாய் வாங்கித் தந்தன. இருநூறு கேட்டாலும் அவன் கொடுத்திருப்பான். ஆளுக்கேற்றபடி ஒரு பொருளுக்கு மதிப்பு உண்டாகிறது.

அந்தணர்: இவ்வளவு அவசரமாகக் கொடுக்க வேண்டியதில்லை.

6. பிரபு, 'தருமத்தை நினைத்தபொழுதே செய்துவிட வேண்டும். மனம் எப்பொழுதும் ஒரே நிலையில் இராது. அதனல் இப்படிச் செய்தேன்,' என்று சொல்லி அந்த நூறு ரூபாயையும் அந்தணர் கையில் கொடுத்தனுப்பினர். சிறிதேனும் மதிப்பற்ற தம் கடுக்கன் நூறு ரூபாயைத் தரச்செய்த உலக இயல்பை வியந்துகொண்டே அந்தணர் தம் வீடு சென்ருர்.

7. பிரபு தாம் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று, நினைத்த காரியத்தை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்; வந்து, நூறு ரூபாயைக் காசுக் கடைக்-காரருக்கு அனுப்பிவிட்டு, அந்தணருடைய கடுக்கனைத் திரும்ப வருவித்தார்; பிறகு அந்தணரைக் கண்டு, 'உங்கள் கடுக்கன் என் காதில் அணிந்து கொண்டனவாதலின், மீண்டும் நீங்கள் அணிவது தக்கதன்று. அன்றியும், நான் கொடுத்த நூறு ரூபாய்க்கு அவையல்லவா ஈடு? அவற்றை நான் திரும்பித் தரமாட்டேன்,' என்று சமத்காரமாகக் கூறிவிட்டு அவற்றிற்குப் பிரதியாக ஒரு ஜோடிப் புதிய கடுக்கனை வருவித்து அவர் காதில் அணிவித்தார். மறை-யவர் அப்பிரபுவின் வண்மை விளையாட்டையும், இவ்வள-வையும் செய்விக்கும் இறைவனது அருள் விளையாட்டையும் எண்ணியெண்ணி மனமுருகினர்.

பயிற்சி

*I.* விடை கூறுக :—

1. அந்தணர் பிரபுவிடம் விரும்பியது யாது? ஏன்?
2. பிரபு நூறு ரூபாய் பெற்றது எங்ஙனம்?
3. இப்பாடத்தில் அறியப்படும் உலக இயல்பு யாது?

*II.* எதிர்ப்பதம் கூறுக :—

பல, துன்பம், உபகாரம்.

*III.* கீழ் வரும் சொற்களையும் தொடர்களையும் வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

வறியவன், உபகாரி, கைம்மாறு, நாடி வந்தேன், வியந்து.

*IV.* கீழ் வருவனவற்றின் பொருளை எழுதி, வாக்கியங்களில் அமைக்க :—

இறை, இரை; இறத்தல், இரத்தல்.

*V.* இப்பாடத்தில் மகன் என்னும் பொருளிலும், அந்தணர் என்னும் பொருளிலும் வந்துள்ள வேறு சொற்களைக் கூறுக.



## 4. சிலப்பதிகாரம்

1. சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டல கேசி என்பன செந்தமிழ் மொழியில் ஐம்பெருங்காப்பியங்கள் என்று வழங்கப் பெறுவன. அவற்றுள் சிலப்பதிகாரம் செங்குட்டுவன் என்னும் சேர மன்னனுடைய தம்பியாரான இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது. அதன் கதைச் சுருக்கம் வருமாறு:—

2. பண்டு சோழ வளநாட்டின் தலைநகராய் விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் மாநாய்கன் என்றொரு வணிகன் இருந்தான். அவனுக்குக் குணமும் அழகும் நிறைந்த ஒரு மகள் இருந்தாள். கண்ணகி என்பது அவள் பெயர்.

3. புகார் என வழங்கும் அக்காவிரிப்பூம்பட்டினத்தில் மாசாத்துவான் என்னும் மற்றொரு வணிகன் இருந்தான். பெருநிதி படைத்து வாழ்ந்துவந்த அவனுக்குக் கோவலன் என்றொரு மகன் இருந்தான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்து பதினாறாட்டைப் பிராயத்தை அடைந்தபோது பன்னிரண்டு வயதாயிருந்த கண்ணகி அவனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டாள்.

4. அம்மணமக்களின் பெற்றோர், அவர்கள் தனியே இருந்து இல்லறம் நடத்த ஏற்பாடு செய்தனர். கோவலனும் கண்ணகியும் இணை பிரியாது உயிரும் உடலும்போல அன்பு வாழ்க்கை நடத்திவந்தனர். சில ஆண்டுகள் இவ்வாறு கழிந்தன.

5. புகார் நகரத்தில் ஆடல் பாடல்களில் வல்ல அழகு நிறைந்த மாதவி என்னும் நாடகக் கணிகை ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் பயின்று வந்த நாட்டியக்கலை அரங்கேற்றத்திற்குக் கோவலன் சென்றான்; அவள் அழகைக் கண்டு மயங்கி, அவள் வீட்டையடைந்து, அவளோடு வாழ்ந்து வந்தான். அவன் பெற்றிருந்த செல்வம் அனைத்தும் செலவழிந்தது. அதற்குள் பல ஆண்டுகள் கழிந்தன.

6. இவர்கள் இவ்வாறிருக்க, காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றது. நகர மாந்தர் ஆடை அணிகலன்களால் தங்களை அலங்கரித்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றனர். கோவலனும் மாதவியுடன் கடற்கரையை அடைந்து ஆடல் பாடலில் காலங் கழித்தான். ஆனால், ஊழ்வலியால் மாதவிக்கும் அவள் மணாளனுக்கும் சிறிது மன வருத்தம் ஏற்பட்டது. உடனே கோவலன் அவளை விட்டுப் பிரிந்து, கண்ணகிபால் சென்றான்; தான் கண்ணகிக்கு இழைத்த தீங்குபற்றிப் பெரிதும் வருந்தினன். மாதவிக்கு அளிக்கப் பொருளில்லாமையின்

அங்ஙனம் வருந்தினன் என்று எண்ணிய கண்ணகி, 'ஆருயிர்த்தலைவரே, என்பால் இரண்டு சிலம்புகள் உள; அவற்றைப் பெற்று உங்கள் துன்பத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்,' என்றாள்.

7. அது கேட்ட கோவலன் கண்ணகியின் கற்பின் திறத்தை வியந்தான். 'யான் இனி மாதவிபால் செல்லேன். நமது செல்வமனைத்தும் அழிந்தது. வாழ்ந்திருந்த ஊரில் தாழ்ந்திருத்தல் தகாது. ஆகவே மதுரைமா நகரமடைந்து உன் காற்சிலம்பு ஒன்றை விற்று, வாணிகம் நடத்தி இழந்த செல்வத்தை மீட்டும் ஈட்ட நிச்சயித்துள்ளேன். என்னுடன் வருக; என்றான். கற்பிற் சிறந்த கண்ணகி, மறு மற்றங்கூறாது புறப்பட்டாள். இருவரும் நடு நிசியில் புறப்பட்டுப் புகார் எல்லையைக் கடந்து, மதுரை நோக்கி நடந்தனர்.

8. இடைவழியில் கவுந்தியடிகள் என்னும் தவ மூதாட்டியார் அவர்கட்குத் துணைவியாயினர். அவர்கள் எண்ணிறந்த இன்னலுற்று மதுரையை அடைந்தார்கள்.

9. அங்குக் கவுந்தியடிகள் அவர்களை மாதரி என்னும் ஓர் இடைச்சியிடம் அடைக்கலம் புகச் செய்து அகன்றார். மாதரி அவர்களை அன்புடன் வரவேற்றுத் தன் இல்லத்தருகில் இருந்த ஒரு சிறு குடிலில் இருக்கச் செய்து, தன் மகள் ஐயை என்பாளைக் கண்ணகிக்குத் துணையாக விட்டு வைத்தாள்.

10. பின்னர்க் கண்ணகி, மாதரி அளித்த உணவுப் பொருள்களைக் கொண்டு அடிசில் சமைத்துத் தன் கணவனுக்கு அன்புடன் படைத்தாள்; அவன் உண்டபின் அவனுக்கு அடைகாயும் வெற்றிலையும் அளித்து, அருகில் நின்றாள். அதுகண்ட கோவலன், தான் கண்ணகிக்கு இழைத்த தீங்கையும் அவள் கற்பின் திறத்தையும் எண்ணி மனம் கலங்கி, அவளைப் பலவாறு புகழ்ந்தான்; பின்னர்க் கண்ணகியின் காற்சிலம்பொன்றைப் பெற்றுக்கொண்டு அவளைவிட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றான்.

11. சென்றவன், கடைவீதியை அடைந்த போது. காலன் எதிர்ப்பட்டது போல, நூறு பொற்கொல்லர் தன்

னைச் சூழ்ந்து வர, ஒரு பொற்கொல்லன் கோவலன் முன் தோன்றினன். அவனைக்கண்ட கோவலன், அவனை அணுகி 'அரசியார் அணியத் தக்கதோர்' அரிய காற்சிலம்பினை விலை மதித்தற்கு நீ வல்லையோ?' என வினவினன். உடனே பொற்கொல்லன் அச்சிலம்பை வாங்கி உற்று நோக்கினன். பிறகு கோவலனைப்பார்த்து, 'ஐயா, இது கோப்பெருந் தேவியார்க்கு ஏற்றது. இதனைத் தென்னவரிடம் காட்டி வருகின்றேன். அதுவரையில் நீங்கள் இங்கு இருங்கள்,' என்றுகூறிக் கோவலனை அங்கேயே விட்டு அரண்மனை நாடிச் சென்றான்.

12. செல்லும்போது, அவன் பாண்டி மாதேவியின் பாதச் சிலம்பொன்றை முன்பே களவாடியிருந்தமையால், அக்களவு வெளிப்படுமுன் கண்ணகியின் சிலம்பைக் காட்டித்தான் தப்புதல் வேண்டும் என்று துணிந்தான்.

13. பொற்கொல்லன் அரண்மனையை அடைந்தபொழுது அரசன் அந்தப்புரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். தட்டான் மன்னனை அணுகி, 'அரசரே, கன்னக்கோலும் கவைக்கோலுமின்றி நம் அரசியாரின் சிலம்பை அபகரித்த கள்வன் என் மனையகத்தே உள்ளான்,' என்று கூறினன்.

14. அது கேட்ட மன்னன், வினை விளையுங் காலமாதலின், தன் ஏவலாளரை விளித்து, 'அரசியின் சிலம்பு இப்பொற்கொல்லன் கூறும் கள்வனிடம் இருந்தால் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக!' என்று பணித்தான்.

15. தென்னவன் சொற்படி தட்டானுடன் சென்ற ஏவலாளர் கோவலனைக் கண்டபோது அவன் கள்வனல்லன் எனத் துணிந்தனர். ஆயினும் பொற்கொல்லனுடைய புனைந்துரைகளைக் கேட்ட ஒரு களி மகன், தன் வாளால் கோவலனை வெட்டி வீழ்த்தினன்.

16. இச்செய்தி காட்டுத்தீப்போல நகரெங்கும் பரவியது. மாதரியின் இல்லத்திலிருந்த கண்ணகி இதை அறிந்தாள்; அழுதாள்; அரற்றினள்; விழுந்தாள்; எழுந்தாள்; சூரியனை நோக்கி, 'காய்கதிர்ச் செல்வனே, என் கணவர் நீ

அறியக் கள்வரோ?' என்று கதறினள். அப்பொழுது,'நின் கணவன் கள்வன் அல்லன்; அவனைக் கள்வன் என்ற இந்நகரை எரி உண்ணும்' என்று விண்ணிலிருந்து எழுந்த சொற்களை எல்லோரும் கேட்டனர்.

17. உடனே கண்ணகி தன்னிடமிருந்த மற்றொரு சிலம்பைக் கையில் ஏந்தித் தலைவிரிகோலமாய்ப் பலவாறு அரற்றிக் கொண்டு கோவலன் வெட்டுண்டுகிடந்த இடத்தை அடைந்தாள்; அவன்மீது வீழ்ந்து புரண்டு அழுதாள். உடனே கோவலன் உயிர் பெற்று எழுந்து,'மதி போலும் நின் முகம் வாடியதே!' என்று கூறி, அவள் கண்ணீரை மாற்றினன்; பின்னர், 'நீ இரு நான் வருகிறேன்,' என்று கூறித்தேவர்கள் எதிர்கொள்ள விண்ணுடு புக்கான்.

18. கண்ணகி தான் கண்டது கனவோ நினைவோ என்று அறியாது தடுமாறினள். ஆயினும், 'என் கணவரை எப்படியும் யான் அடைவேன்!' என்று கூறிக்கொண்டே செழியர் பிரான் அரண்மனை சென்றாள்.

19. மன்னன் கோவிலை யடைந்த அம்மங்கையர்க்கரசி, வாயில்காவலனை நோக்கி, "வாயிலோயே, வாயிலோயே, நீதி கெட்ட அரசன் வாயிலோயே, 'கணவனை இழந்து, கையிற் சிலம்பேந்திய ஒருத்தி நின் கடையகத்துள்ளாள்,' என உன் அரசனுக்கு அறிவிப்பாய்!" என்று அறைந்து நின்றாள். உடனே வாயிற்காவலன் அரசனை அணுகிச் செய்தி அறிவிக்க, 'அவளை உள்ளே வரவிடுக!' என்றான் தென்னவன்.

20. கண்ணகி மன்னன் முன் தோன்றினள். 'கண்ணீர் வடியும் கண்ணுடன் என் முன் வந்து நிற்கும் பெண்ணே,நீ யார்?' என்றான் பாண்டியன்."தேரா மன்ன, சொல்லுவேன் கேள்: ஒருபசுவின் கன்றைக் கொன்ற தன் ஒரே மகனைத்தேர்க்காலில் இட்டுக்கொன்று நீதி செலுத்திய சோழ மன்னன் வாழும் புகார் எனது ஊர்; என் காற்சிலம்பை விலைகூறவந்து, நின்னல் கள்வன் என்று கொலையுண்ட கோவலரின் மனைவி யான். என் பெயர் கண்ணகி," என்றாள். அதுகேட்டஅரசன்,"கள்வனைக் கொல்லல் தவறோ?" என்றான். "நீதி நெறியுணராத வேந்தே, என் காற் சிலம்பின் பரல் மாணிக்கம்," என்றாள் கண்ணகி. "என்தேவியின் சிலம்பின் பரல் முத்து,"என்றான் பாண்டியன்.

21. உடனே கோவலனிடமிருந்து கவரப்பட்டசிலம்பு தருவிக்கப்பட்டது. கண்ணகி அதைத் தரையின்மீது ஓங்கி எறிந்து உடைத்தாள். அதனுள்ளிருந்த மாணிக்கம் தெறித்து மன்னன் முன் விழுந்தது. கண்டான் காவலன். "பொற்கொல்லன் சொற்கேட்ட யானே அரசன்! யானே கள்வன்! என்றும் வளையாத பாண்டிய மன்னரின் செங்கோல் இன்று என்னல் வளைந்தது. என் ஆயுள் கெடுவதாக!" என்று கூறிக்கொண்டே அரியணையிலேயே சாய்ந்து இறந்தான். அருகில் இருந்த கோப் பெருந்தேவி அக்கணமே அவன்மீது விழுந்து உயிர் நீங்கினள்.

22. உடனே அரசவை விட்டு அகன்ற கண்ணகி, "இம் மதுரை மாநகரை எரியுண்பதாக!" என்று சபித்தாள். அங்ஙனமே மதுரை தீப்பற்றி எரிந்து அழிவுற்றது. பின்னர்க் கண்ணகி வைகை யாற்றின் கரையோரம் நடந்து சேர நாட்டை அடைந்தாள்; ஒரு குன்றின்மீது ஏறிச் சிலநாள் தவங்கிடந்து விண்ணகம் அடைந்தாள்.

23. அச்செய்தியைக் கேட்ட சேரமன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்காக ஒரு கோவில் எடுப்பித்து, இமயத்திலிருந்து கல் கொண்டுவந்து, கண்ணகியின் சிலை அமைத்து, விழாக் கொண்டாடி மகிழ்ந்தான்.

## பயிற்சி

I. கீழ்வரும் வினுக்களுக்கு விடை தருக:—

1. தமிழ் மொழியில் வழங்கும் ஐம்பெருங் காப்பியங்கள் எவை?
2. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?
3. கோவலன் செல்வம் எவ்வாறு அழிந்தது?
4. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்படக் காரணம் என்ன?
5. மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலனும் கண்ணகியும் யார் துணையைப் பெற்றனர்கள்?
6. மதுரையில் அவர்கள் எங்குத் தங்கினர்கள்?
7. கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் யாது?
8. கோவலன் கள்வனல்லன் என்பதைக் கண்ணகி எவ்வாறு பாண்டியன்முன் மெய்ப்பித்தாள்?

9. பாண்டியன் ஏன் இறந்தான் ?

10. கண்ணகிக்கு எங்கே எவன் கோவில் கட்டினான் ?

II. எதிர்ப்பதம் தருக :—

நிறைந்த, இல்லறம், தீங்கு, இழந்த, நடு, நிசி அணுகி, விண்.

III. கீழ்வரும் சொற்களையும் தொடர்களையும் வாக்கியங்களில் அமைக்க :—

பெருநிதி, கல்வி, கேள்வி, பத்தினி, வீழ்த்தினான், கதறினாள், பெய்து, விழா, மகிழ்ந்தான்.

## இலக்கணம்

**உயிரெழுத்து :** அ முதல் ஔ ஈருகக் கூறப்படும் எழுத்துக்கள் பன்னிரண்டும் உயிரெழுத்துக்களாம்.

**மெய்யெழுத்து :** க் முதல் ன் ஈருகக் கூறப்படும் எழுத்துக்கள் பதினெட்டும் மெய்யெழுத்துக்களாம்.

**உயிர்மெய் எழுத்து :** உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாம். அவை இருநூற்றுப் பதினாறு.

**ஆய்த எழுத்து :** மூன்று புள்ளி வடிவை உடைய ஃ என்னும் எழுத்தே ஆய்த எழுத்து எனப்படும்.

**சுட்டெழுத்து :** அ, இ, உ என்னும் உயிர் எழுத்துக்கள் சுட்டுப் பொருளில் வருமாயின், சுட்டெழுத்தாம்.

**உதாரணம் :** அவன், இவ்வீடு, உவன் நண்பன்.

**வினா வெழுத்து :** எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய எழுத்துக்கள் சொற்களில் நின்று வினாப் பொருளைத் தருமாயின், வினாவெழுத்துக்களாம்.

**உதாரணம் :**

1. இதை உடைத்தவன் எவன் — எ
2. உன் பெயர் யாது ? — யா
3. அவனா வந்தான் — ஆ
4. இவனோ செய்தான் ? — ஓ
5. ஏன் நிற்கிறாய் ? — ஏ
6. இவனே தந்தான் ? — ஏ

**குறிப்பு :** எ, யா என்பவை சொல்லின் முதலில் மட்டும் வரும். ஆ, ஓ என்பவை சொல்லின் ஈற்றில்மட்டும் வரும் ஏ என்பது சொல்லின் முதல், ஈறு ஆகிய இரண்டு இடங்களிலும் வரும்.



## 5. நிலா

முழுமைநிலா அழகுநிலா
முளைத்ததுவிண் மேலே — அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந் தாற் போலே!
அமுதமுகம் சிரித்ததுபோல்
அல்லிவிரிந் தாற்போல் — மேல்
சுழற்றிஎறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல்
முழுமைநிலா அழகுநிலா 1.
குருட்டுவிழியும் திறந்ததுபோல்
இருட்டில்வான விளக்கு! — நம்
பொருட்டுவந்தது பாடி ஆடிப்
பொழுதுபோக்கத் துவக்கு!
மரத்தின் அடியில் நிலவு வெளிச்சம்
மயிலின்தோகை விழிகள்! — பிற
தெருக்கள்எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்துமெழுகும் வழிகள்!
முழுமைநிலா அழகுநிலா 2.

— திரு. பாரதிதாசன் அவர்கள்

# 6. இபுராஹிம் நபி

1. வெகு காலத்துக்கு முன் ஒரு மகான் இருந்தார். அவர் யூகர் வகுப்பாருக்குத் தலைவர். அவர் பெயர் இபுராஹிம் என்பது. அவர் அல்லாவினிடம் அளவிலாப்பக்தி பூண்டவர்; சிறந்த அறிஞர்; ஈகையில் நிகரற்றவர்; எல்லாரிடத்தும் அன்பு நிறைந்தவர்.

2. அவர் ஓர் இரவு தம் மைந்தரைப் பலி இடுவது போலக் கனவு கண்டார்; அது அல்லாவின் ஆக்ஞை எனக்கருதிச் சில ஒட்டகங்களைப் பலியிட்டு, அவற்றின் மாமிசத்தை ஏழைகட்கு வழங்கினர்.

3. மறுநாள் இரவும் முன் இரவு கண்ட அதே சொப்பனத்தைக் கண்டார். ஆண்டவர் மேலும் பலியை விரும்புவதாக நினைத்த இபுராஹிம், மறுநாட் காலையிலும் சில ஒட்டகங்களைப் பலியிட்டார்.

4. மூன்றுமிரவும் அவர் தம் புதல்வரைத் தாமே பலியிடுவதாகக் கனவு கண்டார். உடனே அவர் தம் மைந்தர் இஸ்மாயிலைக் கூப்பிட்டுத் தாம் கண்ட கனவைப்பற்றிக் கூறினர். அது கேட்ட அவர் குமாரர், ஆண்டவர் விருப்பத்திற்கிணங்கத் தம்மைப் பலியிடுவதே தகுதியெனக் கூறினர். இச் செய்தியைக் கேட்ட இஸ்மாயிலின் அன்னையாரும் அடங்கா மகிழ்ச்சி கொண்டார்.

5. மறுநாட்காலையில் அம்மூவரும் குதூகலம் மிகுந்தவராய்க் காணப்பட்டனர். தாயார் பிள்ளையைக் குளிப்பாட்டிப் புத்தாடை அணிவித்து, நெற்றியில் முத்தமிட்டு, வழி கூட்டி அனுப்பினர். தந்தையார் தம் குமாரருக்குச் சிறிதும் வருத்தம் தோன்றுதிருப்பதற்காகப் பலியிடும் கத்தியை நன்றாகத் தீட்டி எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

6. இருவரும் பலிபீடமிருந்த இடத்தை அடைந்தனர். மைந்தர் தாமே சென்று, பலிபீடத்தின் அருகில் அமர்ந்து, தம் தலையைப் பீடத்தின்மீது பொருந்துமாறு வைத்துக்கொண்டார். தந்தையார் தம் கண்களை ஒரு துணியால் பொத்திக் கட்டிக்கொண்டு இஸ்மாயிலைப் பலி இடத் தயார் ஆனர்.

7. அத்தருணம் ஓர் அசரீரி எழுந்தது; "இபுராஹிம், உமது அன்பிற்கு நாம் மகிழ்கின்றோம்! உமது இச் செய்கையே உமது உண்மை அன்பிற்குப் போதிய சாட்சியமாகும். உமது புதல்வனைக் கொல்ல வேண்டா," என்பதே அவ்வசரீரியின் வாசகம். அது கேட்ட இபுராஹிம் தம் கையிலிருந்த கத்தியை நழுவ விட்டு, ஆண்டவர் தமது பலியை ஏற்றுக்கொண்டதற்காகப் பெரிதும் உவகை எய்தி இறைவரை வணங்கித் தமது நன்றியை வெளிப்படுத்தினர்.

8. அப்போதுதான் அவருக்குத் தாம்கண்ட கனவின் உண்மைப் பொருள் இன்னதெனவிளங்கிற்று. அல்லா உண்மையில் அவருடைய மைந்தரைப் பலியாகக் கேட்கவில்லை. ஆனல், தந்தைக்கு மைந்தர்பால் எத்தகைய அன்பு இருக்குமோ அத்தகைய அன்புக்கு மேலான அன்பே இறைவர் விரும்பியது என்பதை அறிந்தார்.

9. மனிதனுடைய ஆசைகளைத் தமக்குப் பலியிட வேண்டும் என்பது ஆண்டவர் கருத்தேயன்றி, மனிதனுடைய இரத்தத்தைச் சிந்த வேண்டும் என்பதன்று. இத்தகைய ஆசைகளையே இபுராஹிமும் அவர் மகனும் இறைவருக்குப் பலியாக்கினர்கள். தன்னலத்தைப் பலியிட்ட இச்சம்பவத்தின் ஞாபகார்த்தமாக ஒரு செம்மறியாடு பலியிடப் பட்டது. இக்கொண்டாட்டம் ஆண்டுதோறும் முஸ்லிம்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

### பயிற்சி

*I.* கீழ் வரும் வினுக்களுக்கு விடை தருக:—

1. இபுராஹிம் நபி கண்ட கனவு யாது?
2. இப்ராஹிம் செய்யத் துணிந்த செயற்கரிய செயல் யாது?
3. இஸ்மாயிலைப் பலி கொடுப்பதாக இபுராஹிம் கண்ட கனவின் பொருள் யாது?

*II.* பொருள் தருக:—

மகான், ஈகை, வழங்கினர், மகிழ்ச்சி, குதூகலம், புத்தாடை, அசரீரி, வாசகம், உவகை.

## 7. அக்கினி குல இளைஞன்

[திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.]

1. சுமார் எண்ணூறு வருஷமிருக்கும்: டில்லிமாநகரைச் சுற்றிலும் ஒரே இரணகளம்; அக்களத்தின் ஒரு கோடியிலே வரிசையாக ராஜபுத்திரரின் படை வீடுகள். ஒரு நாள் நடு நிசி. குலபதி—கடைசி இந்து சக்ரவர்த்தி— பிருதிவி ராஜன் கொலு இருக்கிறான். மறுதினம் பகை முடித்து வாகை சூடவேண்டுமென யோசனை நடக்கிறது. பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் பட்டாக் கத்தியைத் தொட்டுச் சபதம் செய்கின்றனர். அக்கொலுவிலே ஒரு சிறுவன் பெயர் அலங்காரன்; முகத்தில் பால் வடிகிறது; வீரமும் சொட்டுகிறது. கையிலே ஏழடி நீளம் வேல் கம்பு; இடுப்பிலே ஒரு புறம் சுருக்கமைந்த ஈட்டி: மற்றொரு புறம் நீண்ட உடைவாள். உதடு துடிக்கின்றது. கண்கள் கொவ்வைப் பழம் போலச் சொலிக்கின்றன! முன்னே வந்து பிருதிவி ராஜனை அடி வணங்கி அச்சிறுவன் சொல்லுவான்; 'அரசரே, பகைவர் எம்மாத்திரம்! அன்னார் கலங்கி ஓட வேண்டும்! அல்லது அவர்களின் தலைகள் தரையில் உருள வேண்டும்! இரண்டில் ஒன்று நிச்சயம். இன்றேல் வீர சுவர்க்கம் புகுவேன். என் உடைவாள் மீது ஆணை! எனக்குப் படைத்தலைமை தந்தருளல் வேண்டும்!'

2. அலங்காரன் வார்த்தை பிருதிவியின் செவிக்கு அமுதாகிறது. குலபதி வியந்து நிற்கிறான். சேனாதிபதியோ, 'பச்சைப் பாலன்! மீசை அரும்பவில்லை; பகைவனோ, பலவான்; துணை வலிவும் பெற்று நிற்கிறான். இளங்கன்று பயமறியாது,' என்று பலவாறு சிந்தனை செய்கிறான்.

3. சேனாதிபதியின் துணைவன், 'என்னே இப்பாலன் பதைப்பு! சொல்லுக்கு ஏற்ற செயல் இருக்கலாம். ஆயினும், அபிமன்யுவைப் போல ஆகிவிடுவானே! என் செய்வது! பழுத்த படைத்தலைவருக்கு அபவாதம் பிறக்குமே! அக்கினி குலத்தின் ஆண்மையே ஆண்மை' என்று எண்ணி நிற்கிறான்.

4. படைத்தலைவருள் மற்றொருவன், 'இது பிள்ளைப் பேச்சு! ஷாபுதீனுடைய சேனையோ, கடல் போன்றது. கோடரிக் காம்பன் ஜயசந்திரனும் சீறி நிற்கிறான். நாளையே, போரின் முடிவு காணவேண்டும் என்பது இறைவன் தீர்ப்பு. பால் மணம் மாறாப் பாலகனுக்கா படைத் தலைமை!' என்று பதைக்கிறான்.

5. பிருதிவி ராஜன் தனக்குள்ளே, 'பேனுக்கத்தி கூரியதுதான். பேனாவை நன்கு சீவும்; பெருமரத்தைப் பிளக்குமோ? விஷப் பரீட்சை செய்தல் அழகோ?' என்று எண்ணி, 'வீர மைந்த, வினை வலி, தன் வலி, மாற்றான் வலி எல்லாம் எண்ணியே கருமம் புரிதல் வேண்டும்,' என்றான்.

6. அது கேட்ட அலங்காரன் கண்களில் நீர் ததும்புகிறது! நெற்றியில் புருவம் ஏறுகிறது! ஒரு கை உடை வாளைத் தடவுகிறது! ஒரு கை ஈட்டியை நாடுகிறது! 'அரசரே, குலத்தின் மானம் குலைவதா? தந்தையார் கீர்த்தி மங்குவதா? மயிரொன்றை இழப்பினும் கவரிமான் உயிர் தரியாதே! புலிக்குப் பிறந்தது பூனை ஆவதோ? என்னே! என் தந்தையாரின், வீரத் தந்தையாரின்—'

7. அலங்காரன் சொல்லி முடிக்குமுன், பிருதிவி ராஜன் பரவசமாகி, 'மைந்த, உன் தந்தையாரின் கீர்த்திக்கு என்ன குறைவு?' என்று படபடத்தான்.

8. பாலன், 'அரசரே, யாது சொல்வேன்! மகோபா யுத்தத்துக்குச் சென்றார் என் தந்தையார். போர் முடிந்த பின், இரணகளத்தில் அவர் உடலம் அகப்படவில்லை. முதுகு காட்டி ஓடிவிட்டதாக என் சகாக்கள் ஏசுகின்றார்கள். அந்த ஏச்சைப் போக்கி, என் பிதாவின் மானத்தைக் காத்தல் என் கடமை அன்றோ? ஆனதுபற்றியே படைத்தலைமை வேண்டுகின்றேன்; தந்தருள்க!' என்று கூறி இரந்தனன்.

9. அச்சொல் முடிக்குமுன், பிருதிவிக்கு ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் சோகமும் இரண்டும் நெஞ்சை அடைக்கின்றன. ஆசனத்தை விட்டெழுந்து நின்று, ஆவேசத்துடன் பேசுகின்றான்.

10. 'என் பிள்ளாய், உன் தந்தையார் வீர விளக்கு, தியாக சமுத்திரம்! கயவர் உரை கேட்டுக் கலங்காதே! வீரக்

கொழுந்தை இழித்துக் கூறும் நாக்கை இரு துண்டாக்க இதோ என் வாள்! உன் தந்தையாரின் வீரத்தை இழித்-துக் கூறுபவன் யாவன்? வீரலட்சுமி அவனைப் பலி கொள்-வாள். உன் தந்தையார் என் உயிர்த்தோழர். சௌம்ய ராயரின் தீரத்தை, தியாகத்தை, உலகம் அறிய உரைக்-கின்றேன்.

11. 'மகோபா யுத்தத்தில் கொடியவாட்போர் நடந்-தது. என்னுடன் தோளோடு தோள்கலந்து, உன் தந்தை யார் சமர் செய்தார். இருவரும் சேர்ந்து பகைவருட் பலரை வெட்டி வீழ்த்தினோம். முடிவில், யான் படுகாயமடைந்து, பிரக்ஞை தவறிப் பாரின்மீது சாய்ந்தேன். அப்பால் சிறிது நினைவு வந்தது; கண் விழித்துப் பார்த்தேன். என் னைச் சுற்றிலும் கழுகுகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. எனது உடலைக் கொத்தித் தின்பதே அவற்றின் நோக்கம். என் அங்கங்களை அசைக்க முடியவில்லை. சோர்வுடன் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

12. 'என் பக்கத்தே உன் தந்தையார் இரு காலும் இழந்து கிடந்தார். நகர்ந்து வந்து பறவைகளை ஓட்ட அவரால் ஆகவில்லை; உடனே தமது உடலிலிருந்து கொஞ் சம் கொஞ்சமாகத் தசையை அறுத்து, ஆகாய வீதியிலே வீசினார். தசைத்துண்டுகளை நோக்கிக் கழுகுகள் போயின. அப்பால் என் நினைவு தப்பிவிட்டது. கடைசியிலே வைத்-திய சாலையில் விழித்துப் பார்க்க, என் படைத்தலைவர் புடை சூழ இருக்கலானேன்.

13. 'தன்னைவந்தடைந்த ஒரு புறாவின் உயிரைக்-காக்க வேண்டி, முன்னம் ஒரு சக்ரவர்த்தி சிபி என்பான் தன் தசையை அரிந்து கொடுத்தான். உன் தந்தை யாரோ, என்னையும், என்மூலம் தேசத்தையும் காக்கக் கருதித் தமது தசையை அறுத்து வீசிய தியாக சமுத்திரம்!

14. 'அவ்வீர திலகத்தை அறியாது உளறும் மடையர் யாவர்? டில்லி ராஜ்யத்தில் கோழைகளும் இருப்பார்களோ? என் மைந்த, உனது துடிப்பின் காரணம் உணர்ந்தேன்; படைத் தலைமையும் தந்தேன். பரிபவம் தவிர்க!' என்று

சொன்னான். சபையில் இருந்த அனைவரும் சௌம்ய ராயரது தியாக விவரம் கேட்டு வியந்து வாழ்த்தினர்.

பயிற்சி

*I.* கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக:—

1. அலங்காரன் கூறிய வீரமொழிகள் யாவை?
2. ஒரு கருமம் செய்யப் புகுமுன் எவ்வெவற்றைச் சிந்திந்தல் வேண்டும்?
3. சௌம்ய ராயர் புரிந்த தியாகம் யாது?

*II.* கீழ் வரும் சொற்களையும் தொடர்களையும் வாக்கியங்களில் அமைக்க:—

நடு நிசி, வியப்பு, பரவசம், தோளோடு தோள் கலந்து, படுகாயம்.

*III.* பொருள் தருக:—

இரணகளம், குலபதி, பரவசம், சமர், பார், பரிபவம் தவிர்க, சிங்க நாதம், வைரி.



## 8. உழவுத் தொழிலின் உயர்வு

1. 'சீரைத்தேடின் ஏரைத்தேடு; தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது,' என்னும் முதுமொழிகள் உழவுத் தொழிலின் உயர்வை விளக்குகின்றன. இதற்குக் காரணங்கள் யாவை எனச் சிறிது ஆராய்வோம்:

2. பண்டைக் காலத்தில் மக்களின் முன்னேற்றத்திற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் காரணமாயிருந்தது உழவுத் தொழிலே. ஆதியில் மக்கள் காட்டு மிராண்டிகளாய்க் காடுகளிலும் மலைகளிலும் வசித்துக்கொண்டு, ஆங்காங்குக் கிடைத்த காய் கனிகளையும் மிருகங்களின் மாமிசத்தையும்

உண்டு காலம்கழித்து வந்தார்கள். பிறகு அவர்கள் வன விலங்குகளாகிய ஆடு, மாடு, குதிரை முதலியவற்றைப் பழக்கி, அவற்றை மேய்த்துக்கொண்டு, நாடோடிகளாய் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் உழவுத் தொழிலை யறிந்த காலத்திலேதான் அவர்கள் ஓர் இடத்தில் நிலைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்கள். அது முதல் கிராமங்களும், பட்டணங்களும் தோன்றலாயின. ஆகவே, மக்களின் உயர் நிலைக்கு அடிப்படையாய் இருந்த உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறுதல் முற்றும் பொருத்தமுடையதே.

3. உலகில் உணவின்றி உயிர் வாழ்வது எவர்க்கும் முடியாத காரியம். யார் யார் எவ்வெத்தொழிலைச் செய்வதும் உணவைப் பெறுதற்கேயாம். உணவுக்கு ஆதாரமாய் இருப்பது உழவுத் தொழிலே. கிராம மக்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டு, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யாவிடில் நகர மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்தும் பயன் என்ன ? பட்டணத்துக்குச் சாப்பாடு பட்டிக் காட்டிலிருந்துதான் வரவேண்டும். ஆகவே, உழவுத் தொழிலே மற்றத் தொழில்களைவிடச் சிறந்தது என்று கூறுவதில் தவறு யாது?

4. அன்றியும், நகரங்களிலும் பிற இடங்களிலும் எண்ணற்ற கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலனவும், முக்கியமானவையும் பயிர்த் தொழிலோடு சம்பந்தப்பட்டவைகளாகவே இருக்கும். நாம் உடுத்தும் ஆடைகள், பருகும் பானங்கள், தின்னும் பண்டங்கள், பூசும் பூச்சுக்கள் முதலிய எல்லாவற்றையும் தோற்றுவிக்கக் கூடிய கைத்தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் யாவும் பயிரிடுபவரன்றோ பாங்குடன் அளிக்கின்றனர் !

5. மேலும், மக்கள்செய்யும் தொழில்களிற்பெரும்பாலன, பிறர்க்கு வேண்டிய பொருள்களைத் தயாரித்து, அவற்றிற்காகப் பெறும் ஊதியத்தினின்று உணவுப் பொருள்களைப் பெறப் பயன்படுவன. ஆனால், விவசாயி தன் உழைப்பின் பயனை நேர்முகமாக அனுபவிக்கும்

பாக்கியம் உள்ளவனுயிருக்கிறுன். அன்றியும், அவன் பிறர்க்கு அடங்கியொடுங்கித் தொழில் புரிய வேண்டுவ தில்லே. அவன் சுதந்தரத்துக்குப் பிறப்பிடமாயிருக் கிறுன். மற்றத் தொழில்களில் இச்சுதந்தரம் இல்லே. எஜமானர்கட்குக் கீழ்ப்படிந்தும், அவர்களுடைய கொள் கைகட்கும் விருப்பங்கட்கும் மாறுபடாமலும் இருந்து உழைக்கவேண்டும். இதுபற்றியே தெய்வப்புலவர்,

‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

என்னும் அமுத மொழிகளே அருளியுள்ளார்.

6. இதுவன்றி, உழவுத் தொழில் தவிர, மற்றத் தொழில்களுக்குத் தோன்றக்கூடிய இன்னல்கள் பல. உலக நிலேயில் மாறுபாடு, எஜமானர்களின் மன மாறுபாடு முதலியவற்ருல் பழுதேற்படலாம். ஆனுல் உழவுத் தொழி-லுக்கு அத்தகைய பழுதொன்றுமில்லே. இக்காரணத் தாலேதான் அவ்வைப் பாட்டியாரும்,

“ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லே கண்டீர்
பழுதுண்டு வேருேர் பணிக்கு”

என்று திருவாய் மலர்ந்துள்ளார்.

7. உழவுத் தொழிலே ஒரு நாட்டின் முன்னேற்றத் திற்கு உயிர் நாடியாய் இருப்பது. உழவுத் தொழிலேக் குடிகள் வளம்பெற நடத்தினுற்ருன் அவர்கள் க்ஷேமமாய் இருக்க முடியும். அவர்கள் க்ஷேமமாயிருந்தால், அரசாங்-கத்தின் வருவாய் அதிகரிக்கும். அரசாங்க வருவாய் அதி-கரித்தாற்ருன் அரசன், நாட்டு மக்களின் நன்மைக்கான காரியங்களேச் செய்யக்கூடும். இதுபற்றியே அவ்வைப் பிராட்டியார் குலோத்துங்க சோழனுடைய திருமணக் காலத்தில் ‘வரப்புயர’ என்று வாழ்த்திப் பிறகு அதன் உட்கருத்தை,

“வரப்புயர நீருயரும் ;
நீருயர நெல்லுயரும் ;
நெல்லுயரக் குடியுயரும் ;
குடியுயரக் கோலுயரும் ;
கோலுயரக் கோனுயர்வான் ;

என்று விளக்கினுர்.

8. ஆகவே, ஆதியில் மக்கள் நாகரிகத்தில் முதிர்ச்சி பெறவும், உயிர் வாழ்ந்திருக்கவும், கைத்தொழில் முயற்சி-களில் முன்னேற்றமடையவும், பிறரிடம் சென்று பணி செய்யாமல் சுதந்தரத்தோடு வாழவும், நாடு முன்னேற்ற-மடையவும் சிறந்த சாதனமாயிருந்தது உழவுத் தொழிலே என்பதை உணர்ந்தோம்.

9. பிற நாடுகள் இயந்திர நாகரிகத்தில் ஈடுபட்டு உழன்றுகொண்டிருக்கும் இக்காலத்தும் நம் நாடு உழவுத் தொழில் நாடாகவே இருந்து வருவது மேன்மையே. ஆயினும் இத்தொழில் உன்னத நிலையில் இல்லாமல் உயிரற்ற உடல் போல இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், நமது நாட்டார் உழவுத் தொழிலின் உயர்வுகளை ஓராமல், அதைச் செய்வது மிகவும் இழிவு என்ற மிகத் தவறான மனோபாவம் கொண்டிருப்பதே யாகும். இத்-தவற்றை நம் நாட்டார் என்று உணர்கின்றனரோ, அன்று தான் நமது நாடும் மக்களும் முன்னேற்றம் அடையக்கூடும்.

பயிற்சி

*I.* கீழ் வரும் வினாக்களுக்கு விடை கூறுக:—

1. உழவுத் தொழில்பற்றி வழங்கும் பழமொழிகளுள் சில தருக.
2. பண்டைக் காலத்தில் கிராமங்களும் பட்டணங்களும் எவ்வாறு தோன்றலாயின?
3. உழவுத் தொழில் மற்றத் தொழில்களிலும் சிறந்ததாகக் கொள்ளப்படுவதற்குக் காரணங்கள் யாவை?

*II.* இப்பாடத்தில் வரும் வினைச்சொற்களை எடுத்தெழுதுக.

*III.* வாக்கியங்களில் அமைக்க:—

உன்னத நிலை, மனோபாவம், முன்னேற்றம், வருவாய், சுதந்தரம், சாதனம், ஊதியம்.

*IV.* 8-ஆம் பத்தியில் உள்ள வாக்கியத்தைச் சிறு வாக்கியங்க-ளாக எழுதுக.

## 9. பிள்ளை யொழுக்கம்

அன்பை வளர்க்க வேண்டும்—கிளியே!
அறிவைப் பெருக்க வேண்டும்!
உன்போற் பிறரை யெண்ணிக்—கிளியே!
உதவி புரிய வேண்டும். 1

தெய்வ நினைப்பு வேண்டும்—கிளியே!
தேச நினைப்பு வேண்டும்;
மெய்ம்மை யொழுக்கம் வேண்டும்;—நெஞ்சில்
வீர வுறுதி வேண்டும். 2

அன்னைசொற் கேட்க வேண்டும்;—தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும்;
தன்னை வணங்க வேண்டும்:—பிறர்
தம்மை மதிக்க வேண்டும். 3

வலிமை வளர்க்க வேண்டும்;—நீ
வாழு மனையித் தேகம்;
எளிய வாழ்க்கை வேண்டும்;—உயர்
எண்ணம் ஓங்க வேண்டும். 4

ஆசிரி யார்க்க டங்கிக்—கிளியே!
அறிவை வளர்க்க வேண்டும்;
தேசம் வாழுந் தொழிலில்—மிக்க
திறமை யோங்க வேண்டும். 5

காலை மாலை தோறும் கிளியே!
கடவுள் வணக்கம் வேண்டும்;
வேலை தன்னில் உள்ளம்—ஊன்றி
வெற்றி யோங்க வேண்டும். 6

அச்ச மற்ற உண்மை—கிளியே!
ஆண்மை யுள்ள நெஞ்சம்
கொச்சை யற்ற பேச்சு—நல்ல
கொள்கை கொண்ட நட்பு 7

இன்ன லற்ற சாந்தம்—யார்க்கும்
இனிது செய்யும் பொறுமை
தன்ன லத்த விர்ப்புக்—கிளியே
தரும மாகும் இவையே. 8

பிரிய மான கிளியே!—தமிழ்
பேசுஞ் செல்வக் கிளியே!
பெரிய னுகி நாளும்—நல்ல
பேர்சி றந்து வாழ்வாய். 9

—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இப்பாடல் இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தார் வெளியிட்டுள்ள 'குழந்தை இன்பம்' என்னும் இசை நூலிலிருந்து எடுத்து, அனுமதியுடன் வெளியிடப் பெற்றுள்ளது.

8. ஆகவே, ஆதியில் மக்கள் நாகரிகத்தில் முதிர்ச்சி பெறவும், உயிர் வாழ்ந்திருக்கவும், கைத்தொழில் முயற்சிகளில் முன்னேற்றமடையவும், பிறரிடம் சென்று பணி செய்யாமல் சுதந்தரத்தோடு வாழவும், நாடு முன்னேற்றமடையவும் சிறந்த சாதனமாயிருந்தது உழவுத் தொழிலே என்பதை உணர்ந்தோம்.

9. பிற நாடுகள் இயந்திர நாகரிகத்தில் ஈடுபட்டு உழன்றுகொண்டிருக்கும் இக்காலத்தும் நம் நாடு உழவுத் தொழில் நாடாகவே இருந்து வருவது மேன்மையே. ஆயினும் இத்தொழில் உன்னத நிலையில் இல்லாமல் உயிரற்ற உடல் போல இருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம், நமது நாட்டார் உழவுத் தொழிலின் உயர்வுகளை ஓராமல், அதைச் செய்வது மிகவும் இழிவு என்ற மிகத் தவருன மனேபாவம் கொண்டிருப்பதே யாகும். இத்தவற்றை நம் நாட்டார் என்று உணர்கின்றனரோ, அன்று தான் நமது நாடும் மக்களும் முன்னேற்றம் அடையக்கூடும்.

பயிற்சி

*I.* கீழ் வரும் வினுக்களுக்கு விடை கூறுக:—

1. உழவுத் தொழில்பற்றி வழங்கும் பழமொழிகளுள் சில தருக.
2. பண்டைக் காலத்தில் கிராமங்களும் பட்டணங்களும் எவ்வாறு தோன்றலாயின?
3. உழவுத் தொழில் மற்றத் தொழில்களிலும் சிறந்ததாகக் கொள்ளப்படுவதற்குக் காரணங்கள் யாவை?

*II.* இப்பாடத்தில் வரும் வினைச்சொற்களை எடுத்தெழுதுக.

*III.* வாக்கியங்களில் அமைக்க:—

உன்னத நிலை, மனேபாவம், முன்னேற்றம், வருவாய், சுதந்தரம், சாதனம், ஊதியம்.

*IV.* 8-ஆம் பத்தியில் உள்ள வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக எழுதுக.

## 9. பிள்ளை யொழுக்கம்

அன்பை வளர்க்க வேண்டும்—கிளியே!
அறிவைப் பெருக்க வேண்டும்!
உன்போற் பிறரை யெண்ணிக்—கிளியே!
உதவி புரிய வேண்டும். 1

தெய்வ நினைப்பு வேண்டும்—கிளியே!
தேச நினைப்பு வேண்டும்;
மெய்ம்மை யொழுக்கம் வேண்டும்;—நெஞ்சில்
வீர வுறுதி வேண்டும். 2

அன்னைசொற் கேட்க வேண்டும்;—தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும்;
தன்னை வணங்க வேண்டும்:—பிறர்
தம்மை மதிக்க வேண்டும். 3

வலிமை வளர்க்க வேண்டும்;—நீ
வாழு மனையித் தேகம்;
எளிய வாழ்க்கை வேண்டும்;—உயர்
எண்ணம் ஓங்க வேண்டும். 4

ஆசிரி யார்க்க டங்கிக்—கிளியே!
அறிவை வளர்க்க வேண்டும்;
தேசம் வாழுந் தொழிலில்—மிக்க
திறமை யோங்க வேண்டும். 5

காலை மாலை தோறும் கிளியே!
கடவுள் வணக்கம் வேண்டும்;
வேலை தன்னில் உள்ளம்—ஊன்றி
வெற்றி யோங்க வேண்டும். 6

அச்ச மற்ற உண்மை—கிளியே!
ஆண்மை யுள்ள நெஞ்சம்
கொச்சை யற்ற பேச்சு—நல்ல
கொள்கை கொண்ட நட்பு 7

இன்ன லற்ற சாந்தம்—யார்க்கும்
இனிது செய்யும் பொறுமை
தன்ன லத்த விர்ப்புக்—கிளியே
தரும மாகும் இவையே. 8

பிரிய மான கிளியே!—தமிழ்
பேசுஞ் செல்வக் கிளியே!
பெரிய ஞானி நாளும்—நல்ல
பேர்சி றந்து வாழ்வாய். 9

—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இப்பாடல் இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தார் வெளியிட்டுள்ள 'குழந்தை இன்பம்' என்னும் இசை நூலிலிருந்து எடுத்து, அனுமதியுடன் வெளியிடப் பெற்றுள்ளது.



## 10. உத்தம ஊழியம்

1. சரித்திர நூலில் இயேசு நாதரைப்பற்றி நீ படித்திருப்பாய். அவரும் அவருடைய சீடர்களும் ஒரு நாள் பாலஸ்தீனம் என்னும் நாட்டில் உள்ள எருசலேம் என்னும் பட்டணத்தில் வசித்து வந்த ஒரு தனவந்தர் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றிருந்தார்கள்.

2. அக்காலத்தில் ஒருவர் வீட்டுக்கு விருந்தினர் வந்தால், விருந்தளிப்பவரின் வேலையாட்கள் அவ்விருந்தினரின் கால்களைக் கழுவித் துணியால் துடைத்துவிடுதல் வேண்டும். பணியாட்கள் இல்லாவிடில், விருந்தினரே ஒருவருக்கொருவர் அப்பணியைச் செய்தல் வேண்டும்.

3. இயேசு நாதர் விருந்துக்குச் சென்ற இல்லத்தில் ஏவலாட்கள் இல்லை. இயேசு நாதரின் சீடர்கள் வெகு தூரம் நடந்து வந்தமையால், அவர்களுடைய பாதங்களில் புழுதி நிரம்பப் படிந்திருந்தது. அங்குத் தங்கள் பாதங்களைக் கழுவிவிட வேலையாட்கள் இல்லை யென்பதை அறிந்த பிறகும் அவர்கள் ஒருவருக்கொருவர் அடிகளை அலம்ப முற்பட வில்லை. அவர்களுள் ஒவ்வொருவரும், 'அவன் காலை நாம் கழுவுவதா!' என்று எண்ணி, இறுமாந்திருந்தனர். அவர்களுடைய தற்பெருமையை நன்கறிந்த இயேசு நாதர், அவர்களுக்குப் புத்தி புகட்ட விரும்பினர்.

4. அவர் உடனே தமது ஆசனத்தை விட்டெழுந்தார்; அங்கிருந்த தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு பேதுரு என்னும் சீடரை அணுகினர். தம் ஆண்டவரே தம்முடைய பாதங்களைக் கழுவ வந்ததைக் கண்ட பேதுரு திடுக்கிட்டார். 'ஆண்டவரே, நீர் அடியேன் கால்களைக் கழுவலாமா? இதற்கு யான் ஒருபோதும் சம்மதியேன்!' என்றார்.

5. ஆனல், இயேசு நாதர் அவரை விடவில்லை. 'அன்பரே, நீரும் நானும் அன்புமிக்க நண்பர்கள் அல்லவா? நாம் இருவரும் சுகத்திலும் துக்கத்திலும் இணைபிரியாது இருந்து வருகின்றோமல்லவா? எனது ஊழியத்தை நீர் ஏற்றுக்கொள்ள மறுத்தால், பிற்காலத்தில் நீர் என்னோடு எங்ஙனம் பங்கு பெறுதல் இயலும்? அது முடியாத காரியமாகி விடுமே!' என்று கூறினர்.

6. அது கேட்ட பேதுரு, 'ஆண்டவரே, உம்மோடு யான் பெறக்கூடிய பங்கை இழந்துவிட என்மனம் இடம் தரவில்லை. உம் விருப்பப்படி செய்யும்' என்றார்.

7. இயேசுநாதர் தம்முடைய சீடர் எல்லாருடைய அடிகளையும் அன்புடன் கழுவி முடித்துவிட்டுத் தம் ஆசனத்தை அடைந்தார். பிறகு சீடர்களை நோக்கி, 'அன்பர்களே, உலகில் உண்மை ஊழியமே உசிதமானது. அடியவர்க்கு அடியவராயிருப்பதே அறிவுடையாரின் செய்கை. தன்னலங் கருதித் தொண்டாற்றுவது சிறப்புடைத்தன்று. பிறர் நலம் கருதிப் பணிசெய்து வருவதே மோக்ஷத்துக்கு வழியாகும். இவ்வுண்மையை நீங்கள் என்றும் மறத்தல் கூடாது,' என்று அவர்களுக்கு இன்னுரை பகர்ந்து எழுந்தருளியிருந்தார். எனவே, நாம் தற்பெருமை என்னும் துர்க்குணத்தை அறவே அகற்றி வாழக் கடவோமாக!

### பயிற்சி

*I.* விடை கூறுக:

1. இயேசு நாதர் யார்?
2. அவரும அவர் சீடர்களும் எங்குச் சென்றார்கள்?

3. அங்கு நிகழ்ந்தது யாது?

4. இயேசுநாதர் சீடர்களுக்குக் கூறிய அறிவுரை யாது?

II. இப்பாடத்தில் சுட்டெழுத்துக்கள் வந்துள்ள சொற்களை எடுத்தெழுதுக.

III. வாக்கியங்களில் அமைக்க:
பணியாள், தனவந்தன், முற்படுதல், இறுமாப்பு, தற்பெருமை.



## 11. மேட்டூர் அணை

1. 'ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை சோழமண்டலம்' என்னும் அருணகிரிநாதர் திருவாக்குக்கிணங்கப் பண்டு முதல் இன்றளவும் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்குப் பாய்ச்சல் வசதியை அளித்து வருவது 'பொன்னி' என்று புலவர் புகழும் சிறப்பினையுடைய காவிரியாறு. ஆயினும், சிற்சில சமயங்களில் இந்நதியால் நன்மைக்கு மாறாகத் தீமை ஏற்படுவதும் உண்டு. மிகுந்த மழை பெய்து வெள்ளம் வரும் காலங்களில், காவிரியாறு கரைபுரண்டெழுவதால் விளைச்சல்கள் பாழ்படுவதும், வயல்கள் எக்கரிட்டுப் பயனற்றுப்போவதும் வழக்கம். இக்குறைகளை அகற்றப் பண்டைக் காலத்திலிருந்தே பற்பல சாதனங்கள் அமைக்கப்பெற்று வந்துள்ளன.

2. கரிகாற் பெருவளத்தான் முதலிய தமிழ்வேந்தர்கள் காவிரியின் கரைகளை உயர்த்திக்கட்டினார்கள்; அதிக தூரத்திலுள்ள நிலங்களுக்கும் இவ்வாற்று நீர் பயன்படுமாறு இதினின்றும் பல் கால்வாய்களை வெட்டுவித்தார்கள். ஆயினும், குறை முற்றிலும் நீங்கவில்லை. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் ஸர். ஆர்தர் காப்டன் என்ற ஆங்கிலேயர் காவிரியின் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஓர் அணை இன்றியமையாததென்பதை ஆராய்ந்தறிந்தார். ஆதலின், 1836-ஆம் ஆண்டில் அவருடைய நன்முயற்சியால் கொள்ளிடத்தில் மேலணை கட்டி முடிக்கப்பட்டது.

3. அவ்வணை காவேரியினின்று அதிக நீர் கொள்ளிடத்தில் சென்று விடாதபடி தடுக்கச் சாதனமாயிற்றேயன்றி, மாரிக் காலத்தில் காவிரியில் கரை புரண்டு வரும் வெள்ளத்தைத் தடுக்கப் பயன்படவில்லை. அக்குறையை நீக்குவதற்காக 1845-ஆம் ஆண்டில் காவிரியின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டது. ஆயினும், காவிரியின் மேற்குப் பகுதியில் ஒரு தேக்கம் இருக்க வேண்டுவது அவசியம் என்பதை அறிஞர் பலர் ஆராய்ந்தறிந்தனர். ஆகவே, கர்னல் எல்லிஸ் என்பவர், காவிரியில் ஒரு பேரணையை நிறுவுவதற்கான திட்டமொன்றைத் தயாரித்தார். ஆனால் அஃது அப்போது ஆரம்பிக்கப்படவில்லை.

4. 1924-ஆம் ஆண்டில் அத்திட்டம் மறுபடியும் திருத்தப்பட்டு, அக்காலத்தில் சென்னை நிருவாக சபை உறுப்பினராயிருந்த ஸர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்களின் நன்முயற்சியால் இந்தியா மந்திரியின் அங்கீகாரம் பெற்று, 1928-ஆம் ஆண்டில் வேலை தொடங்கப் பெற்றது.

5. ஈரோடிலிருந்து 35 மைல் தூரத்திலும், சேலத்திலிருந்து 25மைல் தூரத்திலும் உள்ளது, மேட்டூர் என்னும் சிற்றூர். அங்கு ஒரு பெரிய பள்ளத்தாக்கு உண்டு. அது மூன்று பக்கங்களில் குன்றுகளால் சூழப்பெற்றது. அப்பள்ளத் தாக்கின் வழியே காவிரியாறு ஓடுகின்றது. அதன் நான்காம் பக்கத்தில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

6. இவ்வணை கட்டத் துவங்குவதற்கு முன் மேட்டூர் ஒரு நகரமாக்கப்பட்டது. அந்நகரத்திற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் நன்கு அமைக்கப்பட்டன. சிவசமுத்திர நீர் வீழ்ச்சி மின்சார நிலையத்திலிருந்து மின்சாரம் கொண்டு வரப்பட்டு, விளக்குகள் போடப்பட்டன. அதுகாறும் வேறெங்கும் பயன்படுத்தப்படாத சிறந்த இயந்திரங்கள் தருவிக்கப்பட்டன. 1928-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இது, ஆறு ஆண்டுகளில், ஆறே முக்கால் கோடி ரூபாய்ச் செலவில் கட்டிமுடிக்கப்பட்டது. இவ்வணை இப்போது உலகத்திலுள்ள மிகப் பெரிய அணைகளுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது.

7. மேட்டூர் அணை சுமார் ஒரு மைல் நீளமுடையது; 214 அடி உயரமுள்ளது. இதில் ஆற்றுக்குமேல் உள்ளது 176 அடி. இதனால் ஏற்பட்டுள்ள தேக்கம் 60 சதுர மைல் பரப்புடையது. இத்தேக்கத்தில் உள்ள தண்ணீர் 33 மைல் தூரம் ஆற்றில் எதிர்த்துப் பரவி இருக்கிறது. இவ்வணை மேற்பாகத்தில் 20 அடி அகலம் உடையதாய்க்காணப்பட்டாலும், அடிப்பாகத்தில் 170 அடி அகலம் உள்ளது.

8. இந்த அணையில் நீரோட்டத்தை ஒழுங்குபடுத்தப் பலவித அமைப்புக்கள் உள்ளன. ஏரி நிரம்பிவழியும் போது பக்கத்தில் ஓடுவதற்குரிய வடிமடையொன்று கடல் மட்டத்திற்கு மேல் 791 அடி உயரத்தில் உள்ளது. அதிகமான நீரை வெளிவிடும் மதகுகள் பதினொன்கு இருக்கின்றன. இம்மதகுகள் தேக்கத்தில் உள்ள நீரின் அளவுக்குத் தக்கபடி திறக்கப்பட்டுத் தண்ணீர் வடிக்கப்படும்.

9. இத்தகைய சிறந்த அணையினால் ஏற்படும் நன்மைகள் பலவாம். சேலம் நகரத்திற்கு நன்னீர் வழங்கல், மேட்டூருக்கும் சென்னைக்கும் இடையில் மின்சார விளக்குகள் அமைத்தல், கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல் முதலிய நன்மைகள் இதனால் ஏற்பட்டு வருகின்றன. மேலும் சோழ நாட்டில் இனிப் பஞ்சம் தலைக் காட்டாது. அன்றியும் புதிதாக மூன்று லக்ஷம் ஏக்கர் நிலமும் நஞ்சைச் சாகுபடி செய்யக் கூடியதாயிற்று. இவ்வணையால் ஏற்படக் கூடிய பயன்கள் இன்னும் பல உண்டு.

பயிற்சி :

*I.* விடை தருக ;—

1. சோழ நாட்டின் பெருமைக்குக் காரணம் யாது?
2. காவிரியாற்றின் குறுக்கே அணை கட்டவேண்டிய அவசியம் என்ன?
3. மேட்டூர் அணையின் அமைப்பை விவரிக்க.
4. மேட்டூர் அணையால் ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

*II.* 9-ஆம் பத்தியில் உள்ள இரண்டாம் வாக்கியத்தை மூன்று அல்லது நான்கு சிறு வாக்கியங்களாக எழுதுக.

*III.* 1-ஆம் பத்தியிலிருந்து ஆறு பெயர்ச் சொற்களும், நான்கு வினைச்சொற்களும் எடுத்தெழுதுக.

*IV.* பிரித் தெழுதுக :—

வாக்கிற்கிணங்க, இன்றளவும், சிறப்பினையுடைய புரண்டெழும், வந்துள்ள, நீரோட்டம், இன்றியமை யாத, ஆராய்ந்தறிந்தார்.

உதாரணம்:—பயனற்றது—பயன்+அற்றது.

## இலக்கணம் :

### பெயர்ச்சொல்லும் அதன் வகைகளும்

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் எனப் பெயர்ச்சொல் ஆறுவகைப்படும்.

உதாரணம் :

பொருட்பெயர்—மனிதன், மரம்
இடப்பெயர்—பட்டணம், தோட்டம்
காலப்பெயர்—வருடம், மாதம்
சினைப்பெயர்—தலை, கால்
குணப்பெயர்—வெண்மை, பெருமை
தொழிற்பெயர்—நடத்தல், செயல்

பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுபவை திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பன.



## 12. கவிச் சித்திரம்

[பெரும்புலவர் இயற்றும் கவிகளைப் படிக்கும்போது அக்கவிகளில் அடங்கியுள்ள விஷயங்களை நமது மனக் கண்ணால் காண முடியும். அத்தகைய கவிகளே கவிச் சித்திரங்கள் எனப்படும். கீழே தரப்பட்டுள்ள கவி அத்தகையதே. தன் கணவன் கொலையுண்டான் என்று அறிந்தாள் கண்ணகி; அவன் கள்வன் அல்லன் என்பதை மதுரை மன்னனுக்கும் மக்களுக்கும் நிரூபிக்க விரும்பினாள்; தன்னிடமிருந்த ஒற்றைச் சிலம்புடன் விரைந்து கொலைக்களத்தை அடைந்தாள்; கொலையுண்டு கிடந்த தன் கணவன் மீது விழுந்து புரண்டு அழுதாள். அவள் உடலெல்லாம் புழுதி படிந்தது; தலைமயிர் விரிந்து கிடந்தது; கண்களில் நீர்பெருகிற்று. அக்கோலத்தோடு கண்ணகி, பாண்டியன் சபையை அடைந்தாள்; தன் நியாயத்தை எடுத்துக்கூறி வழக்கை வென்றாள். தான் நீதி தவறிவிட்டதை அறிந்த பாண்டியன் தான் அமர்ந்திருந்த சிங்காதனத்திலேயே சாய்ந்து உயிர் நீங்கினான். இவ்விஷயங்களைக் கூறும் பாட்டையும் இவற்றை விளக்கும் சித்திரத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.]

'மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்,
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் ; அக் காரிகைதன் சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.'

சிலப்பதிகாரம்] [வழக்குரை காதை



## 13. ஸ்தல சுய ஆட்சி—பஞ்சாயத்து

**1.** நமது நாட்டில் சுதேச மன்னர்கள் ஆட்சியில் உள்ள பகுதிகள் நீங்க, மற்றப் பகுதிகள், ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பெற்று, ஆளப்பட்டு வருகின்றன. இவற்றைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்கப் படைகளும், ஊர்ப்பாதுகாப்புக்காகப் போலீஸும், சண்டைச் சச்சரவுகளை நீக்க நீதி மன்றங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அன்றியும், விவசாயம் கைத்தொழில் வாணிகம் கல்வி முதலியவற்றைக் கண்காணிக்கத் தனித்தனி இலாக்காக்கள் இருக்கின்றன. ஆயினும், இவைமட்டும் மக்கள் வாழ்க்கையை மாண்புறச் செய்தற்கு அமையா. அன்றியும், இவை எல்லா இடங்களுக்கும் பொதுவானவையே எனினும், அவ்விடங்களுக்கு ஏற்ற இன்றியமையாத சில சௌகரியங்கள் இருந்தாற்றான் மக்கள் மகிழ்ச்சியாக வாழமுடியும். எனவே, ஜனங்கள் தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு வேண்டிய வசதிகளைத் தாங்களே தேடிக் கொள்ளும் வகையில் அரசாங்கத்தாரால் ஆட்சிமுறையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனங்கள் அவரவர்கள் வசிக்கும் இடத்தைப்பற்றிய முக்கியமான பொது நலக்காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பும் அதிகாரமும் பெற்றுள்ளார்கள். இதுவே ஸ்தல சுய ஆட்சி எனப்படுவது. இதனால் இரண்டு நன்மைகள் உண்டு; ஜனங்கள் வாழ்க்கைக்கும், வசிக்கும் இடத்துக்கும் தகுதியான வசதிகளைத் தாங்களே செய்துகொள்வது ஒன்று;

ஜனநாயக ஆட்சிமுறையில் ஆரம்பப் பயிற்சி பெறுவது மற்றொன்று. சுய ஆட்சியானது கிராம ஆட்சி, ஜில்லா ஆட்சி, நகர ஆட்சி என மூவகைத்து. பஞ்சாயத்து, ஜில்லா போர்டு, முனிசிபாலிடி என்பன முறையே அவற்றின் பெயர்களாம். இங்குப் பஞ்சாயத்தைப்பற்றி மட்டும் படிக்கலாம்:-

9. 'பஞ்சாயத்து' என இக்காலத்தில் வழங்கும் ஸ்தல ஸ்தாபனம் நமது நாட்டுக்குப் புதியதன்று. நமது நாட்டுப் பண்டைய மன்னர் காலத்திலேயே கிராம ஆட்சி, கிராமப் பஞ்சாயத்துச்சபையால் நடைபெற்றுவந்ததென நாம் அறிவோம். இக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து உண்டு. ஆனால், அரசினரின் நேர் ஆட்சியில் உள்ள 'ரையோத்வாரி கிராமம்' ஒவ்வொன்றிலும் இப்பஞ்சாயத்து உண்டேயன்றித் தென்னிந்தியா ஜமீன், சுரோத்திரிய கிராமங்களில் இத்தகைய பஞ்சாயத்து ஸ்தாபனம் பெரும்பாலும் இருப்பதில்லை.

3. பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் அங்கத்தினரின் தொகை கிராமத்துக்குத் தக்கபடி எட்டுக்குக் குறையாமலும், பதினாறுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். இவ்வங்கத்தினர் அனைவரும் கிராமவாசிகளால் மூன்றாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் தம்முள் ஒருவரைப் பஞ்சாயத்துத்தலைவராகவும், மற்றொருவரை உபதலைவராகவும் தேர்ந்தெடுப்பர். பஞ்சாயத்து அங்கத்தினர் ஒவ்வொருவரும் 'பஞ்சாயத்தார்' என்று வழங்கப்பெறுவர். அங்கத்தினர் ஆற்றும் தொண்டுக்கு எவ்வித ஊதியமும் தரப்படுவதில்லை.

4. கிராமத்தின் நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் சாதகமான எல்லாக் காரியங்களையும் கவனிக்கவேண்டுவது பஞ்சாயத்து ஸ்தாபனத்தின் கடமை. ஸ்தாபனம் அமைந்துள்ள கிராமத்தின் எல்லைக்கு உட்பட்ட சாலைகளைப் பாதுகாப்பதும், புதியசாலைகளை அமைப்பதும், சத்திரங்களை ஏற்படுத்தி அவற்றைக் காப்பதும், வீதிகளுக்கு விளக்குகள் அமைப்பதும், நூல்நிலையங்கள் ஏற்படுத்துவதும், கழிவுநீர்க் கால்கள் கட்டுவதும், தெருக்களைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்வதும், குடிநீர், குளி நீர் முதலியவற்றுக்கான கிணறு,

குளங்களை அகழ்வதும், தொத்து நோய்கள் பரவுங் காலங்களில் தக்க மருந்து உதவியை ஏற்பாடு செய்வதும், பாடசாலைகள் நிறுவுவதும், உல்லாசத் தோட்டங்கள் அமைப்பதும் ஆகிய இவை போன்ற எண்ணிறந்த காரியங்களைப் பஞ்சாயத்து ஸ்தாபனத்தார் கவனிக்கின்றனர்.

5. இக்காரியங்களைச் செய்து முடிப்பதற்குப்பொருள் வேண்டுமன்றோ? கிராமத்தில் உள்ள நிலங்களின்மீது அரசியலார் வசூலிக்கும் வரிப்பணத்திலிருந்து ஒரு குறித்தவிகிதாசாரம் பஞ்சாயத்துச் சபைக்குக் கிடைக்கிறது. வீட்டு வரியும் வசூலிக்கப் படுவதுண்டு. சந்தைக் கடைகளுக்கும் குடிக்கூலி வசூலிப்பார்கள். ஜில்லா போர்டார் கிராமப் பஞ்சாயத்தின் செலவுக்காக ஆண்டுதோறும் பண உதவி அளிப்பது வழக்கம். வண்டி மேட்டு வரி, பஞ்சாயத்தாரால் விதிக்கப்படும் அபராதங்களால் கிடைக்கும் பணம் முதலியவற்றைக்கொண்டு பஞ்சாயத்துச் சபையார் தம் கடமைகளை இனிது நடத்தி வருகின்றனர்.

6. இத்தகையபஞ்சாயத்தில் அங்கத்தினராய்இருந்து நிருவாகத்தைச் சிறப்புடன் நடத்தும் திறமை ஏற்படுமாயின், ஜில்லா போர்டு சட்டசபை முதலியவற்றில் அங்கத்தினராக இருக்கும் வாய்ப்பு ஏற்படும்போது அச்சபைகளையும் திறமையுடனும் பொறுப்புடனும் நடத்தி நாட்டுக்கு நலம் புரிய அஃது ஏதுவாக இருக்கும்.

பயிற்சி:

*I.* விடை எழுதுக:—

1. 'ஸ்தல சுய ஆட்சி' என்பது என்ன?
2. அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. பஞ்சாயத்துச் சபையின் அமைப்பு யாது?
4. பஞ்சாயத்துச் சபையின் கடமைகள் எவை?
5. பஞ்சாயத்துச் சபைக்கு எவ்வகையில் வருவாய் கிடைக்கிறது?

*II.* இப்பாடத்திலிருந்து பொருட்பெயருக்கும், இடப் பெயருக்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக.

*III.* வாக்கியங்களில் அமைக்க:—

நிருவாகம், வாய்ப்பு, பொறுப்பு, எண்ணிறந்த, பெரும்பாலும், அங்கத்தினர், ஊதியம், தேர்ந்தெடுத்தல்.

# 14. விசித்திர நீதி

1. கிரீஸ் தேசத்து மன்னரான அலெக்ஸாண்டர் திக்கு விஜயம் செய்துகொண்டு வந்தபோது ஆப்பிரிக்காவில் இருந்த ஒரு சிறு நாட்டுக்குச் சென்றார். அந்நாட்டை ஆண்ட அரசர், அலெக்ஸாண்டரை வரவேற்று உபசரித்தார்; பின்னர் அலெக்ஸாண்டர் தம் நாட்டை நாடிவந்த காரணத்தை வினவினார். அலெக்ஸாண்டர் அந்நாட்டையும் நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும் காண வந்ததாகக் கூறினார்.

2. இருவேந்தரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அந்நாட்டுக் குடிகள் இருவர் தம்முடைய அரசரை வணங்கித் தமது வழக்கைத் தீர்க்குமாறு வேண்டினர். வழக்கு யாதென அரசர் விசாரித்தபோது வாதி, 'அரசரே, யான் ஒரு நிலத்தை இதோ நிற்கும் இவரிடமிருந்து விலைக்குப் பெற்றேன். பிறகு அதில் ஒரு வடிகால் வெட்ட நேர்ந்தது. அப்போது அந்நிலத்தில் எனக்கொரு புதையல் கிடைத்தது. அதையான் இவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தால், அதைப்பெற்றுக்கொள்ள மறுக்கிறார். யான் நிலத்தைமட்டும் வாங்கினேனேயன்றி, நிலத்தின் கீழ் உள்ள பிற பொருள்களையும் வாங்கினேனில்லை. ஆதலால், அப்புதையல் எனக்கு உரியதன்று. அன்புகூர்ந்து இவர் அதைப் பெற்றுக்கொள்ளுமாறு கட்டளை இடவேண்டும்', என்றான்.

3. இதைச் செவியுற்ற அரசர், பிரதிவாதியை நோக்கி 'உமதுவாதம் யாதெனக் கூறும்,' என்றார். பிரதிவாதி, 'வேந்தரே, யான் நிலத்தை விற்றுவிட்ட பிறகு எனக்கும் அந்த நிலத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. அன்றியும், நிலத்தில் புதையல் இருந்திருப்பதை அறிந்திருந்தால், அதை யான் எடுத்துக்கொண்டு பிறகு நிலத்தை விற்றிருக்க மாட்டேனா? இவ்வளவு பகுத்தறிவுகூட இல்லாதவனா யான்? அரசரே, அன்புகூர்ந்து அப்புதையலை இவரே எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிடக் கேட்டுக்கொள்கிறேன்,' என்றான்.

4. உபய வாதிகளின் வாக்கு மூலங்களையும் கேட்டு அறிந்த அரசர், 'உங்களுக்குக் குழந்தை உண்டோ?' என விசாரித்தார். அப்போது வாதி தனக்கொரு மைந்தன் இருப்பதாகவும், பிரதிவாதி தனக்கொரு மகள் இருப்ப-தாகவும் தெரிவித்தனர். அது கேட்ட அரசர், "அப்படியானல், அந்த இருவருக்கும் மணம் முடித்து வைத்துப் புதையலை அவர்களிடம் ஒப்படையுங்கள்" என்று தீர்ப்புக் கூறினர். அவ்வாதிகள் அத்தீர்ப்பை மிகுந்த குதூகலத்தோடு ஒப்புக்கொண்டு, அதன்படியே நடந்து கொள்வதாகக் கூறிவிட்டு அகன்றூர்கள்.

5. பிறகு அரசர் அலெக்ஸாண்டரைப் பார்த்து, 'வேந்தர் வேந்தரே, உம்முடைய நாட்டில் இந்த வழக்கை எப்படித் தீர்த்து வைப்பீர்கள்?' என்று கேட்டார். உடனே அலெக்ஸாண்டர், 'அது முற்றும் வேறு வகையாகும். அந்த இரண்டு வாதிகளையும் காவற்கிடங்கில் அடைத்து விட்டுப் புதையலை அரசர் எடுத்துக் கொள்வார்' என்றூர்.

6. அதுகேட்ட அரசர் ஆச்சரியமுற்று, 'வெகு நன்று உங்கள் ஊரில் வெயில் காய்கிறதா? மழை பெய்-கிறதா? என்று கேட்டார்; 'ஆஹா! வெயிலும் எரிக்-கிறது; மழையும் பொழிகிறது.' என்று மறுமொழி கூறி-னர் அலெக்ஸாண்டர். அங்ஙன மாயின், உங்கள் ஊரில் உள்ள ஆடுமாடுகளுக்காகத்தான் வெயில் எரிப்பதும் மழை பெய்வதும் நடைபெறுகின்றன வேயன்றி, உங்கள் பொருட்டன்று,' என்று ஆப்பிரிக்க அரசர் கூறக் கேட்ட அலெக்ஸாண்டர் நாணங்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றூர்.

பயிற்சி:

*I.* விடை எழுதுக:—

1. ஆப்பிரிக்கா மன்னரிடம் கொண்டு வரப்பட்ட வழக்கு யாது?
2. மன்னரின் தீர்ப்பு என்ன?
3. அலெக்ஸாண்டர் நாணம் அடையும்படி ஆப்பிரிக்க மன்னர் கூறிய மொழிகள் யாவை?

*II.* பொருள் எழுதுக:—

திக்கு விஜயம், ஒழுக்கம், வாதி, வடிகால், உரியதன்று, அன்பு கூர்ந்து, பகுத்தறிவு, உபயவாதிகள்.

*III.* இப்பாடத்தினின்றும் பொருட் பெயர், இடப்பெயர், குணப் பெயர்கட்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

*IV*. சேர்த்தெழுதுக :—

ஆப்பிரிக்காவில்+இருந்த, பேசிக்கொண்டு+இருக்கையில், யாது+என, உரியது+அன்று.

இலக்கணம் :

பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுபவை

*1.* திணை: மக்கள் தேவர் ஆகிய பகுத்தறிவு உள்ள உயிர்களின் பெயர்களே உயர்திணை.

உதாரணம் :—முருகன் நல்ல பையன்—உயர்திணை (மக்கள்)
கலைமகள் கல்வித் தெய்வம்—உயர்திணை (தேவர்)

மக்கள், தேவர் தவிர மற்றவைகளைக் குறிக்கும் பெயர் எல்லாம் அஃறிணை.

உதாரணம் :—பசு, பால் தரும்—அஃறிணை
கொடி படர்ந்திருக்கிறது.—அஃறிணை

குறிப்பு : திணை —பிரிவு; உயர்திணை—உயர்வாகிய பிரிவு; அல்+திணை—அஃறிணை—(உயர்வு) அல்லாத பிரிவு.

பயிற்சி :

முன் பாடத்திலிருந்து உயர்திணைக்கு நான்கு உதாரணங்களும், அஃறிணைக்கு நான்கு உதாரணங்களும் தருக.

## 15. தரங்கம்பாடி

[திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள்]

1. ரயில் மாயவரத்திலிருந்து சுமார் 18 மைல் ஆடி அசைந்து செல்லும். நாங்கள் இரண்டே முக்கால் மணி நேரத்தில் தரங்கம்பாடி ரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம். ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்தில் பெரிய கோட்டை. இக்கோட்டைக்குள் இருக்கும் ஊர்தான் தரங்கம்பாடி. கோட்டையை அடைவதற்குள் இரண்டு ஆறுகளைக் கடக்க வேண்டும். ஒன்று, உப்பனாறு. பெயரிலிருந்தே தண்ணீர் எப்படி இருக்கும் என்பதை அறியலாம்; மற்றொன்று, பக்கிங்காம் கால்வாய். சென்னையில் இருக்கிறதே, அதே நாற்றம் வாய்ந்த பக்கிங்காம் கால்வாய்தான் இது. இந்த இரண்டு ஆறுகளும் தரங்கம்பாடிக்கு அருகே சங்கமமாகின்றன. கோட்டைக்குள்ளே ஒரு கோட்டை, குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் அழகான வீதிகள், பாழடைந்த பெரிய கட்டடங்கள். ஒரு மசூதி, இரண்டு கோவில்கள், மூன்று சர்ச்சுகள், சுமார் 500 வீடுகள். இதுதான் தரங்கம்பாடி.

2. பதினெட்டாம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் ஜெர்மன் பாதிரிகள் இங்கே வந்தார்கள். இன்னும் அவர்களுடைய பள்ளிக்கூடங்களும், மதம் மாற்றும் கருவிகளும் இங்கே இருக்கின்றன. முதன் முதலாக இந்த ஊரைச் சீர்படுத்தி அரசாண்டவர்கள் டேனிஷ்காரர்கள். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டடங்களில் சில இன்றும் நல்ல நிலைமையில் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களில் டென்மார்க்கின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

3. ராஜ வீதி, ராணி வீதி, அட்மிரல் வீதி, பிரின்ஸ் வார்டுகள் முதலியன வீதிகளின் பெயர்கள். இந்தக் கோட்டை நகருக்கு மூன்று புறந்தான் வாயில்கள்; ஒரு புறம் துறைமுகம். துறைமுகத்தின் அருகில் சிறிய கோட்டை. இந்தச் சிறிய கோட்டைக்கு அருகே பெரிய மைதானம். மைதானத்தின் மறு புறத்தில் ஜட்ஜ் பங்களா. அது இப்பொழுது நாடார் பங்களாவாய் இருக்கிறது. மைதானத்தின் மற்றொரு புறத்தில் மேனிக்கு என்னும் ஜெர்மானியர் வசிக்கிறூர். இவருக்கு வயது 87. இவர் இவ்வூருக்கு வந்து 52 வருஷங்கள் ஆகின்றன. இத்தனை வருஷம் ஆகியும், இவருக்குத் தமிழ் சரியாகப் பேச வராது. ஒரு முறை தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு, தம் வீட்டுக்குப் போய் அம்மாளிடம் இரண்டு சுருட்டுகள் வாங்கி வரும்படி கூறினூராம். அதற்கு, நான் சொல்லி, நீ சொல்லி, அம்மா சொல்லி, இங்கே போகிறூன் ஒருவன், திரும்பி வருகிறூன் ஒருவன்,' என்று கூறினூர்.

4. மேனிக்குத் துரைக்கு இந்தியர்களிடம் நிரம்ப அபிமானம் உண்டு. அவர் அதை எல்லா வகையிலும் காட்டிக் கொள்வார். அவர் பிறப்பில் ஜெர்மானியராய் இருந்தாலும், சென்ற யுத்தத்தில் பிரிட்டிஷ் பிரஜையாக மாறி விட்டார்.

5. தரங்கம்பாடியில் பொதுவாகப் பென்ஷன் வாங்குபவர்களும் செம்படவர்களுந்தான் அதிகம். இந்தச்செம்படவர்கள் கோட்டைக்கருகே வசிக்கிறூர்கள். மீன் பிடிப்பதிலும் சுருட்டுப் பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்கள்.

இவர்கள் இருக்கும் குடிசைகளுக்குப் பட்டணம் என்பது பெயர். இவர்களுக்குப் பட்டணத்தார் என்பது பெயர்.

6. இந்தப் பட்டணத்தாரின் ஜனத்தொகை சுமார் ஆயிரம். இங்கே ஒரு பள்ளிக்கூடமும் கோவிலும் உண்டு. பட்டணத்தார்களில் சிலருக்கு, ஒரு சமயம் தெய்வ பக்தி அதிகமாகிவிட்டது. உடனே அவர்கள் இரவில் கோவிலுக்குச் சென்று விக்கிரகத்தைப் பெயர்த்து, அதற்கடியிலிருந்த பொன்னைச் சுவாமியின் பிரசாதமாக எடுத்துச் சென்றூர்களாம்!

7. பட்டணத்தாரின் கல்யாணமே அலாதியானது. கல்யாணத்தில் மாப்பிள்ளையும் பெண்ணையும்விடப் புரோகிதருக்குத்தான் கஷ்டம் அதிகம். மணமகளுக்குத் தாலி கட்டி முடிந்ததும், மணமகன் கையையும் மணமகள் கையையும் ஒன்றாகச் சேர்த்து வைக்கவேண்டியவர் புரோகிதர். மணப்பெண் கையைப்பின் புறமாக வைத்துக்கொள்வாள். புரோகிதர் பலவந்தமாகப் பெண்ணின் கையைப் பிடித்து மாப்பிள்ளையின் கையோடு சேர்க்கவேண்டும். ஒருமுறை ஒரு மணப்பெண் புரோகிதரின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதை நன்றாகக் கடித்து விட்டாள். புரோகிதர் மணப்பெண்ணின் கையை நன்றாகக் கிள்ளித் தம்மை விடுவித்துக் கொண்டார்.

8. அம்மி மிதித்தல் ஒரு சடங்கு. மாப்பிள்ளை பெண்ணின் காலைத்தூக்கி அம்மியின்மீது வைக்கவேண்டும். கல்யாண வீட்டிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதில் சண்டை வந்துவிடும். 'தூக்கி வை' என்பார்கள் பெண்கள். 'தூக்காதே' என்பார்கள் ஆண்கள்.

'தூக்கி வை,' 'தூக்காதே.'
'தூக்கி வை,' 'தூக்காதே.'

என்னும் பேரிரைச்சல் உண்டாகும். சில சமயங்களில் சண்டையும் வந்துவிடும். சில சமயங்களில் புரோகிதரே பெண்ணின் காலைத்தூக்கி வைக்கவேண்டும். இவ்வளவு கஷ்டப்படும் புரோகிதருக்குக் கிடைப்பது ஏழு ரூபாய்தான். இந்தத் தொழிலைவிட ஏ. ஆர். பி. யில் சேருவது நல்லது என்று புரோகிதர் கருதுகிறாராம். வாழ்ந்து முறிந்து போன ஊர்

தரங்கம்பாடி. இங்கே வாழ்ந்து வதங்கியவர்கள் (பென்ஷன் வாங்குபவர்கள்) அதிகம். இவர்கள் ஆப்பிரிக்கா, மலேயா, மோரீஸ் போன்ற வெளிநாடுகளிலே சம்பாதித்தவர்கள்.

9. இவர்கள் அந்தக் காலத்திலே பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைத்தவர்கள்; இப்பொழுது காலணுச் செலவிடவும் கணக்குப் பார்க்கிறார்கள். யாராவது வெளியூரார் போய்விட்டால், பேசிப் பேசிப் பிராணனை வாங்கிவிடுவார்கள். இவ்வூர் இளைஞர்களுக்குப் படிப்பு, அரசியல் இவைகளைவிட விளையாட்டுக்களிலே அதிகப் பிரியம். டென்னிஸ், புட்பால், பாட்மிண்டன் முதலியன அதிகம். ஒரு காலத்திலே தரங்கம்பாடித் திராக்ஷைகள் மிகப்பேர் பெற்றிருந்தன. இப்பொழுது மருந்துக்குக்கூட ஒன்றைப் பார்ப்பது கஷ்டம்.

10. தரங்கம்பாடியில் ஒரே ஒரு பாக்டரி. அதுவும் சோடா பாக்டரி. 'சாயா' வந்த பிறகு, சோடா வியாபாரம் படுத்துவிட்டது. பரம்பரையாகக் காப்பி கிளப் நடத்தும் ஐயர் ஒருவர் இருக்கிறார். இவர் பழைய காலத்து மெட்ரிக்குலேஷன். இவருடைய பலகாரத்தைவிட, பேச்சு இனிமையாக இருக்கும்.

11. தென்னிந்தியாவிலுள்ள சிறந்த சுக வாசஸ்தலங்களில் தரங்கம்பாடி குறிப்பிடத்தக்கது. வெயிற்காலத்தில் இங்கு நல்ல ஆரோக்கியமான காற்று. சமுத்திரக் கரையில் ஓரத்திலுள்ள மணற்பாறையில் அருமையான ஊற்று நீர் கிடக்கிறது. இவ்வூர் மக்களின் ஏழ்மை, சுக வாசிகளின் செலவைக் குறைத்துவிடுகிறது.

12. மாசிலாமணிக் கோவில், சமுத்திரக்கரை ஓரத்தில் இருக்கிறது. சிறிது காலத்தில் கோவிலும் சமுத்திரமும் ஒன்றுகிவிடலாம். மாசிலாமணிக் கடவுளுக்கு நூற்றுக் கணக்கான வேலி நிலமிருந்தும் அவரைக்கவனிப்பார் யாருமில்லை. கடவுள் பெரியவர். அவர் தம் குறைகளை யாரிடமும் சொல்லமாட்டார்.

13. தரங்கம்பாடியைப் பற்றி நினைக்கும் பொழுது கொம்பில்லாத மாடுகளும் கூரையில்லாத வீடுகளுமே ஞாபகத்துக்கு வருகின்றன.

பயிற்சி :

I .விடை எழுதுக:—

1. தரங்கம்பாடி எங்குள்ளது ?
2. அதன் அமைப்பு எத்தகையது ?
3. தரங்கம்பாடியில் வசிக்கும் மக்கள் வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாக் எழுது.

II. பொருள் எழுதி வாக்கியங்களில் அமைக்க:—

இரை, இறை, அரை, அறை, மாரி, மாறி.

III. மும்மூன்று உதாரணங்கள் தருக:—

சுட்டெழுத்து, பெயர்ச்சொல், வினைச்சொல், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர்.

இலக்கணம் :

பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுபவை

2. பால் :—உயர்திணைப் பெயர்களை ஆண், பெண், பலர் என்று மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கலாம்

உயர்திணை {
1. ஆண் பால் —ஆணின் பெயரைக் குறிப்பது.
2. பெண் பால்—பெண்ணின் பெயரைக் குறிப்பது.
3. பலர் பால்—ஒருவருக்கு மேற்பட்ட ஆண்களோ, அன்றிப் பெண்களோ, அன்றி ஆண்களும் பெண்களும் கலந்தோ உள்ள பெயர்களைக் குறிப்பது.

அஃறிணைப் பெயர்களை ஒன்று, பல என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அஃறிணை {
4. ஒன்றன் பால்—அஃறிணைப் பொருள்களுள் ஒன்றைக் குறிப்பது.
5. பலவின் பால்—அஃறிணைப் பொருள்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட பலவற்றைக் குறிப்பது.

குறிப்பு :—ஆண் பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால்: பலவின் பால் எனப்பால் ஐந்து வகை.

பயிற்சி :

முன் பாடத்திலிருந்து ஒவ்வொரு பாலையும் குறிக்க இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.



## 16. மலையும் அணிலும்

'அற்பத் திருடா,' என்றெனை அழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்:
'அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரு வண்மையும்' உனக்கென்(று)
உரைமொழி முற்றும் உண்மையே ஆயின்,
ஒரு வகைப் பொருளின் ஒருல காமோ?
ஒருவெயில் மழையினுண் டொன்று தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றாய்க் கூடின் உலகம், ஆண்டாம்.
ஆதலின், யானிவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன்;
என் தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்?
உன்பே ருருஎனக் கில்லை: உனக்கும்
என்சிறு வடிவிலை: மேலும் என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கிலை இலையே;
அணிற்பிள்ளை சாடி ஓடி அலைந்து

விளையா டற்கு விரிவிடம் பெறுவாய்;
ஐய மிதற்கிலை; அடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு விதமாம் ;
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின;
வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ யாயின், மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னு லாகுமோ?
யாவரே பெரியவர்? யாவரே சிறியவர்?
ஒன்றிற் பெரியவர் ஒன்றிற் சிறியராம்;
ஒன்றிற் சிறியவர் ஒன்றிற் பெரியராம்;
ஆதலின், அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்

பயிற்சி :

*I.* இக்கதைப்பாட்டில் உள்ள விஷயத்தை உரை நடையில் எழுதுக.

*II.* இக்கதைப் பாட்டில் அடங்கியுள்ள விஷயத்தைச் சம்பாஷணையாக அமைத்து எழுதுக.

இலக்கணம் :

பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுபவை :

**3.** **எண்** :—பொருளின் எண்ணிக்கையே எண் எனப்படும் **ஒருமை, பன்மை** என எண் இருவகைப்படும்.

ஒருமை—ஒரு பொருளைக் குறிப்பது.

பன்மை—ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் குறிப்பது.

உதாரணம் :—மலை அணிலை இகழ்ந்தது—ஒருமை
மரங்கள் பல மலைமீது உண்டு—பன்மை.

பயிற்சி :

*15*·ஆம் பாடத்திலிருந்து எண்கள் இரண்டுக்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக.

## 17. உண்மை ஒரு போதும் மறையாது

1. ஒரு நாள் ஒரு பிரயாணி தன் குதிரை மீது ஏறிக்கொண்டு அடுத்தவூர்ச் சந்தைக்குச் சென்றான். இடைவழியில் அவனுக்குப் பசி மேலிட்டது. அவன் ஒரு குளத்தின் அருகில் குதிரையைவிட்டு இழிந்து, அதையொரு மரத்தில் கட்டிவிட்டுக் குளக்கரையில் அமர்ந்து, தன் கையில் இருந்த கட்டுச் சாதத்தை அவிழ்த்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

2. அத்தருணம் வேறொரு பிரயாணி அவ்வழியே வந்தான். அவனும் அவனும் தன் குதிரையை முதற் பிரயாணியின் குதிரைக் கட்டியிருந்த அதே மரத்தில் கட்டச் சென்றான். அது கண்ட முதற் பிரயாணி, 'அண்ணே, அங்கே உன் குதிரையைக் கட்டாதே. என் குதிரை மிகவும் முரட்டுக்குணம் உடையது. உன் குதிரை மிகவும் மெலிந்து காணப்படுகிறது' என்றான். இரண்டாம் பிரயாணி அதைக் காதில் வாங்காமல், அம்மரத்திலேயே அக்குதிரையைக் கட்டினன். 'அம்மரத்தில் குதிரையைக் கட்டாதே; சொல்வதைக்கேள்; மீறி நடந்தால் வருவதை அனுபவிக்க வேண்டுவதுதான்;' என்றான் முதற்பிரயாணி.

3. அவன் என்ன சொல்லியும் கேளாமல், ஒரே பிடிவாதமாய்த் தன் குதிரையை அதேமரத்தில் கட்டிவிட்டு, இரண்டாம் பிரயாணி குளத்தின் மறு கரையில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான். இருவரும் சாப்பிட்டு வருவதற்குள், முதற்பிரயாணியின் முரட்டுக்குதிரை மற்றக் குதிரையைக் கடித்துக் கொன்றுவிட்டது.

4. சாப்பிட்டுவிட்டு வந்து பார்த்த இரண்டாம் பிரயாணி மற்றவனை இழுத்து கொண்டு அவ்வூர் நீதிபதியிடம் சென்று, 'ஐயா, இந்த மனிதனுடைய குதிரை என் குதிரையைக் கொன்று விட்டது. இதை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்,' என்றான்.

5. அது கேட்ட நீதிபதி, பிரதிவாதியைப் பார்த்துப் பல கேள்விகள் கேட்டார். அப்போது அவன் பதில் ஒன்றும் கூறாமல், ஊமை போல நின்று கொண்டிருந்தான். உடனே நீதிபதி, வாதியாகிய இரண்டாம் பிரயாணியைப் பார்த்து, 'இந்த ஊமையை என்ன செய்யச் சொல்கிறீர்?' என்றார்.

6. உடனே வாதி, 'நீதிபதியாரே, இவன் பாசாங்குக்காரன். உண்மையில் இவன் ஊமையல்ல. நான் குதிரையைக் கொண்டுபோய்க் கட்டும்போதே, 'அங்கே கட்டாதே! கட்டாதே!; என்று தொண்டை கிழியக்கத்தினான். கத்தியது உண்டா, இல்லையா என்று கேளுங்கள்; என்றான்.

7. அது கேட்ட நீதிபதி, மிகவும் சந்தோஷமடைந்து 'இனி நான் வழக்கை விசாரிக்க வேண்டுவதில்லை. உம் வாயாலேயே உண்மை வெளியாகிவிட்டது. பிரதிவாதி தம் குதிரை இருந்த இடத்தில் உம் குதிரையைக் கட்டவேண்டா என்று எச்சரிக்கை செய்து, நீர் அங்குக் கட்டியது தவறு. அன்றியும், அவரை நீர் இங்குக் கொண்டுவந்து அவமானமுறச் செய்தது ஒரு பெருங்குற்றம். ஆதலால், நீர் பிரதிவாதியின் மான நஷ்டத்திற்கு ஈடாக நூறுபணம் அவருக்குச்செலுத்த வேண்டும் என்று நான் தீர்ப்புக் கூறுகிறேன்,' என்றார். பவாம்! வாதி குதிரையை இழந்ததும் அன்றி நூறு பணமும் செலுத்திவிட்டுச் செல்ல நேர்ந்தது.

பயிற்சி :

*I.* விடை தருக:—

1. முதற்பிரயாணியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு யாது?
2. நீதிபதிக்குக் கிடைத்த சாட்சியம் யாது?
3. இக்கதையினால் பெறப்படும் நீதி யாது?
4. நீயே முதற்பிரயாணி என்று பாவித்துக் கொண்டு, இக்கதையை நீ கூறுவது போல எழுது.

*II.* வாக்கியங்களில் அமைக்க:—

சந்தை. இடை வழி, மெலிந்து, பிடிவாதம், நீதிபதி. பசாங்குக்காரன்.

*III.* இப்பாடத்தினின்றும் ஐந்து பெயர்ச்சொற்களை எடுத்து எழுதி, அவற்றிற்குத் திணை, பால், எண் ஆகியவற்றையும் எழுதுக.

இலக்கணம்

பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுபவை

3. இடம்:—நீதிபதி வாதியை நோக்கி, "நான் சொல்வதைக் கேளும். நீர் கொண்டு வந்த வழக்கு மிகவும் சிக்கலானது. என்ன கேட்டாலும் அவன் விடை கூறவில்லை," என்றார்.

இவ்வாக்கியத்தில் 'நான்' என்னும் சொல் பேசுகிற நீதிபதியைக் குறிக்கிறது. 'நீர்' என்னும் சொல் அவர்முன் நின்ற வாதியைக் குறிக்கிறது. 'அவன்' என்னும் சொல் பேசுபவர், அவர்முன் நிற்பவர் ஆகிய இருவரையும் தவிர்த்து வேறொருவனைக் குறிக்கிறது.

பேசுபவன் தன்னைக் குறிக்கும் சொல் நிற்கும் இடம் தன்மை இடம். முன்னிற்பவரைக் குறிக்கும் சொல் நிற்கும் இடம் முன்னிலை இடம். தன்மை, முன்னிலை இடங்களுக்குரிய சொற்களைத் தவிரப் பிறசொற்கள் நிற்கும் இடம் படர்க்கை இடம்.



## 18. மொஹெஞ்சோ - தாரோ

1. உலகில் முதன் முதல் மக்கள் தோன்றி நாகரிக-முற்ற நாடுகளுள் தமிழ் நாடும் ஒன்று என்பது வரலாறு வல்லார் கூற்று. சுமார் 4000 ஆண்டுகட்கு முன்பு ஆரிய மக்கள் சிந்து சமவெளியிற் குடியேறினார்கள். அவர்கள் வருமுன்னரே திராவிட மக்கள் நமது நாட்டில் நாகரிக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஆனல், அவர்கள் தென்-னிந்தியாவில் மட்டும் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள் என்-றும், அவர்கள் இந்தியா முழுவதும் வியாபித்திருந்தார்கள் என்றும் சமீபகாலம் வரையில் இரு கொள்கைகள் விவா-திக்கப்பட்டு வந்தன. இவ்விவாதம், 1922–ஆம் ஆண்டில் சிந்து மாகாணத்தில் உள்ள மொஹெஞ்சோ - தாரோ என்னும் இடத்தைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்து பார்த்து ஐந்தாண்டளவும் நடத்திய ஆராய்ச்சியின் பயனை

முடிவுற்றது. ஆரியர் வந்த காலத்திற்கு முன்பே திராவிடர்கள் வட இந்தியாவிலும் வாழ்ந்து வந்தார்கள் என்னும் கொள்கை வன்மையுற்று வளருவதாயிற்று.

2. மொஹெஞ்சோ - தாரோ என்னும் இடம் சிந்து மாகாணத்தில் இருக்கிறது. இது மழை மிகக் குறைந்த வனுந்தரம். கொசுகுக்கும் பிணிக்கும் இருப்பிடமாகிய இது மனித வாழ்க்கைக்கு ஏற்றதன்று. ஆனல், இங்குச் சுமார் 6000 ஆண்டுகட்கு முன்னர் நாகரிகத்தில் நனியோங்கியிருந்த மக்கள் வாழ்ந்துவந்தார்கள் என்னும் உண்மைக்குச் சான்ருகப் பூமியுள் புதையுண்ட பெரிய நகரத்தின் சின்னங்கள் காணப்படுகின்றன.

3. ஒன்றன்மீதொன்ருக ஏழடுக்குக் கட்டடங்கள் இங்கே காணப்படுகின்றன. அவற்றுள் கீழே இருப்பவை தண்ணீர் மட்டத்துக்குக் கீழே சென்றுள்ளன. இதனல், இங்கு ஒன்றன்பின் மற்ருென்ருக ஏழு நகரங்கள் நிருமாணிக்கப்பட்டிருத்தல்வேண்டும் என்பது ஆராய்ச்சியாளரின் ஆழ்ந்த கொள்கையாம். கடைசியாக நிருமாணிக்கப் பட்ட நகரம் உத்தேசமாகக் கி. மு. 2800-ஆம் ஆண்டில் அழிவுற்றிருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் கூற்று.

4. இந்நகரம் சிறந்த நவீன முறையில் அமைக்கப் பெற்றுள்ளது. இதன்கண் 13 அடி முதல் 30 அடி வரை அகலமுள்ள வீதிகள் காணப்படுகின்றன. மூன்றரை அடி முதல் ஏழரை அடி வரை அகலமுள்ள சில தெருக்கள் இப் பெரிய வீதிகளை இணைக்கின்றன. இவை யாவும் செம்மையாகவும் ஒழுங்காகவும் அமைக்கப் பெற்றுள்ளவை. தெருக் கோடிகள் வளைவுற்றுக் காண்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் குளிக்குமிடமும் அட்டிற்சாலையும் வீதிகளுக்கு அருகிலேயே விளங்குகின்றன.

5. வீதிகளில் சுட்ட மட்குழாய்களாலாய கழிவு நீர்க் கால்கள் காண்கின்றன. இக்கழிவு நீர் ஓடித் தேங்குவதற்கான ஆழமான குழிகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

6. கட்டடங்கள் எல்லாம் செங்கற்களால் இயன்றவை. பொதுக் கட்டடங்கள் சில நகரத்தின் வாய்ப்பான இடங்

135518

களில் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. 39 அடி நீளமும் 23 அடி அகலமும் உள்ள நீராடும் இடம் ஒன்று இருந்தது போலும்! இதன் நாற்புறமும் படிகளும், தாழ்வாரங்களும் இருந்த அடையாளங்கள் உள்ளன. இச்செய் குளத்துக்கு அணித்தேயுள்ள கிணற்றிலிருந்து நீர் வருவதற்கும், அழுக்கு நீர் கழிவதற்குமான செங்கற்கால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன.

7. நகரத்தின் பல இடங்களில் உயர்ந்த தூண்களை உடைய பல மண்டபங்கள் காணப்படுகின்றன. வரிசை ஒன்றுக்கு இருபது தூண்களாக நான்கு வரிசைத் தூண்களுடன் ஒரு மண்டபம் காட்சியளிக்கிறது. மற்றோரிடத்தில் காற்று வெகு நன்றாக வீசக்கூடிய அறைகளும், அவற்றைச் சூழக் கரித்துண்டுகளும், அணைந்த கொள்ளிகளும் காணப்படுகின்றன. இவ்வறைகள் கோடை, குளிர் ஆகிய இரு பருவங்களிலும் மக்களின் தங்குமிடங்களாய் இருந்திருக்கக்கூடும்.

8. இத்தகைய சிறந்த அமைப்பையுடைய நகரத்தை நிருமாணித்துக்கொண்டு வாழ்ந்துவந்த மாந்தர், பிற கலைகளிலும் வல்லுநராயிருந்தனர் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லாமல் இல்லை. இந்நகர மக்கள் கையாண்ட ஆயுதங்களும் ஆபரணங்களும் கிடைத்துள்ளன. இவையும் சிறந்தவைகளாகவே திகழ்கின்றன. சிவலிங்க பூசையும் சத்தி உபாசனையும் அக்கால மக்கள் மேற்கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வருகிறது. அவர்கள் கையாண்ட மட்பாண்டங்களின்மீது விலங்குகள் சிலவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்கள் சிற்பக்கலையில் கைதேர்ந்திருந்தார்கள் என்பது கொள்ளக் கிடக்கிறது.

9. இந்நகரிற்கிடைத்துள்ள சில பொருள்களின்மீது சில எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் சித்திர எழுத்துக்கள். தமிழ் மொழியிலும் மிக்க தொன்மையான காலத்தில் இத்தகைய எழுத்துக்கள் வழங்கிவந்ததாகக் கூறப்படுகின்றது மொஹெஞ்சோதாரோவில் கிடைத்த எழுத்துக்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்திய அறிஞர் ஒருவர், இவ்வெழுத்துக்களெல்லாம்

தமிழ்ச் சொற்களைக் குறிப்பனவே என்னும் முடிவுக்கு வந்துள்ளார். ஆகவே, ஆரிய மக்கள் சிந்து வெளியிற் பிரவேசிப்பதற்கு முன்னரே அங்குத் தமிழர்கள் வசித்து வந்தார்கள் என்னும் உண்மை வன்மையுறுகின்றது. எனவே, தமிழ் மக்களின் நாகரிகத்தின் தொன்மையை என்னென்றுரைப்பது!

பயிற்சி

I. விடை எழுதுக:—

1. 'மொஹெஞ்சோ – தாரோ' என்பது என்ன? அஃது எங்குள்ளது?
2. மொஹெஞ்சோ - தாரோவில் காணப்பட்டவை யாவை?
3. மொஹெஞ்சோ - தாரோவில் காணப்படும் கட்டடங்களின் அமைப்பு எவ்வாறு இருக்கிறது! அதனால், அறியப் படுவது யாது?
4. மொஹெஞ்சோ - தாரோ கண்டுபிடிக்கப்பட்டபின் இந்திய சரித்திரக் கொள்கையில் தோன்றிய மாறுதல் யாது?
5. மொர்ஹெஞ்சோ தாரோவுக்கும் தமிழருக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? இருப்பின் அஃது யாது?

II. வாக்கியங்கள் அமைக்க:—

நாகரிகம், வியாபித்திருந்தனர், கூற்று, ஆதிக்கம்.

III. பொருள் தருக:—

வரலாறு வல்லார், கூற்று, ஆதிக்கம், பெற்றிருந்தர்கள், அகழ்ந்து பார்த்து, பிணி, சான்று, சின்னங்கள், நிருமாணித்தல், அட்டிற்சாலை.

IV. இரண்டாம் பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.

V. பிரித்தெழுதுக:—

ஐந்தாண்டு, வன்மையுற்று, இருப்பிடமானது, பெற்றுள்ளது.

இலக்கணம்

பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுபவை.

இடம் (தொடர்ச்சி) :—தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றும்.

தன்மை

| (ஒருமை) | (பன்மை) |
|---|---|
| யான், நான் | நாம், யாம், நாங்கள், யாங்கள் |

முன்னிலை

| (ஒருமை) | (பன்மை) |
|---|---|
| நீ | நீர், நீவிர், நீங்கள் |

குறிப்பு:—நீர் என்னும் சொல் ஒருமையிலும் வரும். ஒருமையில் வரும்போது அதற்கு மரியாதைப் பன்மை என்பது பெயர்.

படர்க்கை

| (ஒருமை) | (பன்மை) |
|---|---|
| அவன், அவள், அது | அவர், அவர்கள், அவை, அவைகள் |

குறிப்பு:—தன்மை, முன்னிலைப் பெயர்கள் எண்களை மட்டும் உணர்த்தும்; படர்க்கைப் பெயர்கள் எண்ணோடு திணை, பால்களையும் உணர்த்தும்.

## 19. குசேலர் கண்ணபிரானைக் காணல்-I

### (நாடகம்)

அங்கம்-1—காட்சி-1

களம்—குசேலர் பர்னசாலை
காலம்—மாலை
பாத்திரங்கள்—குசேலர், சுசீலை

[குசேலரைச் சுசீலை வணங்குகிறாள்.]

**குசேலர்:** இறைவன் இன்னருள் புரிவான். சுசீலா, நீ ஏதோ சொல்ல விரும்புவது போலத் தோன்றுகிறது. அது யாது? சொல்.

**சுசீலை:** ஆருயிர்த் தலைவரே, அடியாள் மனத்தில் நம் சிறுவரைப்பற்றிய விருப்பம் ஒன்று நெடுநாளாய் உண்டு. அதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**குசேலர்:** அப்படியா! தடையின்றித் தெரிவிக்கலாமே!

சுசீலை: நம் சிறுவர் பிறந்த நாள் தொடங்கி வறுமைப் பிணியால் வாடுகின்றனர். அவர்களை அந்நோயி-னின்று காப்பாற்ற வேண்டுகிறேன்.

குசேலர்: பெண்ணே, அவரவர் செய்த வினையின் பயனை அவரவர் அனுபவிக்க வேண்டுமென்பதை நீ அறியாயா? இப்பிள்ளைகள் புண்ணியம் செய்திருந்-தால், செல்வர் வீட்டில் பிறந்திருக்க மாட்டார்களா? அது கிடக்கட்டும். இவர்களை வறுமைப் பிணியி-னின்றுங் காக்க வேண்டும் என்கிறாய். யான் எவ்-வாறு இவர்களைக் காக்க வல்லேன்? ஓர் உயிரை ஆக்கலும், காத்தலும், அழித்தலும் நம்மால் ஆகக் கூடியவைகளா? அனைத்தும் அவன் செயல் அன்றோ?

"கல்லினுள் சிறுதே ரைக்கும்
கருப்பையண் டத்து யிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி அண்ணல்
ஒல்லும்நின் மைந்தர்க் காவாது
ஒழிவனோ? ஒழியன்; உண்மை;
மெல்லியல்! கொண்ட துன்பம்
விடுவிடு; மறந்தும் எண்ணல்."

சுசீலை: ஆசையை அகற்றிய அருந்தலைவரே, நம் குழந்தை களை நாம் காக்க முடியும் என்று நான் கூறவில்லை. அவர்கள் அயலகத்துக் குழந்தைகள் உண்ணும் உணவுகளையும் அணியும் ஆடையாபரணங்களையும் காணும்போது அவற்றைத் தாங்கள் பெறவில்லையே என்று ஏக்கமுறுகின்றார்கள். அவர்கள்படும் கஷ்டங் களைக் காண என் மனம் சகிக்கவில்லை.

குசேலர்: சுசீலா, நீ கூறுவன உண்மையே. ஆயினும், அதற்கு நான் செய்யக் கூடியது யாது? எதற்கும் இறைவன் உளன்.

சுசீலை: எவ்வுயிரையும் காக்க ஓர் ஈசன் உண்டென்பது உண்மையே. ஆயினும், மக்கள் முயற்சி செய்யாதிருந் தால், கடவுள் அவர்களைக் காப்பது எங்ஙனம்? ஆத-லின், நம் மக்களின் துன்பத்தைப் போக்க நாம் ஒரு

சிறிது முயற்சியேனும் மேற்கொள்ள வேண்டுவது அவசியம் என்று தோன்றுகிறது. உங்கள் விருப்பம் என்னவோ?

குசேலர்: பெண்ணே, நீ சொல்வது ஒரு வகையில் உண்மையே. எந்த வகையில் நாம் முயற்சி செய்யவேண்டுமென நீ விரும்புகிறாய்?

சுசீலை: அடியாள் விருப்பம் வேறொன்றுமின்று. நீவிர் இளமைப் பருவத்தில் துவாரகை மன்னர் கண்ணபிரானுடன் சாந்தீப முனிவரிடம் ஒரு சாலை மாணக்கராய் இருந்து கல்வி பயின்றதாகக் கூறியுள்ளீர். ஆதலின், நீவிர் அப்பெருமானிடம் சென்று, சிறிது செல்வத்தைப் பெற்று வந்து நம் செல்வர்களின் வறுமையை ஒழித்தருள வேண்டுகிறேன்.

குசேலர்: பேதாய், இதுவோ உன் விருப்பம்! கற்பகத்தைச் சார்ந்து காஞ்சிரங்காயை விரும்புவது போலக் கண்ணபிரானை நண்ணி ஒரு கணமும் நிலைத்திராத செல்வத்தையா விரும்புவது? செல்வத்தின் தன்மையை நீ அறியாய் போலும்!

"சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளோர் மூக ராவர்;
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிட ராவர்;
குறிபெருங் கண்ணு ளாரும் குருடராய் முடிவ ரன்றே!"

இனியேனும் செல்வத்தின்பால் நீ கொண்ட ஆசையை அகற்று.

சுசீலை: அருந்தவத் தலைவரே, அடியாளுக்கு அற்பச் செல்வத்தின்பால் ஆசை ஒரு சிறிதும் இல்லை. நம் சிறுவர் படும் துன்பத்தைக் களைய விரும்பியே நான் செல்வத்தை நாடுகின்றேன். தேவரீர் விருப்பம் எதுவோ, அதுவே அடியாள் பாக்கியம்.

குசேலர்: பெண்ணே, நீ விரும்பியவாறு நம் செல்வர்பொருட்டுக் கண்ணபிரானிடம் செல்வோமெனின் கையுறையின்றி எவ்வாறு செல்வதென்னும் யோசனை குறுக்கிடுகிறது.

சுசீலை: தலைவீர், அதுபற்றித் தயங்கவேண்டா. அடியாள் சில நாட்களாகச் சேகரித்து வைத்திருந்த சிறிது

நெல்லை அவலாக்கி வைத்துள்ளேன். அதை இதோ கொண்டு வருகிறேன்.

(உள்ளே சென்று கந்தைத் துணியில் முடித்து வைத்திருந்த அவல் பொதியைக் கொண்டு வருகிறாள்)

இதோ நமது எளிமைக்கேற்ற இக்கையுறையைக் கொண்டு செல்லுங்கள்.

குசேலர்: (அப்பொதியை வாங்கிக்கொண்டு) பெண்ணே, யான் துவாரகை சென்று வருகிறேன். நீயும் சிறுவர்களும் ஜாக்கிரதையாய் இருங்கள்.

(குசேலர் புறப்பட்டுப் போகின்றார்.)

### பயிற்சி

இதன்கண் அடங்கியுள்ள கதையை உரை நடையில் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதுக.

### இலக்கணம்

#### பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுபவை:

வேற்றுமை:—பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அஃது எட்டு வகை. ஒவ்வொரு வேறுபாட்டு (வேற்றுமைக்கும்) காரணமாயுள்ள எழுத்துக்கு அல்லது எழுத்துக்களுக்கு வேற்றுமை உருபு என்பது பெயர்.

உதாரணம்:—

முதல் வேற்றுமை:—குசேலர் துவாரகை சென்றார். குசேலர் என்னும் பெயர்ச்சொல் எவ்விதத் திரிபும் (வேறுபாடும்) இல்லாமல் நின்றது. திரிபில்லாத பெயரே, முதல் வேற்றுமை. இதற்கு எழுவாய் வேற்றுமை என்பது பெயர்.

இரண்டாம் வேற்றுமை:—குசேலர் கண்ணபிரானைக் கண்டார். (கண்ணபிரான்+ஐ) இரண்டாம் வேற்றுமை உருபு ஐ.

மூன்றாம் வேற்றுமை:—குசேலர் சுசீலையால் அனுப்பப்பட்டார் (சுசீலை+ஆல்) - ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், கொண்டு என்பன மூன்றாம் வேற்றுமை உருபுகள்.

நான்காம் வேற்றுமை:—குசேலருக்குக் கண்ணபிரான் காட்சி அளித்தார். (குசேலர்+கு)—கு நான்காம் வேற்றுமையின் உருபு.

ஆக, பொருட்டு, நிமித்தம் என்பனவும் நான்காம் வேற்றுமையின் உருபுகளாக வரும்.

ஐந்தாம் வேற்றுமை:—கருணையில் பெரியவன் கண்ணபிரான் (கருணை+இல்) இல், இன், இருந்து, நின்று என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

**ஆறும் வேற்றுமை:**—கண்ணபிரானது (கண்ணபிரான்+ அது) அது, ஆது, உடைய என்பன ஆறும் வேற்றுமை உருபுகள்.

**ஏழாம் வேற்றுமை:**—கண்ணபிரான் மனையின்கண் குசேலர் தங்கினர். (மனையின்+கண்)—கண், இல், உள், இடம் என்பன ஏழாம் வேற்றுமையின் உருபுகள்.

**எட்டாம் வேற்றுமை:**—எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை. இது விளிக்கும் பொருளில் (கூப்பிடும் அர்த்தத்தில்) வருவதால், **விளி வேற்றுமை** என்று கூறப்படும். ஆயினும், இது ஈறு திரிதலாலும், கெடுதலாலும், மிகுதலாலும், இயல்பாதலாலும் தன் பொருளை உணர்த்தும்.

**உதாரணம்:**—அம்மா! அம்மை என்பதன் ஈறு திரிந்தது.

நண்பா! நண்பன் என்பதன் ஈறு கெட்டு ஈற்று அயல் எழுத்துத் திரிந்தது.



## 20. தேகப்பயிற்சி

தேகப் பயிற்சி செய்வோம்;—வரிசையாய்ச்
சேர்ந்து நிமிர்ந்து நிற்போம்;
வேகமாய்க் கால்வீசி—நடப்போம்:
வேங்கைபோற் பாய்ந்திடுவோம்.
சோம்பலை வெட்டியெறி;—இடுப்பைத்
தோகை மயில் போல்வளை;
'ஓம்' என் றுயிர்த்துவிடு—மார்புவிரிந்(து)
உரம்பெற் றோங்கிடவே!
கையை மடக்கிடுவோம்;—முன்னும்பின்னுங்
கையைச் சுற்றிடுவோம்;

பையவுட் கார்ந்தெழுவோம்—பஸ்கிசெய்து
பாதத் தசைவளர்ப்போம். 3

வேர்த்துச் சதைபுரளக்—கசரத்து
வேண்டு மட்டுஞ்செய்வோம்;
சேர்த்துக் கரங்களெல்லாம்—வட்டமாய்ச்
சேர்த்து நடமிடுவோம்! 4

—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இப்பாடல் இராமசந்திரபுரம் அன்பு நிலையத்தார் வெளியிட்டுள்ள 'குழந்தை இன்பம்' என்னும் இசை நூலிலிருந்து எடுத்து அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது.

## 21. முதல் உதவி

1. மக்கள் வாழ்க்கையில் காயமுறுதல், சுளுக்கேறுதல், எலும்பு முறிதல் போன்ற விபத்துக்களும், நீர்விபத்து, தீ விபத்துப் போன்றவையும் நேர்வது இயல்பு. இத்தகைய விபத்துக்கள் ஏற்படும் இடங்களில் பெருங்கூட்டம் கூடுவதும் இயல்பே. ஆனால், விபத்துக்குள்ளானவர்களுக்குச் செய்யவேண்டுவது யாது என்று தோன்றாமல், அங்குக் குழுமியிருப்பவர் விழிப்பதும் இயற்கையே. விபத்துக்குள்ளானவர்க்கு உடனே வைத்தியரைக்கொண்டு தகுந்த சிகிச்சையளிக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

2. ஆனால், விபத்து உண்டான இடத்திலேயே வைத்தியர் இருக்கமாட்டார் அல்லவா? வைத்தியரை அழைத்து வரவோ, அன்றி விபத்துக்குள்ளானவரை வைத்தியரிடம் கொண்டு செல்லவோ சிறிது நேரமாகுமாயின், அதற்குள் சில விபத்துக்கள் மிகவும் அபாயகரமாக மாறிவிடக்கூடும். ஆதலால், விபத்துக்குள்ளானவர்க்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்படுவதற்கு முன்பே தக்க உதவியளித்தல் அவசியம். அத்தகைய உதவியே முதல் உதவி எனப்படும். அவ்வுதவியை எல்லாரும் அளித்தல் இயலாது. முதல் உதவியளிக்கப் பயிற்சி பெற்றவரே அதனை அளிக்கக்கூடும். ஒவ்வொரு பள்ளியிலும் முதல் உதவிப் பயிற்சி அளிக்கக்கூடிய சாரணச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சங்கங்கள் இருக்கும். அச்சங்கங்களிற் சேர்ந்து முதலுதவியளிக்கும் பயிற்சி பெறவேண்டுவது பள்ளியிற் பயிலும் மாணவ மாணவிகளின் கடமையாகும்.

3. முதல் உதவிப் பயிற்சி பெறுபவர் அறிந்திருக்க வேண்டிய சில முன்னெச்சரிக்கையான விஷயங்களைப்பற்றிக் கவனிப்போம்: முதல் உதவி மாணவன், விபத்துக்களின் காரணங்களையும் குறிகளையும் உற்று நோக்கி ஆராய்ந்தறியும் திறம் பெற்றிருத்தல் வேண்டும். அர்த்தமற்ற வினுக்களை எழுப்பாமலே விபத்தின் வரலாற்றையும், குணங்குறிகளையும் தானே ஊகித்தறியும் வன்மை பெற வேண்டும். விபத்து ஏற்பட்ட இடத்திலேயே கிடைக்கக் கூடிய பொருள்களைக்கொண்டே முதல் உதவியளித்தற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும் சமயோசித புத்தி வேண்டும். விபத்துக்குள்ளானவர்க்கும் அங்குச் சூழ நின்று வேடிக்கைப் பார்ப்பவர்க்கும் அவர்கள் செய்ய வேண்டியவற்றை வெளிப்படையாகக் கூறும் வழக்கம் அமைந்திருக்க வேண்டும். ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றுள் எது மிகவும் ஆபத்தானது என்று பிரித்தறியும் சக்தியைப் பெற்றிருத்தல் அவசியம். முதல் உதவியளிக்கப் பயிலுபவர் இத்தகைய திறமைகளைப் பெறுவதில் கண்ணுங்கருத்துமாயிருப்பது அத்தியாவசியம்.

4. இனிக் காயமுற்ருர்க்கு முதல் உதவி அளிப்பதிற் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆராய்வோம்: முதலாவதாகக் காயம் எதனுல் ஏற்பட்டதோ, அதைக் கூடுமானுல் உடனே அகற்றவேண்டும். உதாரணமாக, ஒரு சோடா புட்டி வெடித்துக் காயமுண்டாக்கியதாக வைத்துக்கொள்வோம். காயமுற்ற இடங்களைக் கவனித்துப் பார்த்துக் கண்ணுடித் துண்டுகள் காயத்தினுள் இருந்தால் அவற்றை முதலில் அகற்ற வேண்டும்.

5. இரண்டாவதாகக் காயங்கள் எத்தன்மையானவை ஆயினும், இரத்தக் கசிவு இருக்குமாயின், அதை நிறுத்துவதில் முதலிற் கவனம் செலுத்த வேண்டும்.

6. மூன்ருவதாகக் காயமுற்றவர் நன்ருக மூச்சு விடக்கூடிய நிலையில் படுக்க வைக்கப்படவேண்டும். ஒரு வேளை மூச்சு நின்றிருந்தால், உடனே சுவாசித்தற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

7. அடுத்தபடி பெருங் காயம் உற்றவர்களாயிருப்பின் அவர்களுடைய தேக உஷ்ணம் சமநிலைக்குக்கீழ்ச்சென்று,

விடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். தோல் சிதைந்து இருக்குமாயின், இச்சிதைந்த பகுதியைச் சுத்தமான துணி-யாற் கட்டவேண்டும். அசுத்தமான துணியாற்கட்டினுல், அவ்வசுத்தம் இரத்தத்திற்கலந்து ஆபத்தை விளைவிக்கக் கூடும். நமது உடலின் இரத்த ஓட்டத்தைப்பற்றி முதல் உதவி அளிப்பவர் அறிந்திருத்தல் வேண்டும்.

8. கட்டுக்கள் கட்டப்பட்ட பின் காய முற்றவரை வைத்திய சிகிச்சைக்காக அவ்விடம் விட்டு அகற்றவேண்டி-யிருப்பின், தக்க சாதனத்தில் இருத்தி அகற்றவேண்டும். கண்டபடி தூக்கிச் சென்ருல், ஆபத்து அதிகரிக்கக்கூடும்.

9. சிலர் காயமுற்றவர்க்கு நோய் தெரியாதிருக்கும் என்றெண்ணிச் சாராய வகைகளைப் பருகுவதற்களிக்கின்றனர். வைத்திய சிகிச்சை நடைபெறுவதற்கு முன் சாராய வகைகளைக் கொடுப்பது தவறு. சிகிச்சைக்குப் பிறகும் வைத்தியர் அனுமதியின்றி அவற்றை அளித்தல் கூடாது. சிகிச்சைக்கு முன் சுடச்சுடக் காப்பியோ அன்றித் தேநீரோ கொடுப்பதுதான் நலம்.

10. காயங்களுக்கு முதல் உதவி அளிப்பவர் வைத்தியர் செய்ய வேண்டிய சிகிச்சையைத் தாம் செய்யத் துணிதல் பேராபத்தாய் முடியும்; தம் அளவு தெரிந்து முதல் உதவி அளித்தலே சிறந்த முறையாகும்.

### பயிற்சி

*I* விடை தருக:—

1. முதல் உதவி மாணவன் அறிந்திருக்க வேண்டுபவை எவை?
2. 'முதல் உதவி' என்பது என்ன?
3. காயமுற்றவர்க்கு அளிக்கப்படவேண்டிய முதல் உதவிகள் யாவை?

*II* பொருள் தருக.—இயல்பு, குழுமி, சிகிச்சை, அளித்தல், அவசியம், பள்ளி, பயிற்சி, முன்னெச்சரிக்கை, குறிகள், வெளிப்படையாக.

*III*. வாக்கியங்கள் அமைக்க:—

கண்ணுங்கருத்துமாய், ஆராய்வோம், அகற்றல்வேண்டும், சுவாசித்தல், சாதனம், பருகுவதற்கு.

*IV*. 'மாணவன்' என்னும் சொல்லை எட்டு வேற்றுமைகளிலும் அமைக்க.

**வினைச்சொல்:**—வினைச்சொல்லாவது, பொருளின் செயலையும் அச்செயல் நிகழ்ச்சியின் காலத்தையும் தெரிவிப்பதாகும்.

**உதாரணம்:**—மாணவன் வந்தான். இவ்வாக்கியத்தில் வந்தான் என்னும் வினைச்சொல் மாணவனுகிய பொருளின் செயலையும், அச்செயலின் காலத்தையும் தெரிவிக்கின்றது.

## 22. 'வரப்புயர!'

1. சோழ மண்டலத்தையாண்ட பிற்கால மன்னருட் சிறந்தவர், குலோத்துங்க சோழர். அவருக்கு மகுடாபிஷேகம் நடந்தபோது தமிழ் நாட்டிலிருந்த தமிழ்ப் புலவர் பலரும் அங்கு வந்து கூடினர்; கவிகள் பாடி அரசரை வாழ்த்தினர்; அத்தருணம் அவ்வையார் என்னும் தமிழ் மூதாட்டியாரும் அங்கு வந்திருந்தார்.

2. அவரைக் கண்ட அனைவரும் 'அம்மையீர் நீவிரும் அரசரை வாழ்த்த வேண்டும்' என்று வேண்டினர். உடனே அவ்வம்மையார் 'வரப்புயர!' என்று கூறிவிட்டுப் பேசாதிருந்தார். அப்போது அங்கிருந்தார் அவர் வாழ்த்தவில்லையென்று எண்ணி, மறுபடியும் அவரை வாழ்த்தும்படி வேண்டினர். அவ்வம்மையார் மீண்டும், 'வரப்புயர! வரப்புயர' என்று கூறி அமர்ந்து, 'யான் முக்காலும் வாழ்த்திவிட்டேன்' என்று கூறினர்.

3. சபையார் அவ்வம்மையார் கூறிய தொடரின் பொருள் விளங்காமல், 'எவ்வாறு வாழ்த்தினீர்கள்?' என்று கேட்டனர்; அது கேட்ட அவ்வையார், 'வரப்புயர' என்று வாழ்த்தினேனே! நீங்கள் அதைக் கேட்கவில்லையா? என்ருர்.

4. அவ்வாழ்த்து மொழிகளின் உட்பொருளை அறிய மாட்டாத அச்சபையார், 'அம்மணி! நீவிர் கூறிய வாழ்த்து மொழிகளின் கருத்தை யாங்கள் அறியக் கூடவில்லை. அன்பு கூர்ந்து அதை விளக்கவேண்டும்' என்றனர். அவ்வையார்,

**'வரப்புயர நீருயரும்;**
**நீருயர நெல்லுயரும்;**
**நெல்லுயரக் குடியுயரும்;**
**குடியுயரக் கோனுயரும்;**
**கோனுயரக் கோனுயர்வான்.**

என்பதே யான் கூறிய வாழ்த்துச் சொற்களின் உட்பொருள்,' என்று விளக்கினர். அதுகேட்ட அனைவரும் ஆச்சரியமுற்று, அவ்வையாரைப் புகழ்ந்தனர். அரசர் அவ்வம்மையாருக்கு நல்ல விருந்திட்டுத் திரண்ட பொருளும் கொடுத்து அனுப்பினர். இக்காலத்தில் வழங்கிவரும் 'குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்' என்னும் பழமொழியும் இதுபற்றி எழுந்ததேயாம்.

### பயிற்சி

*I.* விடை எழுதுக:—

1. அவ்வையார் யாருடைய திருமணத்திற்குச் சென்றிருந்தார்?
2. அரசரை அவ்வையார் எவ்வாறு வாழ்த்தினர்?
3. அவ்வையார் கூறிய வாழ்த்து மொழிகளின் பொருள் யாது?

*II.* வாக்கியங்கள் அமைக்க:—

மகுடாபிஷேகம், மூதாட்டியார், முக்காலும், கருத்து, ஆச்சரியமுற்று.

*III.* முதல் பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களை ஒரே வாக்கியமாக எழுதுக.

### இலக்கணம்

#### வினைச்சொல் (தொடர்ச்சி)

*1.* செயப்படு பொருள் குன்றா வினை:—செயப்படு பொருள் குன்றா வினையாவது, செயப்படு பொருள் உள்ள வினையாம்.

உதாரணம்:—அவ்வையார் அரசனை வாழ்த்தினர்.

குறிப்பு:—செயப்படு பொருள் என்பது, பொருளின் செயலை ஏற்பது. அதனை உடைய வினையே செயப்படு பொருள் குன்றா வினை. உதாரண வாக்கியத்தில் வாழ்த்தினர் என்னும் வினையின் செயப்படு பொருளாக அரசனை என்னும் சொல் நிற்பது காண்க.

*2.* செயப்படு பொருள் குன்றிய வினை:— செயப்படு பொருள் இல்லாத வினையே செயப்படு பொருள் குன்றிய வினை என்று கூறப்படும்.

உதாரணம்:—அவ்வையார் வந்தார். இதில் வந்தார் என்பது அவ்வையாராகிய பொருளின் செயல். அச்செயல் ஏற்கும் செயப்படு பொருள் எதுவும் இல்லை. எனவே, இது செயப்படு பொருள் குன்றிய வினையாம்.

# 23. கடிதம்

[சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்]

அன்புள்ள தங்கட்குச் சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாக! தாங்கள் வரைந்து விடுவித்த கடிதமும் பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடஞ் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப்பெற்றன கொள்க. அன்றி, நான் இத் திசைக்கண் வந்தபின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னை எனில், நான் இங்ஙனம் வந்த பின்னர்ச் சிதம்பர விஷயத்தில் தோத்திரமாலைகளும் சாத்திர மாலைகளுமாகச் சுமார் 200 மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க, முன்னோர் கடிதத்தில் நான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ்சென்ற பின்னர் அனுப்புகிறேன்; தற்காலம் என்னினைவு விரிதற்கின்மையால், தாங்கள் தேகத்தைச் சாக்கிரதையாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். நமது அன்பர் ம-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார், ம-ா-ா-ஸ்ரீ செல்வராய முதலியார் முதலானவர்களுக்கும் நான் அவசியம் இரண்டு மாதத்தில் அவ்விடம் வருவதாகக் குறிப்பித்தல் வேண்டும். ம-ா-ா-ஸ்ரீ நாய்க்கர் சாமிக்குப் பித்த விசேஷத்தால் சிறிது குணம் விகற்பித்து அடிக்கடி சொல்லாமற்போவதும், பின்பு வருவதுமாக இருக்கிறார். இது நிற்க. தெ. ஆறுமுகப்பிள்ளை அவர்களுக்கும் சுந்தரம்மாளுக்கும் இன்னும் ஒரு மாதஞ் சென்ற பின்னர் நான் சொன்னபடி செய்விப்பதாகத் தெரியப்படுத்த வேண்டும். அன்றியும், செ. விசாலாக்ஷி அம்மையும் அவர் புருஷரும் இவ்விடத்தில் நேர்ந்த சொல்ப வரும்படி போதாமையென்று சுமார் 20 நாட்களுக்கு முன்னரே இவ்விடம் பிரயாணப்பட்டு அவ்விடம் வந்தார்கள். இது நிற்க.

இராமலிங்க சாமி என்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலின், இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்யமும் சிவானுபவமும் அன்றி, மற்றவை-களை மனத்தின்கண் மதியாதிருத்தல் வேண்டும்.

சிரஞ்சீவி! சிரஞ்சீவி!!

குரோதன வரு }
பங்குனி மீ 17 உ }

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஒட்டல், ம-ா-ா-ஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு, ஏழு கிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை தெருவில் ம-ா-ா-ஸ்ரீ ரத்தின முதலியாரிடம் சேர்ப்பிக்கக் கோருகிறேன்.

பயிற்சி

I. விடை எழுதுக;—

1. இக்கடிதம் யார் யாருக்கு எழுதியது?

2. இக்கடிதத்தில் அடங்கியுள்ள விஷயத்தைச் சுருக்கமாக உன் சொந்த நடையில் எழுதுக.

II. பொருள் எழுதுக:—

கடாக்ஷம், தீர்க்காயுள், சம்பத்து, போந்த, விகற்பித்து, ஆரவாரம், ஜீவகாருண்யம்.

இலக்கணம்

வினைச்சொல்—காலம்

**இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம்** எனக் காலம் மூன்று வகையாம். அம்மூன்று காலங்களும் இடை நிலைகளால் அறியப்படும். இடை நிலையாவது, சொல்லின் இடையில் நிலைத்திருக்கும் உறுப்பு.

**இறந்த காலம்:**—இறந்த காலமாவது, செயல் நடந்து விட்டதை அறிவிப்பது. இறந்த காலத்தைத் தெரிவிக்கும் இடை நிலைகள் ந், ட், ற், இன் என்பன.

**உதாரணம்:**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செய்தான் | — | செய் | + | த் | + | ஆன் | — | ந் |
| உண்டான் | — | உண் | + | ட் | + | ஆன் | — | ட் |
| தின்றான் | — | தின் | + | ற் | + | ஆன் | — | ற் |
| ஆடினான் | — | ஆடு | + | இன் | + | ஆன் | — | இன் |

**நிகழ்காலம்:**—இப்பொழுது நடக்கும் செயலைத் தெரிவிப்பது நிகழ்காலம். **கிறு, கின்று, ஆநின்று** என்பன நிகழ்கால இடை நிலைகள்.

உதாரணம்:

| | | |
|---|---|---|
| செய்கிறான் | செய் + கிறு + ஆன் | —கிறு |
| செய்கின்றான் | செய் + கின்று + ஆன் | —கின்று |
| செய்யாநின்றான் | செய் + ஆநின்று + ஆன் | —ஆநின்று |

எதிர்காலம்:— இனி நடக்கும் செயலை அறிவிப்பது எதிர்காலம்; ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

உதாரணம்:

காண்பான்—காண் + ப் + ஆன்—ப்

செய்வான் —செய் + வ் + ஆன்—வ்



# 24. குசேலர் கண்ணபிரானைக் காணல்—II
## (நாடகம்)
### அங்கம்-I—காட்சி-2

களம்—கண்ணபிரான் அரண்மனை வாயில்
காலம்—முற்பகல்
பாத்திரங்கள்—குசேலர், கண்ணபிரான், வாயில் காப்போர்.

[குசேலர் அரண்மனை வாயிலை அடைகின்றார். அங்குக் காவலர்கள் நிற்கின்றார்கள்.]

குசேலர்: வாயிற்காவலரே, யான் ஓர் அந்தணன். என் பெயர் குசேலன் என்பர். இளமையில் சாந்தீப முனிவரிடம் கண்ணபிரானோடு ஒரு சாலை மாணாக்கனாய்க்-கல்வி பயின்றவன்; அவரைத்தரிசிக்க விரும்பி வந்துள்ளேன். ஆதலின், என் வரவைத் தயவு செய்து கண்ண-பிரானுக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

(காவலாளர் நகைக்கின்றனர்.)

முதற்காவலன்: (நகைத்துக்கொண்டே) ஐயா, பிராமணரே, நீரும் உம் கோலமும் நன்று! வெகு நன்று! நீர் அரச அவையை அடைய விரும்புவது அதனினும் நன்று! பாவம்! மூப்பின் மிகுதியால் உணர்வு அற்றீர் போலும்!

இரண்டாங்காவலன்: பிராமணரே, நீர் கூறுவது உண்மை-யாய் இருக்கலாம். அவருடைய சகபாடியாய் நீர் இருந்த காலம் வேறு; இது வேறு. மணி முடி தரித்த மன்னர் பலர் நெடுங்காலமாகக் காத்திருந்தும் எங்கள் அரசரைக் காணமுடியவில்லை. அங்ஙனமிருக்க, நீர் எவ்வாறு அவரைத் தரிசிக்க முடியும் என்பதை யோசித்துப்பாரும்!

மூன்றாங்காவலன்: கிழவரே, உமது நிலைமையையும் எங்கள் அரசர் நிலைமையையும் உன்னிப் பார்த்தீரா? அரச-ரைக் காணவேண்டுமானால் அதற்கேற்ற தகுதி இருக்க வேண்டாவா? அஃதின்றி அவரைக் காண்பதெங்ஙனம்? பாலிய நட்பு என்கிறீர். அஃது உண்மையாயின் அவர் ஒரு முறையாவது உம்மை விரும்பியழைத்திருக்க மாட்டாரா? அந்தோ! நீர் எங்கள் இறைவரைக் காணவிரும்புவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போலாம்! ஆசை வெட்கம் அறியாதல்லவா? ஐயா, வீணே நீர் இங்கு நின்றுகொண்டு இருப்பதைவிட, வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போவதே நலம்.

குசேலர்: (தமக்குள்) இது என்ன! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல ஆயிற்றே! முன்பின் யோசியாமல் மனைவி சொற்கேட்டு இங்கு வந்துவிட்டோம்! மன்னனைக் காணவேண்டுமானால், ஆரமாம்! மதாணியாம்! பட்டாம்! பீதாம்பரமாம்! ஊர்தியாம்! இவற்றை யாம் கேட்டும் அறிந்திலோமே! சரி; 'எண்ணித் துணிக

கருமம்; துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்றபடி இம்முயற்சியில் தலையிட்ட பிறகு பின் வாங்குவது நலமன்று. பார்ப்போம், இறைவன் கருணை எவ்வாறு இருக்கிறதோ! (அசைவற்று நிற்கிறார்.)

துவாரபாலகன் : (காவலரை அணுகி) கயவர்களே, இம்முனிவரை ஏன் இகழ்கின்றீர்கள்? மாதவராய இவருக்கு நம்மால் ஆகவேண்டுவது என்ன? நமது அரசராலே-தான் ஆகவேண்டுவது என்ன? துறவிக்கு வேந்தன் துரும்பல்லவா? (குசேலரை நெருங்கி) மாதவத் தலை-வரே! இப்பேதைகள் கூறிய மொழிகளை நீங்கள் பொருட்படுத்த வேண்டா. இதோ யானே சென்று இறைவருக்கு உங்கள் வரவைத் தெரிவித்து வருகின்-றேன். (ஓர் ஆசனம் அளித்து) நான் திரும்பும் வரையில் இப்பீடத்தில் அமர்ந்திருங்கள்.

[விரைந்து செல்கின்றான்.]

[திரை]

## அங்கம்–II—காட்சி-1

**களம்** - கண்ணபிரான் அந்தப்புரம்.

**காலம்** - நண்பகல்.

**பாத்திரங்கள்** - கண்ணபிரான், குசேலர், பட்ட மகிஷியர், தோழியர் முதலியவர்.

[கண்ணபிரான் ஒரு பீடத்தின்மீது அமர்ந்திருக்கின்றார். பட்ட மகிஷியர் சமீபத்தில் நிற்கின்றனர்.]

துவாரபாலகன் : (கண்ணபிரானை வணங்கி) மாமறைத் தலைவரே, போற்றி! அரண்மனை வாயிலில் அந்தணர் ஒருவர் வந்து காத்திருக்கிறார். அவர்,

"ஆதிநாளையில் நும்மோடே அருங்கலை கற்று ளாராம்;
போதவும் சிறந்த நட்புப் பூண்டுகொண் டவராம்; கந்தை
மேதகக் கொண்ட நீரார்: மெய்ம்மறை யவர்குலத்தார்;
கோதறு குணத்தின் மிக்கார்: குசேலர்
என் றியம்பினர் பேர்."

கண்ணபிரான் : (பீடத்தினின்று விரைந்து எழுந்து) என்ன! குசேல முனிவரா! உடனே சென்று அவரை அழைத்துவா! அழைத்துவா! அழைத்துவா!

[துவாரபாலகன் விரைந்து செல்கின்றனன்.

குசேலர் : (தம்மை நோக்கி வேகமாய் வருகின்ற துவார பாலகனை விளித்து)அப்பா, என்ன சொன்னார் துவாரகை மன்னர் ? என்னைக் காணும் விருப்பம் இருக்கிறதா அவருக்கு ?

துவார : தவ சிரேஷ்டரே, பேச நேரம் இல்லை ! உடனே நீர் புறப்பட்டு வராமல் காலம் தாழ்த்துவீராயின், கண்ணபிரானே இங்கு வந்து விடுவார். புறப்படும் உடனே.

[குசேலரும் துவாரபாலகனும் செல்கின்றனர். கண்ணபிரான் பீடத்தில் அமர்ந்திருக்கிறார். குசேலர் உள்ளே வருகின்றார்.]

கண்ண : வரவேண்டும் ! வரவேண்டும் ! (பீடத்தினின்று எழுந்து குசேலர் அடிகளில் வணங்குகிறார்.) இந்நாள் பாக்கியமுற்றது ! யான் ஆக்கிய அறம் இன்றே பலித்தது ! உங்கள் வரவை என்னென்று புகழ்வது ! யான் இயற்றிய தவமோ ! இத்துவாரகை செய்த தவமோ ! நீர் இங்கு எழுந்தருளப்பெற்றதற்கு எது காரணம் என அறிகிலேன் ! (ஓர் உன்னத பீடத்தைக் காட்டி) இதோ !இப்பீடத்தில் அமரும். (பணியாள் ஒருவனைப் பார்த்து) இவருக்குச் சீக்கிரம் ஸ்நானத்துக்கு ஏற்பாடு நடக்கட்டும்.

பணியாள் : இதோ சுவாமி ! (வேகமாகச் செல்கிறான்; சிறிது நேரத்தில் திரும்பி வந்து) அரசரே, உங்கள் கட்டளைப்படி யாவும் சித்தமாயிருக்கின்றன.

கண்ண : ஆருயிர் நண்பரே, எருந்திரும். (குசேலரைக்கை பிடித்து அழைத்துச்செல்கிறார். ஸ்நானம் செய்வித்த பிறகு, உயர்ந்த பட்டாடை அணியச் செய்து, உணவு படைத்து, தாம்பூலம் தந்து, அமளியைக் காட்டி) மும்மலமறுத்த முனிவரே, இம்மஞ்சத்தின்மீது அமரும்.

[குசேலர் அமர்கின்றார்.]

இம்மலரடிகள் இரண்டும் நீண்ட தூரம் நடந்ததால் மிகவும் வலிக்கும். பாவம் ! (பாதங்களை வருடுகிறார்.) அருந்தவ சிரேஷ்டரே, நாம் சாந்தீப முனிவரிடம் கல்வி கற்றபோது நிகழ்ந்தவை நினைவிலிருக்கின்றனவா ?

குசேலர் : ஆயர் குலக் கொழுந்தே! அவையனைத்தும் நினைவிலிருக்கின்றன.

கண்ண : குசேலரே, உம்மனைவியார் நற்குணங்கள் பொருந்தியவரா? உமது வருவாய்க்குத் தக்கவாறு செலவிடக் கூடியவர்தாமா? உமக்கு மக்கள் எத்தனை பேர்கள்? அஃதிருக்கட்டும். அனேக நாட்கள் கழித்து என்னைக் காண வந்தீரே! எனக்கு என்ன கொண்டு வந்தீர்? (குசேலர் மௌனம்) என்ன மௌனமாய் இருக்கின்றீர்! நீர் சும்மா வந்தாலும், உம் மனைவியார் உம்மை வெறுங்கையராய் அனுப்பியிருக்க மாட்டாரே! (குசேலரின் கந்தையைச் சோதித்து அவல் பொதியை எடுத்துக் கொள்கிறார்.) ஆம்! நினைத்தேன், எனக்கு மிக விருப்பமுள்ள பொருளே தான் கொண்டு வந்திருப்பீரென்று. அஃது உண்மையாயிற்று. ஆஹா! இஃது எனக்கு மிகவும் பிடிக்கும்!
"செறிதரு சுவைத் தீ தென்றும் தேவர்க்கும் அரியதாகும், அறிதருவிருப்பின் இல்லின் அமைத்ததே; பழையதும் அன்று." கடையில் வாங்கும் அவல் இவ்வளவு நேர்த்தியாய் இராது. இது பதமுற வறுத்து, வெள்ளிதாகக் குற்றப்பட்டது; ஒன்றுகூட முனை முறியாமல் செவ்விதாய் உள்ளது. (ஒரு பிடியை வாயில் இட்டுக்கொள்கிறார்.) நண்பரே, நீண்ட தூரம் பிரயாணம் செய்திருக்கிறீர். நீர் தூங்கும். பிறகு பேசிக் கொள்ளலாம்.

[திரை]

## அங்கம்-II— காட்சி-2

களம்-கண்ணபிரான் அரண்மனை
காலம்-காலை
பாத்திரங்கள்-கண்ணபிரான், குசேலர், பெண்டிர்.

குசேலர் : ஆருயிர் நண்பரே, நான் வந்து நாட்கள் பல ஆகிவிட்டன. என்னை இதுவரையில் பிரிந்தறியாத மனைவி, மக்கள் வருந்துவார்கள். நான் என் ஊருக்குச்சென்று வருகிறேன்.

கண்ண : ஆம்! ஆம்! உண்மையே. உமது விருப்பம் அதுவாயின் உடனே புறப்படலாம். குசேலர் புறப்படுகிறார்; (கண்ணபிரான் வாயில் வரையில் செல்கிறார்.) அந்தண

ரே, மறந்துவிடாதீர். உம் மனைவியார் முதலிய வருக்கு எனது ஆசி கூறும்.

குசேலர்: நல்லது. அவ்வாறே செய்கிறேன். நான் போய் வருகிறேன். [ஒருவரை ஒருவர் வணங்குகின்றனர். குசேலர் புறப்பட்டு வீதி வழிச் செல்கின்றார்.]

ஒருத்தி: (மற்றொரு பெண்ணுக்குக் குசேலரைக்காண்பித்து) சாவித்திரி, இவரைப்பார். இவர்தான் கண்ணபிரான் வீட்டுக்கு விருந்தினராய் வந்திருந்தவர். வந்த மாதிரி யே திரும்பிச் செல்கிறார் பாவம்!

மற்றொருத்தி: ஆம், ஆம்! பாவம்! இவருக்கு நம் கண்ண பிரான் செய்த உபசாரத்தைப் பற்றி மட்டும் ஊரெல் லாம் பேச்சாயிருந்ததே! இவர் காலில் விழுந்தாராம்; கட்டி அணைத்தாராம்; ஆடினாராம்; பாடினாராம்; புகழ்ந்தாராம்; போற்றினாராம். முடிவில் ஒன்றுந் தாராமல் வந்த மாதிரியே அனுப்பிவிட்டாரே! இந்த மாயவரை நம்பி இவர் வந்தாரே!

[திரை]

### அங்கம்-II—காட்சி-3

| |
|---|
| களம்-குசேலர் இல்லம் |
| காலம்-மாலை |
| பாத்திரங்கள்-குசேலர், சுசீலை. |

குசேலர்: ஆம்; இதோ நம்முடைய ஊரின் சமீபமாக வந்து விட்டோம். (திடீரென்று அவருடைய கந்தை கனக வஸ்திரமாகிறது. துளசி மாலை நவமணி மாலையாகி றது. உடலம் பூரிக்கிறது.) ஆ என்ன ஆச்சரியம்! நம் கந்தை பீதாம்பரமாகிவிட்டதே! இதென்ன! நமது துளவமணி நவமணியாய் விளங்குகின்றதே! எல்லாம் கண்ணபிரான் திருவிளையாடலே! அவருடைய நட்பை என்னென்று புகழ்வது! நமது சிறு குடில் இருந்த இந்த இடத்தில் இம்மாளிகை எப்படி வந்தது!

சுசீலை: (அம்மாளிகையிலிருந்து வெளி வந்து) நாதரே, வாருங்கள். இவற்றையெல்லாம் பார்த்தீர்களா? எல்லாம் கண்ணபிரான் அருளின் திறமன்றோ?

குசேலர்: அன்பர் எண்ணிய எண்ணியாங்கு அளிக்கும் அக் கண்ணபிரானுடைய அருட்சிறப்பை அறியத்தான் நம்மால் முடியுமா? புகழத்தான் கூடுமா? நாம் அனைவரும் அவரை வாழ்த்தி வணங்குவதே நாம் செய்யக்கூடியதாம். [வணங்குகின்றனர்.]

[திரை]

## பயிற்சி

விடை தருக:—

1. இந்நாடகத்தின் கதையைச் சுருக்கமாக உரை நடையில் எழுது (இரண்டு பக்கங்களுக்கு மேல் வேண்டா.)
2. கண்ணபிரானுக்குத் தம் வரவைத் தெரிவிக்குமாறு கூறிய குசேலருக்குக் காவலர் கூறியவை யாவை?
3. காவலர் குசேலரைப் பரிகசித்தபோது அவர் மனத்துள் தோன்றிய எண்ணங்கள் யாவை?
4. குசேலரைப் பற்றித் துவாரபாலகன் கூறியது என்ன?
5. கண்ணபிரான் குசேலரை எவ்வாறு உபசரித்தார்?
6. குசேலர் கொண்டு சென்ற அவலைக் கண்ணபிரான் எவ்வாறு புகழ்ந்தார்?

## இலக்கணம்

### முற்று வினை

பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் முற்று வினை; அல்லது வினை முற்று எனப்படும். பொருள் முடிவதற்கு மற்றொரு சொல்லை வேண்டாமல் நிற்கும் வினைச்சொல்லே வினைமுற்றாம்.

**உதாரணம்:** குசேலர் நின்றார்.

### எச்ச வினை

பொருள் முடிவதற்கு மற்றொரு சொல்லை வேண்டி நிற்கும் வினைச்சொல் எச்ச வினை எனப்படும்.

**உதாரணம்:**—வந்த, வந்து—இவை பொருள் முடிதற்கு மற்றொரு சொல்லை வேண்டி நிற்கின்றன.

எச்ச வினை பெயர் எச்சம், வினைஎச்சம் என இருவகையாம்.

### பெயர் எச்சம்

பெயரோடு கூடினபோது பொருள் முடியும் எச்சவினையே பெயர் எச்சமாம்

**உதாரணம்:** பேசிய காவலன்
படித்த பாடம்

### வினை யெச்சம்

மற்றொரு வினையோடு கூடியபோது பொருள் முடியும் எச்ச வினையே வினை யெச்சம்.

**உதாரணம்:** கண்டு பேசினான்.
படித்து முடித்தான்.



## 25. இரகுராமரும் பரசுராமரும்

திருமகளாம் சானகிகல் யாணம் செய்து,
செயமுளதம் பியர்க்கும்விவா கங்கள் செய்து
வரும்வழியில், சகுனவிரோ தத்தி னாலே
மலைபோல முனிபரசு ராமன் வந்தான்;
பெருகுதச ரதன்கண்டு நடுங்கும் போது,
பிரசண்ட கோதண்ட ராமன் தானும்
ஒருவரும்நேர் இல்லையென வில்லை யேந்தி,
உரம்சொல்வா னுடனேஉத் தரம்சொல் வானே.

### கண்ணிகள்

மண்ணில் அரசர்போல் காணுகி றாயேஆசீர்
வாதம் ரகுராமா!
கண்ணினில் வேதியர்போல் தோணுகி றாயேநமஸ்
காரம் பரசுராமா! 1
தாடகை எனும்பெண்மேல் சண்டை கொளலரசர்க்குத்
தான்விதி யோராமா!
வேடர்கள் தொடும்வில்லைப் பிராமணர் தொடத்தலை
விதியோ பரசுராமா! 2
ஆனால்பெண் கொலைசெய்யல் ஆமோ உனக்கிதுவும்
அடைவோ ரகுராமா!

தானகப் பெற்றெடுத்த தாயைக் கொலைசெய்தாயே
தகுமோ பரசுராமா! 3
தருமமா என்னைப்பெற்ற தகப்பன்சொற் படிசெய்தேன்
தாய்க்கொலை யோராமா!
குருவார்த்தை தடுக்காமல் நானும்செய் தேனதுபெண்
கொலையோ பரசுராமா! 4
சொத்தைவில் ஒடித்ததை மெத்தமெத் தவேஎண்ணித்
துள்ளாதே ரகுராமா!
கற்றவே தியன்என்று பொறுத்தேன்பொறுத்தேன்
குதிக்காதே பரசுராமா! 5
அந்தவில் வளைத்தாயே இந்தவில் வளைஇந்தா
அடடா ரகுராமா!
இந்தா வளைத்தேன் இதில் வைத்தஅம் புக்குவழி
எங்கே பரசுராமா! 6
அம்புக்கு வழிஇல்லை நான்பிரா மணன் இனி
அனுக்கிர கம்செய்ராமா!
பின்புத்திக் காரன் இரு பிறப்பன் உன் னேடே என்ன
பேச்சுப் பரசுராமா! 7
சந்தி சபதங்கள் எல்லாம்உன் சரத்துக்கே
தந்தேன் ரகுராமா!
வந்த வழிபார்த்துக்கொண் டோடிப்போ வதேநல்ல
மார்க்கம் பரசுராமா! 8

இராம நாடகம்] [சீகாழி அருணசலக் கவிராயர்.

பயிற்சி

பாட்டில் அமைந்துள்ள விஷயத்தை உரை நடையில் எழுதுக.

## 26. மோட்டார் வண்டிகள்

1. ஒரு மனிதன் மணிக்கு நான்கு மைல் வீதம் நடக்கக்கூடும். வண்டியை இழுத்துச் செல்லும் மாடு, மணிக்கு ஐந்து அல்லது ஆறுமைல் வீதத்துக்கு மேல் செல்லாது. வண்டியிற் பூட்டிய குதிரை, மணிக்குச் சராசரி பத்து அல்லது பன்னிரண்டு மைல் ஓடும். தண்டவாளத்தின் மீது இயங்கும் புகை வண்டித் தொடர், மணிக்கு ஐம்பது மைல்

முதல் அறுபது மைல் தூரம் வரையிற்செல்லும். இவற்றை விட வேகமாகச்செல்லும் சக்தி வாய்ந்தது மோட்டார் வண்டி.

2. இக்காலத்தில் போக்குவரவுக்கான வாகனங்களுள் மிகவும் பயனுடையது மோட்டார் வண்டியே. இஃது இக்காலத்தில் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களுள் ஒன்றாய் விளங்குகிறது. தனவந்தர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு வேகமாய்ச் செல்ல வேண்டுவராயின் மோட்டாரை உபயோகிக்கின்றனர். ஏழை மக்களுக்கு மோட்டார்



பஸ் இவ்வேலையைச் செய்கிறது. வாணிகச் சரக்குகள் கொண்டு செல்வதற்கு மோட்டார் லாரிகள் பயன்படுகின்றன. போர் வீரர்களைக் கொண்டு போகவும், நோயாளிகளை ஏற்றிச் செல்லவும், வேறு பல தொழில்களுக்கும் இக்காலத்தில் மோட்டார்கள் பயன்படுகின்றன. இத்தகைய மோட்டார் வண்டிகளின் வரலாற்றைப் பற்றி அறிவது அவசியமன்றோ ?

3. நீராவி இயந்திரம் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திற் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் உதவியால் இருப்புப் பாதையின்மீது புகை வண்டியைச் செலுத்தும் முயற்சி நடைபெற்று வந்தது. நிக்கலஸ் கியூனே என்னும் பிரெஞ்சியர் ஒருவர், தண்டவாளமின்றி வெற்றுச்சாலையில் ஓட்டுவதற்காக நீராவி வண்டி ஒன்றைத் தயாரித்தார். அது மிகவும் விகாரமாயும், வேகம் குறைந்ததாயும் இருந்தது மன்றி, மணிக்கு இரண்டு மைல் வேகமே செல்லக் கூடியதாயுமிருந்தது.

4. அதன் பிறகு டிரெவிதிக்கு என்னும் ஆங்கிலேயர் ஒரு நீராவி வண்டியை உருப்படுத்திச் செலுத்த ஆரம்பித்தார். அப்போது நீராவி வண்டிகளே பெரும்பாலும் உபயோகிக்கப்படும் போலத் தோன்றியது. ஆனால், பதினெட்

டாம் நூற்றாண்டின் கடைசியில் டெய்ம்லர் என்னும் ஜெர்மானியர் ஒருவர், பெட்ரோலியம் என்னும் திராவகத்தின் சக்தியால்



ஓர் இயந்திரத்தை இயக்கும் முறையைக் கண்டு பிடித்ததுமன்றி, அவ் வியந்திரத்தைச் சாதாரண துவிச் சக்கர வண்டியில் இணைத்து மனித சக்தியின்றி அதைச் செலுத்தியும் காட்டினார். பிறகு கார்ல் பென்ஸ் என்னும் பெரிய மற்றொரு ஜெர்மானியர், மூன்று சக்கர வண்டி ஒன்றில் பெட்ரோல் இயந்திரத்தை இணைத்து, இயக்கிக் காட்டினார். அதுவே முதன்முதல் தோன்றிய மோட்டார் என்று கூறலாம்.

5. மேற்கூறப்பட்ட டெய்ம்லரும், பென்ஸும் ஒன்று கூடி, நான்கு சக்கரங்களை யுடையவையும் பெட்ரோலின் சக்தியால் இயங்கக் கூடியவையுமான பற்பல மோட்டார்களைச் செய்து, மக்கள் வியக்குமாறு செலுத்திக் காட்டினர். அம்மோட்டார் வண்டிகளுக்குப் பிரான்ஸ் நாட்டில் ஆட்டோ மோபைல் என்னும் பெயரே வழங்கி வந்தது. மோட்டார் என்னும் பெயர் இங்கிலாந்திலேதான் முதன் முதல் வழங்கப்பெற்றது.



6. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் 1000 மைல் மோட்டார்ப் பந்தயம் ஒன்று நடைபெற்றது. ரோல்ஸ் என்னும் இருபத்து மூன்று வயதினரான இளைஞர் ஒருவர் அதில் வெற்றி பெற்றார். அவர் இங்கிலாந்தில் மோட்டார் தொழிற்சாலை ஒன்றைத் தோற்றுவித்தார்.

அவர் மோட்டார் இயந்திர நுட்பங்களை நன்குணர்ந்திருந்த ராய்ஸ் என்பவருடைய துணையையும் பெற்றார்; ராய்ஸ் உயர்ந்த முறையில் மோட்டார்களை அமைக்கவும், ரோல்ஸ் அவற்றை மோட்டார்ப் பந்தயத்தில் செலுத்தி வெற்றி பெறவும் அவர்களுடைய 'ரோல்ஸ்-ராய்ஸ்' மோட்டார்த் தொழிற் சாலையும், அதனின்று போந்த மோட்டார்களும் உலகப் பிரசித்தியடையலாயின. இக்காலத்திலும் 'ரோல்ஸ் - ராய்ஸ்' என்னும் பெயரிய மோட்டார்கள், உலகிலேயே பெருமதிப்-பும் விலையும் உடையவை எனக் கருதப்படுகின்றன.



ஹென்றி போர்டு

7. சிறிது காலத்துக்குப் பின் மாரிஸ், ஆஸ்டின் என்னும் ஆங்கிலேயரும், ஹென்றி போர்டு என்னும் அமெரிக்கரும் மோட்டார்த் தொழிற்சாலைகளை நிறுவிப் பற்பல மோட்டார்களைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இக் காலத்தில் பிரான்ஸ், ஜெர்-மனி முதலிய பல நாடுகளில் மோட்டார் இயந்திர சாலைகள் நிருமாணிக்கப்பட்டு, மாதந்-தோறும் ஆயிரக் கணக்கில் மோட்டார்கள் உற்பத்தி செய்-யப்படுகின்றன.

பயிற்சி

1. விடை தருக:—

1. மோட்டார் வண்டிகளின் பிரயோசனங்கள் எவை?
2. நிக்கலஸ் கியூனோ கண்டுபிடித்த இயந்திரம் யாது ?
3. முதன்முதல் தோன்றிய மோட்டார் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது? அஃது எவ்வாறு இருந்தது?
4. 'ரோல்ஸ்-ராய்ஸ்' என்னும் பெயர் உள்ள மோட்டாரின் வரலாறு யாது ?

5. இக்காலத்தில் மோட்டார் எந்தெந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன?

*II.* வாக்கியங்களில் அமைக்க:—

சக்திவாய்ந்த, போக்குவரவு, தனவந்தர், பயன்படுகிறது, வரலாறு, தொடக்கம், உருப்படுத்தி.

*III.* 1. 6–ஆம் பத்தியில் உள்ள முதல் இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.

2. அதே பத்தியில் உள்ள 5-ஆம் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக்குக.

### இலக்கணம்

#### இடைச்சொல்

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் போலத் தனித்து வராமல் அவைகளை அடுத்து வரும் சொல்லே இடைச்சொல்லாம்.

வேற்றுமை உருபுகளும், சுட்டெழுத்துக்களும், வினாவெழுத்துக்களும், இடைநிலைகளும், மற்று, தான், இனி, உம், ஓ என்பன முதலியனவும் இடைச்சொற்களாம்.

உதாரணம்: மோட்டாரைப் பார்—ஐ—இடைச்சொல்
அம்மனிதன் —அ— ,,
அவனா சொன்னான்?—ஆ— ,,

#### உரிச்சொல்

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் போலத் தனித்து வராமல், அவற்றை அடுத்து அவற்றின் குணத்தை உணர்த்தும் உரிமை உடையதாய் வரும் சொல்லே உரிச்சொல்லாம்.

உதாரணம்: நனி பேதை—(நனி—மிகவும்)
சால உண்டான்—(சால—மிகவும்)

## 27. ஆஸ்திரேலியாவின் அற்புதங்கள்

1. உலகத்தில் உள்ள கண்டங்களுள் மிகச் சிறியது ஆஸ்திரேலியா. ஆனால் இது தீவுகளுள் மிகப் பெரியது. இது பூமத்திய ரேகைக்கு முற்றிலும் தெற்கே அமைந்திருப்பதால் இதற்குத் தென்கண்டம் என்று பொருள்படும் ஆஸ்திரேலியா என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கண்டத்திலும் பற்பல இயற்கை விநோதங்களும், செயற்கை

விநோதங்களும் காணப்படுகின்றன. ஆஸ்திரேலியா வில் செயற்கை விநோதங்கள் மிகச் சிலவே; எனினும் இயற்கை விநோதங்கள் எத்தனையோ உண்டு.

2. வழிநீர்க் கிணறுகள்: பூமியின் கீழ்ச் சில இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கும். இதற்கு வழிநீர்த் தேக்கம் என்பது பெயர். இத்தேக்கத்துக்கு நேர் மேலேயுள்ள பாறைகளைத் துளைத்தால், கீழே உள்ள நீர், மேல் நோக்கிப் பொங்கி எழும். இதுவே வழிநீர்க் கிணறு எனப்படுவது. ஆஸ்திரேலி யாவில் இத்தகைய வழிநீர்க் கிணறுகள் பல உண்டு. இவை மழை குறைந்த பகுதிகளுக்குத் தண்ணீர் வசதி அளிக்கின்றன.

3. பவழப் பாறைகள்: வெப்ப மண்டலத்தில் உள்ள கடல்களில் ஆழம் குறைந்த இடங்களில் பவழப் பூச்சிகள் வசிக்கும். இவை மரித்த பின் இவற்றின் சிற்றுடல் சுண் ணாம்புப் பாறைகளாகி, நாளடைவில் இறுகிப் பவழப் பாறைகளாக மாறும். இவை அழகிய பல நிறங்களோடு காணப்படும். ஆயினும், இவற்றுள் வெண்மை, சிவப்பு நிறப்பாறைகளே அதிகமாயுள்ளன. இப்பாறைகள் நாள டைவில் நீர் மட்டத்துக்கு மேல் உயர்ந்து விடுமாயின், இவற்றின்மீது தாவரங்கள் தோன்ற ஆரம்பிக்கும். ஆஸ் திரேலியாவின் வட கிழக்கிலுள்ள கடலில் இத்தகைய பாறைகள் ஓராயிர மைல் தூரம் வியாபித்துள்ளன. இவை ஆங்கிலத்தில் 'கோரல் ரீப்' எனப்படும்.

4. உப்புப் புல்: உப்புக்கரிக்கும் தன்மையுடைய ஒரு வகையான புல் இக்கண்டத்தில் வளர்கின்றது. இது தொடர்ந்து சில ஆண்டுகள் மழை பெய்யாதிருந்தாலும், தீய்ந்து விடாமற் பிழைத்திருக்கும். இதை இங்குள்ள ஆடு கள் மேய்ந்து பிழைக்கின்றன. இத்தகைய புல் மற்றக் கண்டங்களிற் காணப்படவில்லை.

5. எரி மலர்: ஆஸ்திரேலியாவின் வட பாகத்திலும் கிழக்குப் பாகத்திலும் மழை அதிகம். ஆதலால் அங்குத் தாவரங்கள் நிரம்ப உண்டு. அங்குச் சில மரங்களில் சிவப்பு மஞ்சள் நிறங்களைக்கொண்ட மலர்கள் மிகுதியாய்க்காணப் படும். இவை தூரத்தில் உள்ளார்க்கு நெருப்புப் பிடித்து

எரிவது போலத்தோன்றும். எனவே, அம்மரங்களுக்கு எரி மரங்கள் என்றும், அம்மலர்களுக்கு எரிமலர்கள் என்றும் பெயர்கள் வழங்கப் பட்டுள்ளன.



பிளாடிபஸ்

6. விலங்கினம்: உலகில் வேறெங்கும்காணப்படாத சில விலங்குகள் இக்கண்டத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் பிளாடிபஸ் என்பது மிகவும் விநோதமான பிராணி. இது வாத்தலகைப் போன்ற அலகும் அதன் பாதம் போன்ற பாதங்களும் உடையது; உடலில் உரோமம் நிறைந்தது; பறவைகளைப்போல முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்;



கங்காரு

ஆனல், அவற்றைப் பால்கொடுத்து வளர்க்கும். நடப்பன, பறப்பன, நீர் வாழ்வன ஆகிய மூன்றின்-தன்மை

களும் ஒருங்கே அமையப்பெற்ற இம்மிருகம், வெகு விசித்திரமான தன்றே! உடலில் பை அமைந்த விநோதப்பிராணிகள் பல இங்குண்டு. அவற்றுள் முதன்மையானது கங்காரு. இது தன் குட்டிகளை வயிற்றின் புறத்தே அமைந்துள்ள பையில் தாங்கிச் செல்லும். குட்டிகள் வளர வளர, இப்பையும் வளருமாம். எச்சிட்ந என்பது ஒரு வகைப் பிராணி. இதன் உடல் முள்ளம் பன்றி உடல்போல முட்களால் மூடப்பெற்றிருக்கும். இது மூஞ்சூற்றின் முகம் போன்ற முகம் உடையது. கோலா என்னும் ஒரு வகைக் கரடி இங்கு உண்டு. இது சாதாரணக் கரடிகளைவிடச் சிறியது; எப்போதும் மரங்களில் வசிக்கும் வழக்கம் உடையது. பறக்கும் அணிலும், குழிமுயலும் இக் கண்டத்தில் விசேஷம்.



கோலா

7. பறவைகள் : ஆஸ்திரேலியாவில் பெரியவையும் சிறியவையுமான பல விநோதப் பறவைகள் இருக்கின்றன. ஈமு என்னும் பறவை மிகப் பெரியதாய் இருக்கும். இது தென்னுப்பிரிக்காவில் உள்ள நெருப்புக்கோழி போன்றது. இதன் உடலில் சிறுசிறகுகள் இருப்பதால், இது பறவை என்று கூறப்படுகிறது. ஆனல் அப்பெயருக்கேற்ப இதனிடம் பறக்கும் தன்மை இல்லை. சுமார் ஆறடி உயரம் உள்ளது இது; முதுகில் இரண்டு மனிதரைச் சுமந்து கொண்டு வேகமாக ஓடும் இயல்புடையது.



ஈமு

8. நமது நாட்டு மயில் போன்றஒருபறவை இக்கண்டத்தில் உண்டு. அதற்குலயர் என்பது பெயர். அதன்தோகை

'யாழ்' என்னும் இசைக் கருவியைப் போன்றிருக்கும் அப் பறவை இனிமையாகப் பாடுமாம்.


சிரிக்கும் ஆண் கழுதை

'சிரிக்கும் ஆண் கழுதை' என்பது இக்கண்டத்திற் காணப்படும் ஒரு விசித்திரப் பறவை. அது கூச் சலிடுவது, சிரிப்பதுபோல இருக்கும். பாய்ந்து பாய்ந்து செல்லும் பாய்ச்சல் நாரையும், பஞ்சவர்ணக் கிளியும் இங்கு மிகுதியாய் வாழ்கின்றன.

9. ஊர்வன: ஆஸ்திரேலியாவில் ஊர்ந்து செல்லும் பிராணிகள் பல உண்டு. அவற்றுள் கோனு என்பது ஒன்று. அஃது ஓணன் போன்றது. சிறிது தூரத்தில் முதலைகள் வந்தால் அவற்றின் வருகையை அஃது எளிதில் அறிய வல்லது. உடும்பு போன்ற மானிடார் என்னும் பிராணியும் குறிப்பிடத்தக்கது.

10. நீர்வாழ்வன: நீரில் வாழும் பிராணிகளும் பல உண்டு. அவற்றுள் முக்கியமானது கடற்பசு. அது திமிங்கிலத்தைப் போன்றது; கடற்கரையில் வளரும் புற்பூண்டுகளைத் தின்று ஜீவிப்பது.

11. ஆயுதம்: ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த பூர்விக மக்கள் மிகவும் அநாகரிகர்களாயினும், அவர்களால் கையாளப்பட்ட கருவியொன்று மிகவும் விசித்திரமானது. பூமராங்கு என்பது அதன் பெயர். அவ்வாயுதம் ஒரு குறியின்மீது எய்யப்பட்டால், அஃது அக்குறியை அடைந்த பின், எய்யப்பட்ட இடத்துக்கே வந்து சேரும். இது விநோதமன்றோ!

### பயிற்சி

1. விடை எழுதுக:—
   1. ஆஸ்திரேலியாவுக்கு அப்பெயர் வழங்கக் காரணம் யாது?
   2. 'வழிநீர்க் கிணறுகள்' என்பவை யாவை?
   3. 'கோரல் ரீப்' என்பது யாது? அஃது எவ்வாறு உண்டாகிறது?

4. மிருகங்களுள் மிகவும் விசித்திரமானவை எவை?
5. பறவைகளுள் மிகவும் விசித்திரமானது எது?
6. 'பூமராங்கு' என்பது என்ன?

*II.* வாக்கியங்களில் அமைக்க:—

முற்றிலும், இயற்கை, செயற்கை, விநோதம், வசதி, ஒருங்கே, விசித்திரம், எய்ய.

*III.* 1. 6-ஆம் பத்தியில் உள்ள முதலிரண்டு வாக்கியங்களையும் சேர்த்து எழுதுக.

2. 9-ஆம் பத்தியில் உள்ள வாக்கியங்களை ஒரே வாக்கியமாக்குக.

### இலக்கணம்

#### சொற்றொடர்

சொற்றொடர் (சொல்+தொடர்)—சொற்களினது தொடர்பு. அதாவது, சொற்களினது சேர்க்கை என்பது பொருள். தொடர் மொழி என்பது சொற்றொடர் என்பதற்கு வழங்கும் வேறு பெயர்.

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் தந்து நிற்பது சொற்றொடர் எனப்படும்.

சொற்றொடர் இரண்டு வகை. அவை எச்சச் சொற்றொடர், முற்றுச் சொற்றொடர் என்பன.

#### எச்சச் சொற்றொடர்

பொருள் முடியாமல் நிற்பது எச்சச் சொற்றொடர்.

உதாரணம்:—விநோத விலங்கு, பண்டை நாள், முதலை வருவதைக் கண்டறியும் சக்தி

குறிப்பு:—இவை தம் பொருள் முடிதற்கு வேறு சொற்களை வேண்டி நிற்கும் தன்மை உடையவை என்பதை அறிதல் வேண்டும்.

## 28. பெரியதும் சிறியதும்

1. உலகில் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருள்கள் எண்ணற்றவை. அவற்றுள் ஒவ்வோரினத்திலும் மிகப் பெரியவையும் மிகச் சிறியவையும் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி நன்கு அறிந்த அறிஞர் பலர், தாம் கண்டவற்றை நூல்கள் வாயிலாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் வெளியிட்டுள்ளனர். அவற்றுள் சில ஈண்டுத் தரப்பட்டுள்ளன.

### மரம்

2. உலகத்திலேயே மிகப் பெரியமரம் வட அமெரிக்காவில் உள்ள காலிபோர்னியா மாகாணத்தில் இருக்கிறதாம். அதன் உயரம் 270 அடி. அது நாற்பது லட்சம் பவுண்டு எடையுள்ளது. அதற்கு 'ஜெனரல் ஷெர்மன்' என்னும் பெயர் வழங்குகிறது.

3. பூவுலகில் மிகச் சிறிய மரம் 'குள்ளன் வில்லோ' என்பது. இது மலைகளின் மீது வளரும். இது வளரும் இடங்களில் வேறு மரங்கள் வளரா. பூரண வளர்ச்சிக்குப் பின் இது மூன்று அங்குல உயரந்தான் இருக்குமாம்.

### மலர்

4. உலகத்திலேயே மிகப் பெரியமலர் சுமத்திரா, ஜாவா என்னும் தீவுகளில் காணப்படுகிறதாம். அமோர்போபாவஸ் என்பது அப்பூவின் பெயர். அம்மலர் வட்டத்தின் குறுக்களவு சுமார் எட்டு அடியும், உயரம் சுமார் பதினைந்து அடியும் இருக்கும். அப்பூஞ்செடியின் இலைகள் அத்துணை பெரியவை அல்ல. அன்றியும், அவை மலர் தோன்றிய பின்னர்த்தான் தோன்றும்.

5. பூமியின்கண் காணப்படும் பூக்களில் மிகச்சிறியவை 'வாத்துக் கோரை' என்னும் செடியில் உற்பத்தியாகின்றன. அவை ஊசி முனையைவிட மிகச் சிறியவையாம். மலர்களின் நிறம் மஞ்சள் கலந்த பசுமை. அவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நடுப்பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் உள்ள சலனமற்ற நீர்ப் பரப்புக்களில் வளர்கின்றன. வாத்துக்கள் மிக விரும்பி உண்ணுவதால், அச்செடிக்கு 'வாத்துக் கோரை' என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

### பறவை

6. பூதலத்தில் காணப்படும் பறவைகளில் மிகப் பெரியது ஆப்பிரிக்கப் பாலைவனத்தில் திரியும் தீக்கோழியே. இதன் சராசரி உயரம் எட்டு அடி. இதனல் பறக்க முடியாது. ஆனல், இது குதிரையைவிட வேகமாய் ஓடும். சாதாரணமான நாட்டுக் கோழி முட்டைகள் இருபதை ஒன்று சேர்த்தால், ஒரு தீக்கோழியின் முட்டைக்குச் சமமாகும்.

7. மிகச் சிறிய பறவையின் நீளம் மூன்றே அங்குலந்-தான். காலியோப் ரீங்காரப் பறவை என்பது இதன் பெயர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதன் இருப்பிடம். இது மிகவும் இலேசானது. இதனுல் நடக்க முடியாது. ஆனுல், எத்திசையிலும் பறக்கக் கூடிய சக்தி வாய்ந்த இறக்கைகள் இதற்கு உண்டு. மலரில் உள்ள மதுவே இதன் உணவு. இது சில சமயங்களில் பூக்களில் உள்ள பூச்சிகளையும் தின்னும். ஓர் அவுன்ஸ் எடையில் ஏழில் ஒரு பங்குதான் இப்-பட்சியின் எடை. இதன் முட்டை இதன் எடையில் பத்தில் ஒரு பங்கு என்று கூறப்படுகிறது.

பாம்பு

8. பாம்புகளில் உலகிலே மிகப் பெரியவை ஆசியா-வில் காணப்படும் மலைப்பாம்புகளே. அவற்றின் சராசரி நீளம் 20 அடி. ஆயினும், 32 அடி நீளமுள்ள பாம்புகளும் உண்டு. அப்பாம்புகள் ஓராண்டில் முப்பது தடவைக்குமேல் இரை கொள்வதில்லை. ஓராண்டில் ஓராயிர முறை சாப்பிடும் மக்களுக்கு இஃது ஆச்சரியமாகத்தானிருக்கும். பிடித்து வளர்க்கப்பட்ட பாம்பொன்று ஓராண்டளவும் ஒன்றுமே தின்னுமல் ஜீவித்திருந்ததாம். இது மிகவும் விந்தையே எனினும், பாம்புகள் வாயு பக்ஷணிகள் என்பதை அறிந்த-வர்களுக்கு இஃது ஆச்சரியத்தை விளைக்காது.

9. பாம்புகளில் மிகச் சிறியது புழுவைப்போல இருக்-கும். அது செழிப்பற்ற மணற்பாங்கான இடங்களில் வசிக்-கும்; பெரும்பாலும் தரைக்கு மேலே வருவதில்லை. அதன் நீளம் நாலங்குலத்துக்கு மேல் இராது.

மீன்கள்

10. மீன்களுள் மிகப் பெரியவை சுரு மீன்களே; அவை சராசரி 50 அடி நீளம் உள்ளவையெனினும், 60 அடி நீளம் உள்ளதொன்றும் பிடிக்கப்பட்டதாம். அது 13 டன் எடை இருந்ததாம்.

11. மிகச்சிறிய மீன்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள பூகி என்னும் ஏரியிலே காணப்படுகின்றன. ஒரு மீனின் நீளம் ஓர் அங்குலத்தில் எட்டில் மூன்று பங்கே,

இம்மீன்கள் பதினாயிரம் சேர்ந்தால், ஒரு பவுண்டு நிறை இருக்குமாம். இவை மிகுந்த ருசியுள்ளவை என்று கூறு-கிறார்கள்.

(இஃது ஓர் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)

## பயிற்சி

*I.* விடை தருக :—

1. மரங்களுள் மிகப் பெரியதும், மலர்களுள் மிகப்பெரியதும் எங்குள்ளன?
2. பறவைகளுள் மிகச் சிறியது எது? அதைப் பற்றிய விசித்திரம் யாது?
3. மலைப்பாம்பு ஓராண்டில் முப்பது தடவைக்கு மேல் உணவு கொள்ளாமைக்குக் காரணம் என்ன?
4. மிகச் சிறிய மீன்கள் எங்குக் காணப்படுகின்றன? அவற்றின் நீளம் எவ்வளவு?

*II.* பொருள் தருக :—

இறைவன், தோற்றுவிக்கப்பட்ட, அறிஞர், ஈண்டு, அருகி, அத்துணை, பெரியவை, சலனமற்ற நீர்ப்பரப்பு.

*III.* வாக்கியங்களில் அமைக்க :—

எடை, பூரண வளர்ச்சி, குறுக்களவு, பசுமை, மிகவிரும்பி, இலேசானது, இரைகொள்ள, மணற்பாங்கான.

## இலக்கணம்

### முற்றுச் சொற்றொடர்

பொருள் முடிந்து நிற்கும் சொற்றொடரே முற்றுச் சொற்றொடராம். வாக்கியம் என்பது இதற்கு வேறு பெயர்.

உதாரணம் :— 1. மரம் வளர்ந்தது.

2. உனக்கு இது தெரியுமா?

குறிப்பு :— இவை பொருள் முடிந்து நிற்கின்றன. எனவே இவை முற்றுச் சொற்றொடர்களாம்.

# செய்யுட் பாடம்

## I. அறவுரை

### 1. நீதி வெண்பா

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்; கடின
வன்மொழியி னாலிகழும் மண்ணுலகம்;—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது? கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று? 1

ஈக்கு விடந்தலையி லெய்தும்; இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 2

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்; ஆன்றமைந்த
முற்றுணர்வோ ரொன்றும் மொழியாரே;—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே; விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ ஒலி? 3

மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்
தந்திரமும் ஞானந் தருமுறையும்—யந்திரமும்
மெய்யெனில் மெய்யாய் விளங்குமே; மேதினியில்
பொய்யெனில் பொய்யாகிப் போம். 4

பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே;—பொற்கொடியே!
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபயன்?
ஒன்றமையா தோகரிக்கிங் கோது.

### 2. நன்னெறி

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம்;—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 1

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்;—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 2

'கடலே அனையம்யாம் கல்வியால்' என்னும்
அடல்ஏ(று) அனையசெருக்(கு) ஆழ்த்தி விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 3

உள்ளங் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. 4

தங்குறைதீர்(வு) உள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 5

இல்லானுக்(கு) அன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்துமவற்(கு) என் செய்யும்?—நல்லாய்!
மொழியிலார்க்(கு) ஏது முதுநூல் தெரியும்?
விழியிலார்க்(கு) ஏது விளக்கு? 6

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய் (து)
அதிர்வளையாய்! பொங்கா (து) அழற்கதிரால், தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். 7

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்;—எழுத்தை
ஆயும் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. 8

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்;—அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைவிக்கும் வலியனதாம் மென்று. 9

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்;—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான்; எட்டிபழுத்(து)
ஆயினும் ஆமோ? அறை. —சிவப்பிரகாசர் 10

## 3. இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா;
கடுமொழி யாளர் தொடர்(பு)இன்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 1

எருதில் உழவர்க்குப் போகீரம் இன்னா;
கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா;
திருவுடை யாரைச் செறல்இன்னா; இன்னா
பெருவலியார்க்(கு) இன்னா செயல். 2

சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா;
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுகல் இன்னா;
முறையின்றி ஆளும் அரசின்னா; இன்னா
மறையின்றிச் செய்யும் வினை. 3

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா;
நாற்றம் இலாத மலரின் அழகின்னா;
தோற்றம் இலாதான் துணி(வு) இன்னா; ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. 4

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா;
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப்போக்(கு) இன்னா;
அருளில்லார் தங்கட் செலவின்னா; இன்னா
பொருளில்லார் வண்மை பரிவு. 5

மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா;
துணிவிலார் சொல்லும் தறுகண்மை இன்னா;
பணியாத மன்னர் பணிவின்னா; இன்னா
பிணியன்னார் வாழும் மனை. 6

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா;
கண்ணில் ஒருவன் வனப்பின்னா; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு. 7

குலத்துப் பிறந்தவள் இல்லாமை இன்னா;
நிலத்திட்ட நல்வித்து நாறாமை இன்னா;
நலத்தகையார் நாணாமை இன்னா; ஆங் கின்னா
கலத்தல் குலமில் வழி. 8

நட்டார் இடுக்கண்கள் காண்டல் நனிஇன்னா;
ஒட்டார் பெருமிதங் காண்டல் பெரிதின்னா;
கட்டில்லா மூதூர் உறைவின்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினாற் சூது. 9

பெருமை யுடையாரைப் பீடழித்தல் இன்னா;
கிழமை யுடையாரைக் களைந்திடுதல் இன்னா;
வளமையி லாளர் வனப்பின்னா! இன்னா
இளமையுள் மூப்புப் புகல். —கபிலர் 10

## II. சதகத் திரட்டு

சேற்றிற் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்;
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத்(து) அரசரது
தேகத்தின் மேலிருக்கும்:

போற்றியிடு பூச்சியின் வாயின்நூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்;
புகலரிய வண்டெச்சி லானதேன் தேவர்கொள்
புனிதஅபி டேகமாகும்;
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு(கு) அனைவர்க்குமாம்;
சாதியீ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டமன்றோ?
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே! 1

கடுகடுத் தாயிரம் செய்குவதின் இன்சொலால்
களிகொண் டழைத்தல்நன் று;
கனவேள்வி ஆயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தோடு சொலாமைநன் று;
வெடுவெடுக் கின்றவோர் அவிவேகி உறவினின்
விவேகியொடு பகைமைநன் று;
வெகுமதிக ளாயிரஞ் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன் று;
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்குச்
'சற்றுமிலை' என்னல்நன் று;
சம்பத் துடன்பிணியில் மெலிகுவதின் நோயற்ற
தரித்திரம் மிகநன் றுகாண்;
மடுவினில் கரிமூல மென்னவந் தருள்செய்த
மால்மருக னமுதல்வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே! 2

குமரேச சதகம்] [குருபாத தாசர்

புண்ணிய வசத்தினல் செல்வமது வரவேண்டும்;
பொருளைரட் சிக்கவேண்டும்;
புத்தியுட னதுவொன்று நூருக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்;
உண்ணவேண் டும்;பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்கவேண்டும்;
உற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டும்;
மண்ணில்வெகு தருமங்கள் செய்யவேண் டும்;மோட்ச
வழிதேட வேண்டும்; அன்றி

வறிதிற் புதைத்துவைத்(து) ஈயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்;
அண்ணலே! கங்கா குலத்தலைவன் மோழைதரும்
அழகனெம தருமைமதவேள்
அனுதினமும் மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 3

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டும்; கற்ற
வழியிலே நிற்கவேண்டும்;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண் டும்; தேடி
வளர்அறஞ் செய்யவேண்டும்;
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்; பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டும்; கொண்டு
தியாகங் கொடுக்கவேண்டும்;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண் டும்; நாட்டின்
நன்ருய் நடத்தவேண்டும்;
நம்பனிணை அடிபூசை பண்ணவேண் டும்; பண்ணி
னுலுமிக பக்திவேண்டும்;
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அழகனெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 4

அறப்பளீசுர சதகம்] [அம்பலவாணக் கவிராயர்

தெள்ளமுத மனையகல் விப்பொருள்ப டைத்திடில்
தேசமெல் லாந்துதிக்கும்;
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கும்; இவையெல்லாம்
செம்பொன்மிகு செல்வமேபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை; கனலினுல்
வெம்பவரு சலனமில்லை;
வேந்தர்கள் பறித்திடக் கூடாது; சோதரர்
விரும்பினும் பங்குருது;
கள்ளரால் திருடவும் முடியாது; வரவரக்
கனமலாற் குறைவுருது;
கருணைஞா னந்தழையும்; அனுதினமும் உனையிதய
கமலத்தில் வைப்பதெளிதாம்;
வள்ளலென வருகின்ற மாடபூ சியரதிபன்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே! 5

திருவேங்கட சதகம்] [நாராயண பாரதியார்

# III. கதைப்பகுதி

## 1. தகா வரம் பெற்றுச் சாலியன் இறந்த கதை

சிந்தையில் சுவர்ண சித்தி
நிகழ்த்திய கதையைக் கேட்டே
"இந்தநற் கதைகேள்," என்றே
இயம்புஞ்சக் கரத ரன்றால் :
"நந்துறு தடங்கள் சூழும்
நாரண புரத்தில் வாழும்
மந்தர நாமன் தந்து
வாயன்வத் திரங்கள் நெய்வோன் 1

தறிமரம் முறித லாலே
தக்கநன் மரம்வெட் டற்குச்
செறிவனந் தன்னிற் சென்று
திரிந்தொரு மரத்தைக் கண்டு
முறிபட வெட்டு தற்கு
முயலும்போ ததன்மேல் நின்ற
அறிவுறும் இயக்கன் நோக்கி
அவனோடு மொன்று சொல்வான் : 2

'இந்தவென் னிடத்தை வெட்டா
யென்னில் நீ இச்சை கொண்டு
வந்தநல் வரம் ஈ வேனன்,'
என்றனன்! மகிழ்ந்து மீண்டு
நந்தலில் நட்பா யுள்ள
நாவிதன் தன்னைக் கேட்க,
'மந்திரி யாவேன் நான்; நீ
மன்னனும் வரங்கேள்,' என்றான். 3

"மனைவியோ டிதையு ரைக்க,
மற்றவள், 'அரசு பெற்றால்
கனவிடை யூறு மேவும்;
ஆதலாற் காத லா! நீ
இனமொரு தலையுங் கைகள்
இரண்டும்பெற் றுற்றா யானால்
தினமிரு தறிவிரித்துச்
செய்யலாம் வேலை.'' என்றாள். 4

"மாலையங் குழலாள் சொன்ன
வார்த்தையே நல்ல தென்று
சாலியன் சென்று பெற்றுத்
தன்னக ருற்றான்; கண்டோர்

றாலம்நேர் அரக்க னாமென்
றாளுக்கோர் கல்லைக் கொண்டு
மேலுற எறிந்தார்; செத்தான்!
மெய்விகா ரங்கொண் டோனே." 5

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

## 2. சிங்கத்தை முயல் வென்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னிற்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலா மொருங்கு கூடி, 1

ஆணிளஞ் சிங்க மே! உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினிற் றினமொன் றாக
ஊணுனக் களிப்போம் என்ன,
உண்மையாகக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்றா
அருந்தியங் கிருக்கும் நாளில், 2

தனிமுய லொன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
'இனியது விடாது நம்மை;
எனினுமோர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து
வென்றுநாம் உயர்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்து முய்யும்;
நமக்குநற் புகழுண்' டென்றே 3

கருதியச் சிங்கந் தன்னின்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன், 'நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை; பிந்தி
வருவதென்? உரை நீ' என்று
மனந்தனிற் சினந்து கூற, 4

'ஐய! நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன்; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன்;
பையவே சிங்க மாங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யவுன் பக்கல் வந்தேன்
சுவாமி! என் றிறைஞ்சி நிற்க, 5

'சிங்கம்நா மல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டுவா,' என்
றழைத்தலும் அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை யெட்டிப் பார்த்த(து);
அதனிழ லுருவந் தோன்ற, 6

தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளக்கியே யுயிரி ழந்த
தென்னலாம், உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாமென்
றின்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையுஞ் சொல்லும்.

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தண்ட தேவர்

## 3. கிருஷ்ணார்ச்சுன யுத்தம்

வீமர் அர்ச்சுனரும் விரைவாகத் தாமெழுந்து
நீண்டிடுங் கால்களுக்கு நெரிஞ்சுப்பூச் சல்லடமாம்
மண்டியிடுங் கால்களுக்கு மாதளம்பூச் சல்லடமாம்
குந்தியிடுங் கால்களுக்குக் குறிஞ்சிப்பூச் சல்லடமாம்
சல்லடங்கள் இட்டுமல்லோ தட்டி வரிந்துகட்டித்
தட்டி வரிந்துகட்டித் தாமரைப்பூச் சுங்குவிட்டே
அம்புவில்லுந் தாமெடுத்தே ஆயத்தப் பட்டார்கள்;
வடக்கு முனையிலே மதவீமன் வந்துநின்றான்;
தெற்கு முனையிலே தேர்விசயன் வந்துநின்றான்;
வருகின்ற பாளையங்கள் மண்ணும் விண்ணும் கொள்ளாமல்
ஆனை குதிரைரதம் அளவிலாச் சேனைகளும்
வருகிற சனங்கள்தமை மாயவனார் தாமழைத்துத்

திரியோ தனனுரைச் சேர வரவழைத்தே,
"உன்னுடைய சேனைகளை உரமுள்ள ராசர்களைச்
சமரது செய்யவந்த சமர்த்துள்ள மன்னர்களை
ஆனை குதிரைகளை அரசுமன்ன ருள்ளவரை
மாவணியைத் தேரணியை மற்றுமுள்ள ராணுவத்தை
உன்னுடைய பாளையத்தை ஒன்ருகவே கூட்டி
வடக்கு முகமதனில் மதவீமர் தம்மேலே
சண்டைபோய்ச் செய்க" என்று தாம்சொன்னுர், அப்
"தெற்கு முகமதனில் தேர்விசயன் தன்னருகே [போது;
என்னுடைய சேனைகள் எல்லோரும் போயெதிர்த்தே
அருச்சுனன் தன்னுடனே அமரது செய்திடுவோம்"
என்றே அனுப்பிவித்தார்; இயலான மாயவரும்
சங்கத்தைத் தாமெடுத்துச் சண்டைக்கு வாரோமென்று
ஊதினுர் சின்னமெங்கும் உலகத்தார் பாளையத்தில்
சண்டைசண்டை யென்றுசொல்லிச் சண்டைநகார் அடிபடுது;
ரணங்கள் ரணங்களென்று ரணபேரி யடிபடுது;
செந்தூளெழும்புவது தினகரனைக் கப்புறது;
கருந்தூளெழும்புவது கதிரவனைக் கப்புறது;
வந்தே எதிர்த்தார்கள் வாள்விசயன் தன்னுடனே
ஆணு லழகுமன்னன் அருச்சுனன் தன்னுடனே
வந்தே எதிர்த்தாரே மாயர் பெருமாளும்;
வில்வளைத்து நாண்பூட்டி வில்லைக்கு ணத்தொளித்தான்;
மார்புவரை தானிழுத்துத் தோள்புளர வாங்கிவிட்டான்;
பாணம் வரும்விதங்கள் பார்க்க முடியாது;
சொர்ண மழைபோலச் சொரிகின்றுர் பாணமதை;
சங்கரன் மாரிபோலச் சரமேல் சரம்விடுத்தார்;
அருச்சுனன் பின்னிடையான் அகோரச் சரம்பொழிந்தான்.
ஆகாயந் தன்னளவாய் அம்பாலே பந்தலிட்டுச்
சூரியனைத் தான்வளைத்தான் சூராதி சூரனவன்;
வில்பிடித்த கைத்தலத்தில் மெத்தச் சிவப்பேறும்
வளைத்தவில் நிமிராமல் மாரிச் சரம்பொழிந்தார்;
வாயுவி னஸ்திரமும் வருணஸ் திரமும்விட்டார்;
பின்னையும் அஸ்திரங்கள் பிரளயமாய்த் தாம்கொடுத்தார்;
நாலு கடிகைமட்டும் நல்லசண்டை பண்ணினுர்கள்;
ஒருவருக் கொருவர் உடைந்துபின் வாங்காமல்
சண்டை யிடுங்களத்தில் தருக்கிப் பொருதலுற்றுர்;
விலக்குவா ரில்லையங்கே மிகுந்த சமரதனை;
மாயர் பெருமாட்கு வருகுது கோபமெத்த;
என்றுமில்லாக் கோபம்அன்றங் கெழுந்தது மாயருக்கு;
விட்டபல பாணமெல்லாம் மட்டறுத்தான் வாள்விசயன்;

அருச்சுனனைக் கொல்லுதற்கு அரிராமர் கோபமதாய்ச்
சக்கரத்தைத் தாமெடுத்தார் சாமி பெருமாளும் ;
கொல்ல நினைவுகொண்டார் கோபாலர், அருச்சுனனை;
மந்திரத் தூபமிட்டு மாயவனு ரேதுசொல்வார்;
அருச்சுனன் தன்சிரசை அரைநொடியில் வாங்குகென்றுர்;
சுழற்றி யெறிந்தாரே சுவாமியும் சக்கரத்தை ;
சக்கரத்தை மந்திரித்துச் சாமியைக் கொல்லவென்றே
எடுத்தானே வில்விசயன் இமையோர்கள் தாம்நடுங்க;
அதைவாவென் றழைக்க வகையறியான் அருச்சுனனும்;
கண்டார் பெருமாளும் கனமோசம் வந்ததென் று;
'நாமல்லோ கற்பித்தோம் நல்விசய னர்ச்சுனற்கு?
சக்கரத்தை விட்டுவிட்டால் தானழைக்க வகையறியான் ;
சக்கரம் வந்ததானுல் தலையைத் தறித்திடுமே!
மோசம் வருகுதென் று மூகில் வண்ண ரேதுசெய்தார்;
தம்முடைய சக்கரத்தைச் சாமியார் தேரில்வைத்துத்
தேரைவிட் டிறங்கிவந்தார் ஸ்ரீகிருஷ்ணர் பொட்டேனவே;
கண்டானே அருச்சுனனும் கடுகி இறங்கிவந்தான்;
தேரைவிட்டுத் தானிறங்கி ஸ்ரீகிருஷ்ணர்க் கெதிரானுன்.
ஒருவ ருடனொருவர் உறவாடிக் கொண்டார்கள்.

பஞ்சபாண்டவர் வனவாசம்] [புகழேந்திப் புலவர்

## IV. தனிப்பாடல்கள்

மட்டாருந் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பாட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகம் பரிமளிக்கும் ;
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும்; சொன்னாலும் வாய்மணக்கும்;
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினறு
நளினந் தானே. 1

—படிக்காசுப் புலவர்

விறகு தறிக்கக் கறிந றுக்க
வெண்சோற் றுப்புக் கடகுவைக்கப்
பிறகு பிளவு கிடைத்ததென்றால்
நாலா றுகப் பிளந்துகொள்ளப்
பறகு பறகென் றேசொறியப்
பதமா யிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போனதுண்டோ !
எடுத்தீ ராயிற் கொடுப்பீரே.

— இராமச்சந்திரக் கவிராயர்

R27/1157


பொருந்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே யொளிம ழுங்கிடும் ;
மருத்துள தோவெனில் வாக டத்திலை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே. 3

—விவேக சிந்தாமணி

கம்பமத கடகளிற்றான் தில்லை வாழும்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெல்லாம் விழித்திருந்தார்; அயில்வேற் செங்கை
உடையஅறு முகவனுங்கண் ணீரா றானான்;
பம்புசுடர்க் கண்ணனுமே நஞ்சுண் டான்; மால்
பயமடைந்தான்: உமையுமுடல் பாதியானாள் ;
'அம்புவியைப் படைத்திடுவ தவமே!' என்றவ்
வயனும்அன்னம் இறங்காமல் அலைகின் றானே. 4

—காளமேகப் புலவர்

சோனையுங் காத்துநல் லானையுங் காத்துத் துரோபதைதன்
தானையுங் காத்தடைந் தானையுங் காத்துத் தடத்தகலி
மானையுங் காத்தனு மானையுங் காத்து மடுவில் விழும்
ஆனையுங் காத்தவ னே! என்னைக் காப்ப தரிதல்லவே! 5

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

கல்லால் அடியுறலால் கண்மூன் றிருப்பதால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்துச் சாமிமன்னா!
கள்ளிதழி யாகிகர்தேங் காய். 6

—அழகிய சொக்கநாதப் புலவர்

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. 7

—காளமேகப் புலவர்

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 13558

The Rajan Electric Press, Madras.